'திருத்தில்லை யமகவந்தாதி' யென்றதொரு நூல் அச்சிடப்பெற்றுளது. அதினின்றும் இத் 'தில்லை யமகவந்தாதி' வேறுயது. எனெனில் அஃது திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டதென 'மீனுட்சிசுந்தர வாரியன் * * * பன்னிப்புனைந்த வமலமலி தில்லை யமகவந்தாதியை' என்னும், அவரது மாணுக்கரான சுப்பராய செட்டியாரவர்களது சிறப்புப்பாயிரத்தால் தெரியவருகிறது. இதனுசிரியர் தெரியவில்லை.

R. No. 1475.

ஆனந்தருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி by கச்சியப்ப சுவாமிகள்.

ĀNANDARUDDIRĒSAR PADIṞṞUPPATTANTĀDI by Kacciyappa Suvāmikaḷ.

Foll. 8 (*b*)—17 (*b*). Extent, 345 granthas.

Restored from R. No. 3486.

Incomplete.

Beginning :

கச்சி.

ஆனந்தருத்திரேசர்.

பதிற்றுபத்தந்தாதி.

காப்பு.

முந்திமையோர் மதியாமை மூரிநெடுங் கடல் கடைய முனிந்துவல்லே
யந்திலமிழ் துயிரப்பியா தாலாலந்தோற்றியரவகநதைகாற்றுக
தந்தை வினைக் கூறழைந் திட்டுய்ந்த்துமல்லான் முதன்மை தனக்கே நாட்டு
மைந்தனைவண் காஞ்சிநக ரானந்த விநாயகனை வணக்கஞ்செய்வாம்.

நூல்.

மணிபூத்த மலர்த்தடமு மலர்பூத்த விணர்பொழிலு மருங்குசூழ்ந்த
வணிபூத்த காஞ்சி நகரானந்த ருத்திரேசத்து வாழும்
பணிபூத்த குரைகழற்றுட் பண்ணவனை பணிந்தேத்தும் பண்பு மிக்கோர்
பிணிபூத்த பெரும்பிறவிக் கடனின்று மானந்தப் பிறங்கல் சேர்வார்

* * * *

End :

இல்லையானமக்கென்றுவெறுக்கைமிக்
கெய்தி ளூர்களை யெண்ணியி ரங்கிநீ
யல்ல லிற்றுளே கின்றனை நெஞ்சமே
யவர்க ளோபண்டை நல்வினையாற்றினுர்
செல்ல லாம்வகை தீவினை முன்புநீ
செய்தொ ழிந்தனை தெய்வதக் காஞ்சியின்
மல்ல வானந்த ருத்திரேசத்தனை
வழுத்து மேலை வனத்தினை யாவையே. (௯௬)
ஆவதும் மழிவெய்தலும் பாலவே
யாவதற்குமெ கிழ்ச்சிதினைத்தலும்

* * * * * * * * * *

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 348 (b) நம்பர் பிரதியைப் பெயர்த் தெழுதி வைக்கப்பெற்றது. இப்பிரதியினின்றும் இதை இயற்றியவர் இவரெனத் தெளிவுற அறியமுடியாவிடினும் இதில் துதிக்கப்பெறும் 'ஆனந்த ருத்திரேசர்' என்னும் கடவுளைப் பற்றியே இயற்றப்பட்டிருக்கின்றதொரு 'ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது' என்னும் நூலைப்பாற்குமிடத்து அது தெளிவாகிறது. அந்நூலை இவரே இயற்றியுள்ளாரென்பதும் 'புகழ்க் கச்சியப்ப முனிவர் பெருமான் கருத்திஞேர்ந்து * * * ஆனந்தருத்திரேச்சுரர் கமலச் செழும்பூந்தாளில் * * * வண்டு விடு தூதென்றோ ரலங்கல் சூட்டினுஞல்' என்னும் அந்நூலின் சிறப்புப்பாயிரத்தால் அறியப்படும். இந்நூலின் தலையங்கத்தின் தலையில் கச்சி எனக் காணப் படுவதும் இதற்கொரு சான்றெனக் கொள்வலாம்.

R. No. 1476.

பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

PAŃCĀKKARA DĒSIKARANTĀDI.

Foll. 18 (a)—27 (a). Extent, 250 granthas.
Restored from R. No. 348c.
Incomplete.

பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

Beginning :

* * * *

* * * *

மெல்குந்திறமெனக்குள்ளதனுல் விளைகின்றவெல்லா
மொல்குந் திறமின்று காட்டினன் யானென தோடியதே. (கூ)

End :

உளநின்று காணி ஞெளிப்பனங்கேயெனுளமொழிப்பின்
வெளிநின்று காணப் படுவன் விரிகடற் றெள்ளமிழ்துந்
தெளிவுண்ட தேறலுங் கைப்பவென் சிந்தையெ லாமினிப்பன்
பளகறுத் தாண்டபஞ்சாக்கரநாத பசுபதியே. (கூ)

Colophon :

பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 348 (c) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பட்டதாகும். இயற்றியவரின்னுரென்பது இதினின்றும் விளங்கவில்லை.

R. No. 1477.

Paper. $10\frac{1}{4} \times 9\frac{1}{2}$ inches Foll. 326. Lines, 20 on a page, Tamil. Condition, good. New. Extent, 8,000 granthas.

Restored in 1943–44 from a MS. described under D. No. 2101.

நல்லாப் பிள்ளை பாரதம் by நல்லாப் பிள்ளை உரையுடன் (முதற்பாகம்).

NALLĀPPILLAI BHĀRATAM by Nallāppiḷḷai with commentary (Vol. I).

Foll. 1 (*a*)—153 (*b*). Extent, 3,750 granthas.

Incomplete.

Beginning :

ஹரி : ஓம் நன்றாக.

நீடாழி யுலகத்து மறை நாலொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை (தவறாத) முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வெங்கூரெழுத்தாணி தன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ. (க)

(உரை).—என்றது.

நெடியகடல் சூழ்ந்த பூலோகத்திலே நாலுவேதங்களுடனே இது ஐந்தாம் வேதமென்று * * * விக்கினேசுவரமூர்த்தியைத் தோத்திரஞ் செய்து வணங்குவாம் என்றவாறு. (க)

* * * *

Colophon :

கடவுள் வணக்க முற்றும்.

* * * *

Colophon :

அவையடக்க முற்றும்.

ஆகக் கடவுள் வணக்கமுட்படச் செய்யுள் ௰௬ கிருஷ்ண சகாயம்.

பாயிரம்.

* * * *

Colophon :

பாயிர முற்றும்.

* * * *

Colophon :

ஆற்றுச்சருக்க முற்றும்.

* * * *

நாட்டுச்சருக்கம்.

* * * *

Colophon :

நாட்டுச்சருக்க முற்றும்.

* * * *

நகரச்சருக்கம்.

* * * *

Colophon :

நகரச்சருக்க முற்றும்.

ஆகச்சருக்க மூன்றுக்குச் செய்யுள் ௱சயிரு.

கிருஷ்ண சகாயம்.

அரசியற் சருக்கம்.

அந்த மாநகரப் புரப்பவன ரசருக்கரசன்
சந்திரன் வழித்தோன்றல் செந்தாமரைமுகத்தோன்
வந்த மாற்றலர் நிணங்கமழ் கதிர்வடிவேலோன்
விந்தை தங்கிய வலங்கனும் விலங்கலம்புயத்தோன். (க)

(உரை) எ - து.

சூத மகாரிஷியானவர் * * * புயபலம் படைத்தவனென்றவாறு (க)

* * * *

End :

வியாதருற்பவச் சருக்கம்.

* * * *

வாட்டடங் கண்ணி நின்பால் மையலீற் சிறந்தேநின்னை
தீட்டிய தொய்யிருங்குஞ் செழுமூலத் தடத்திற்சேர்க்க
நாட்டுவை யெனவுமாது நாணொரு சிரம் வளைத்தே
தோட்டுவார் குழையாளிச் சொல்தூயருக் கியலோவென்றான். (௩௩)

(உரை) என்றது.

வாளைப்போலே கண்ணுள்ள பெண்ணே? * * * அந்த மச்சகந்தி யானவள் வெட்கப்பட்டுப் புன்சிரிப்புடனே தலைகவிழ்ந்துகொண்டு—

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2101-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இதில் ஆதிமுதல், ஆதிபருவத்து 27 சருக்கங்களுள் 11 ஆவதான வியாதருற்பவச் சருக்கத்தினது 33-ஆம் செய்யுள் வரைக்குமே உரை எழுதப்பட்டுள்ளது. அதன் உரையும் இதில் முற்றுப் பெறவில்லை. அதன் துடர்ச்சியை அடுத்துவரும் இரண்டாம் பாகத்தில் கண்டு கொள்ளவும்.

நல்லாப் பிள்ளை பாரதம் by நல்லாப் பிள்ளை உரையுடன் (இரண்டாம் பாகம்).

NALLĀPPILLAI BHĀRATAM by Nallāppillai with Commentary (Vol. II).

Foll. 154 (*a*)—326 (*b*). Extent, 4,250 granthas.

Incomplete.

Beginning :

பொருந்தவேணுமென்று கேட்டார். அப்போ அந்த மச்சகந்தியானவள் * * * உமக்கு இயலாமோ. வென்றாள் மச்சகந்தி யென்றவாறு. (௩௩)

கன்னியான் விரதத்திற்கசிந்தவ
ளென்ன நீர்மை யகற்றுதலேற்குமோ
பன்னு மேனி புலால் கமழ் பான்மைக் கண்
டென்னை நீ தொட்வேற்குமதோ வென்றாள். (௩௪)

(உரை) என்றது.

* * * *

End :

எயில்நலம்புனை கோபுரமாபுரத்
தெழுதுமாளிகைதோறும்
வெயில் நிலாவுமிழ் கனக நீள்வீதியில்
விலாசமுற்றிடுநாளிற்
பயினன்மேல் வருகல்லெனச் செறிந்த
மேய்ப்பவன்ன் மைந் தனுமொத்தாள்
வயின தேயனைக் காத்திரவேயரை
மன்னன் மைந் தரு மொத்தார். (கசுரு)

(உரை) - என்றது.

யாதவர் குலத்தவரெல்லாம் வந்து போன பிறகு * * * திருத ராஷ்டிர மகாராசன் புத்திரர்களும் ஒத்து வளர்ந்திருக்கிறார்கள் என்றவாறு. (கசுரு).

Colophon :

சம்பவச் சருக்கம் முற்றும்.
ஆக சருக்கம் உ௰
ஆக செய்யுள் தூ௱ரு௰.
ஸ்ரீகிருஷ்ண சகாயம்.
கணபதி சகாயம்.

பண்ட சோழ நல்லூரிலிருக்கும் வாத்தியார் கோமான் ஆதிபருவம் சம்பவச்சருக்கம். பாயிரமுதற்கொண்டு சம்பவச்சருக்கமட்டுக்கும் சருக்கம் உ௰ எழுதினது முற்றும்.

குருகிருபை உண்டாவதாகவும். ஸ்ரீராமஜெயம்.

(கு - பு.)—

இதுவும் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2101-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். முதற்பாகத்தில் முடிவடையாதுள்ள வியாத ருற்பவச் சருக்கத்து ௩௩-ஆவது செய்யுளின் உரைத்தொடர்ச்சி இதிலுள்ளது. ஆகவே அது தொட்டு சம்பவச் சருக்கம் இறுதியாயுள்ள பகுதிமட்டுமே இதில் உள்ளது. மிகுதியான வாரணவதச் சருக்கம் முதலான காண்டவ தகனச் சருக்கம் இறுதியான பத்து சருக்கங்கள் இல்லாமையின் ஆதிபருவம் இவ்வுரையுடன் முற்றுப்பெறவில்லை. உரை நடை நன்றாயிருக்கிறது. அதனாசிரியர் யாரெனப்புலப்படவில்லை. மூல பாடத்தில் அச்சுப்பிரதிக்கும் இதற்கும் சிலவிடத்து மாறுபாடு காணக் கிடக்கிறது.

R. No. 1478.

Paper. 10½ × 9½ inches. Foll. 10. Lines, 16 on a page. Tamil. Condition, good. Old. Extent, 200 granthas.

Restored in 1928-29 from a MS. described under R. No. 1197.

அகத்தியர் வாகடம் by அகத்தியர்.
AKATTIYAR VĀKAṬAM by Akattiyar.

Incomplete.

Beginning :

ஸ்ரீ:

அகத்தியர் வாகடம்.

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனி னுடிபார்க்கப்[கில்]
யொ[பொ]ருவிரல . . . டத்தில் . . . டித்துடனடுவே தொட்டால்
ஒருவிரலோடில் வாதமிரு விரலோடிற்பித்தந்
திரிவிரல் மூன்றிலோடில் சிலேட்டும நாடியாமே. (க)

* * * *

End :

பித்தத்திற் பித்தமாகில் பிதற்றிடுங் இறுகிறுக்கும்
சத்தியுந் தானுண்டாகும் தானறியாமலோடும்
சுற்றியபேயதாகும் சுழற்றிடும் வயிறு நோவும்
பித்தமே யெடுத்துக்கொட்டிப் பிடிறியுநோவதாமோ. (எங)

இதன் பின்னர் இந்நூலின் ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளமையால் எழுதவியலவில்லை.

(கு - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 1197-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். மூலப்பிரதியில் இந்நூல் அடிமுதல் நுனி வரையும் பூர்த்தியாகவிருந்தும் அது மிகச்சிதலுற்றுச் சிதைந்திருப்பதுபற்றி அதினின்றும் ஒன்று முதல் எழுபத்துமூன்று ஆன செய்யுள்வரைக்குமே இப்பிரதியில் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டுள்ளன. பெரும்பகுதி மிருந்துள் ளது. நூல் நடை மிக வெளியதாகவும் அரும் பெரும் விடயங்களை யெடுத் துரைப்பதாகவும் காண்கிறது. அகத்தியமுனிவராலியற்றப்பட்டது.

R. Nos. 1479–1483. (one codex).

Paper. 10½ × 9½ inches. Foll. 20. Lines, 20 on a page. Tamil. Condition, good. Old. Extent, 260 granthas.

Restored in 1930–31 from a MS. described under R. No. 269(*a*)—(*c*).

R. No. 1479.

லோகஸ்வரூபம்.

LŌKASVARŪPAM.

Foll. 1 (*a*)—10 (*b*). Extent, 100 granthas.

Restored from R. No. 269 (*a*).

Complete.

Beginning :

லோகஸ்வரூபம்

ஓம்

ஸ்ரீ ஜிநாயநம:

ஸ்ரீ வாகீஸ்வர்யை நம:

ஸ்ரீ குருப்யோ நம:

ஓம் தஞ்சைமாநகரம்.

ஸ்ரீ ஆதிநாதன் வாசிக்கின்ற லோகஸ்வரூபம் நவபதார்த்தம் ஸ்ரீ ரஸ்து

ஸ்ரீ ...நம:

புரந்தரரும் பூமிமேல் மாந்தர்களுமாங்கே
நிரந்தரம் வந்திரைஞ்சநேரின்—வரந்தருநல்
வாமனடி வணங்கி மன்னுமுலகியல்பை
நாம் வகை யுரைப்ப[ந]ணங்கு. (க)

* * *

End :

எழுகயறகன்றுமீ[ற]ரேழ்க[ய]யி
றுடர்ந்திடையிலொன்றாய்
முழுவென விடையிலேந்தாமுடி
யொன்றுயடியிலேழாய்
அழிவிலா வுலகிற்றேற்ற
மனந்தமாம் படிப்பதேச
மெழுவெனத் திரண்ட தோளாய்
யிறந்த[து]நாட்பிறந்த வெனருண. (எ௯)

Colophon :

லோகஸ்வரூபம் முற்றும்.

(கு - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 269 (a) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இயற்றினாரின்னாரெனப் புலப்படவில்லை.

R. No. 1480.

இரத்தினத்திரயம்.

IRATTINATTIRAYAM.

Foll. 11 (a)—17 (b). Extent, 130 granthas.
Restored from R. No. 269b.
Complete.

Beginning :

இரத்தினத்திரயம்.

குற்றங்களில்லான் குணத்தா னிறைந்தான் குணத்தான்
மற்றிந்த வையமளந்தான் வைய நின்ற பெற்றி
முற்றுமுணர்ந்தானுரையீரொன்புதாயதொன்றாற்
செற்றங்கடர்ப்பான் விமலன்சரண் சென்னிவைத்தேன்.

* * * *

End :

எழுதருபருதிமுன்னரிறைஞ்யக மலம் போலத்
தொழுதெதிர் முழுதுங்கேட்டு போய்நகர் துன்னிசுற்ற
முழுதையுமழைத்து முத்திக்கர்சனாய் முயல்வனென்று
பழுதிலாப் புதல்வன் றன்மேற் பாரவைத்தினைய சொன்னான். (சஉ)

* * * *

தோத்திரம்.

வானவிற்கடந்துமான . . . . வணங்கி வாழ்த்தி
மானதம் பத்தை யெய்தி வலங்கொண்டு பணிந்துபோகி
மானமெல்லார்க்கு மொத்து மலர்மலிகிடங்கு பின்னு
மான மில்லாத வல்லி வனத்திடை மலர்க்கை யேந்தி (௬)

* * * *

அமலமாயருள்சுரந்திட்டறிவரிய திருமூர்த்தி
விமலமாய் விரிந்த நாற்குணத்தலைமை விரிக்குமே
விமலமாய் விரிந்தநாற்குணத் தலைமை விரிந்தாலுங்
கமல மீதுலவுமுனைக் காதலிப்பாரரியரே. (௭)

(கு - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 269 (b) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இப்பிரதியில் 42-ஆம் செய்யுளுக்குப் பின்னர் 'இரத்தினத் திரயம் முற்றும்' என்றும் அதன் பின்பு 'ஸ்ரீ வர்த்த (ஜு—்) மானஸ்வாமி தோத்திரம்' என்ற தலையங்கத்தின்கீழ் 'வானவிற்கடந்து' என்றது முதலான 'காதலிப்பாரரியரே' என்ற ஈரான எ செய்யுட்களும் எழுதப்பெற்றுள்ளன. இந்த ஏழு செய்யுட்களும் வர்த்தமானஸ்வாமி விஷயம் என்பது இதனுல் தெளிவாகவில்லை. இரத்தினத் திரயத்தை உபதேசித்த ஶ்ராவகரொருவரை அவரிடமுபதேசம் பெற்ற வோரரசன் முடிவில் துதிசெய்ததாகக் கொள்ளலாம் எனத் தோற்றுகிறது. மூலப்பிரதியில் இவ்வாறு காணப்படாமல் 42-ஆம் செய்யுளுக்குப் பின்னர் 'ஸ்தோத்திரம்' என்றுமட்டுமே காணப்படுகிறது. அதுவும் இதற்கொரு சான்றெனக் கொள்ளலாம். இதுகாரணம்பற்றியே மூலப்பிரதியில் இப்பகுதியும் இத்துடன் சேர்க்கப்பட்டது போலும். மற்றும் 18 (a) என்னு மேட்டில் அந்தத் தோத்திரம் வருவதும் மற்ரோர் சான்று. இயற்றியவர் பெயர் முதலிய புலப்படவில்லை.

R. No. 1481.

வர்த்த(ஜு—்)மானஸ்வாமி ஸ்தோத்திரம்.

VARDHAMĀNASVĀMI STŌTTIRAM.

Foll. 18 (*a*)—19 (*a*). Extent, 20 granthas.

Restored from R. No. 269c.

Complete.

Beginning :

ஆதியாயுலகியல்பை அளித்தாய்நீயே
அருந்தவனுயறம் புகர்ந் தவறிவனீயே
காதியாய் மருவினையைக் கடிந்தாய் நீயே
கணமீருறடியேத்துங் கடவுணீயே
போதியாய்ப் பொருளனைவுமானுய் நீயே
பொறிவாகிலேந்தவித்த புனிதநீயே
சோதியாய் நிலவு குணச் செல்வனீயே
சிரிவர்த்த(ஜு—்)மானனென்னுந் தீர்த்தநீயே.

* * * *

End :

கருவான சிற்கணைய வல்லா(ய்) நீயே
கல்லியாண மைந்துடைய கடவுள் நீயே
மருவானபூம்பிண்டி மன்னனீயே
மறையோருநன்குரைத்த வன்ன நீயே
பெருவானமினிதாளும் பெம்ம னீயே
பெண்ணுருவுமாணுருவுமானாய் நீயே
திருமாலு நான்முகனு மானாய் நீயே
சிரீவர்த்த(ஊ—ி)மானனென்னுந் தீர்த்தனீயே. (௬)

Colophon :

ஸ்ரீ வர்த்த(ஊ—ி)மானஸ்வாமி தோத்திர முற்றும்.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 269 (c) நம்பர் பிரதியை பெயர்த்து எழுதப்பட்டதாகும். செய்யுட்கள் மிக வெளிதானவையாகவும் நன்றாகவு முள்ளன. இதன் பின்னர் 19 (b), 20 (a) ஏடுகளில் கெற்போட்டத்தைப் பற்றிய இரு செய்யுட்கள் எழுதப்பட்டுளன. அவற்றின் விளக்கமும் எழுதப்பட்டுளது. 20 (b) சும்மா விடப்பட்டுளது. ஆசிரியரின்னாரெனத் தெரியவில்லை.

R. No. 1482.

Paper. 10½ × 9½ inches. Foll. 308. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 10,456 granthas.

Restored in 1943–44 from a MS. described under R. No. 420.

இராமாயணவசனம் (முதற்பாகம்).

IRĀMĀYAṆAVACANAM (Vol. I).

Foll. 1—160. Extent, 6,400 granthas.

Incomplete.

Beginning :

இராமாயண வசனம்.

ஆதிகேசவனால் வேதனனந்தநாரணன் சீர்பாதம்
நீதியாலிரண்டுபோது நெஞ்சினிற்பதித்துப்போற்றி
மாதவர் முனிவர் தேவர் தேவ . . . ர் நேர்க்கிச்செய்த்
பாதகம் தம்மைக் கொல்லப்பத்தவ தாரமானார். (க)

* * * *

ராமாயண வரலாறு.

விருத்தம்.

இருக்குந் தான்வருத்தின் . . . யன்முனிவன் தன்னால்
அருக்கன் றன்குலம் அயோத்திமன்னன் தசரதராமன்
அரக்க ராவணன் நித்திரையான வச்சிரம்பால்சென்று
திருக்கைதந்த காப்புநல்லோர் முன்சென்றங்குறைக்கலுற்றே. (க)

* * * *

Colophon :

தைவ வணக்கம் முற்றும்.

* * * *

அவையடக்கம் சம்பூர்ணம்.

End :

* * * நிலத்தோடே அவன் பத்துவாயிலும் ரத்தங்கக்கத் தக்கதாக அமுக்கி அவனுடைய கோரத்தாடையிருபதும் முறித்து ஊற்றிலே சல யானம்

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 420-ஆம் நம்பர் பிரதியினதோர் பகுதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இராமன் தனது சேனைகளுடன் இலங்கையினுட் சென்றிருக்க இதனை தூதுவர்மூலமறிந்த இராவணன் இதை நோக்கும் பொருட்டு ஒரு மலைமீதேறி உயர்வானதொரு மண்டபத்தே வீற்றிருக்கும் தருணம் அடங்காக் கோபங்கொண்ட வீர சுக்கிரீவன் அவன் மீது பாய்ந்து போரிடும் பகுதிவரைக்குமேயுள்ளது. இதன் துடர்ச்சியை அடுத்துவரும் இரண்டாம் பாகத்தில் காண்க.

இராமாயண வசனம் (இரண்டாம் பாகம்).

IRĀMĀYAṆAVACANAM (Vol. II).

Foll. 161 (*a*)—308 (*a*). Extent, 4,056 granthas.

Complete.

Beginning :

" பண்ணுவதுபோலே அவனுடைய தாடையிலுள்ள ரத்தத்தைக் குடித்தான். குடிக்கச் சுக்கிரீவனுகிற வெள்ளிப்பொருப்பை அய்ந்தலை நாகமானது பற்றிப்பிடித்தாப்போலே அரக்கன் இருபது கையிலும் பிடித்து * * *

End :

* * * மகா அலங்காரத்துடனே ஸ்ரீ வைகுந்தம் சேர்ந்தாரென்றவாறு.

* * * *

Colophon :

* * * நடை ராமாயணம் எழுதிமுடிந்தது.

முற்றும்

சம்பூர்ணம்.

* * * *

(கு - பு.)—

இதுவும் மூவருடக் காட்லாக்கு 420-ஆம் நம்பர் பிரதியினது மற்றோர் பகுதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். முதற்பாகத்தின் துடர்ச்சியாய் முடிவுவரை முற்றுமுளது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 381-ஆம் நம்பர் பிரதியினின்றும் இது வேறுயது. 'கம்பராமாயண வசனம்' என அச்சிடப்பெற்றிருக்கும் பிரதியினும் இது வேறுயதே. இது பெரும்பாலும் வசனமும் இடையிடையே ஆங்காங்கு விருத்தப்பாவுமாக அமைந்துள்ளது.

ஆயினும் இதை ஆராயுமிடத்து விருத்தப்பாக்களியற்றிய வாசிரியர் வேருகவும், உரையாசிரியர் வேருகவும் இருக்கலாமெனத் தோற்றுகிறது. அதாவது ஒரே ஆசிரியன் இராம கதையைத் துடர்ச்சியாய் வசனத்திலும் பாவினுமாக எழுதாது முன்னமொரு வாசிரியனால் விருத்தப் பாக்களால் அமைக்கப்பெற்றதொரு நூலுக்கு அதை ஆதாரமாகக்கொண்டு அதற்கு உரை எழுதுவான்வேண்டி அவற்றுள் கூறப்பட்டதும் கூறப்படாததுமான பல விஷயங்களைத்தான் யிடையிடையே தொகுத்து அதன் இடையிடையே அப்பாக்களுள் சிலவற்றையும் எடுத்துக் கூறுமாறுபோல் தோற்றுகிறது. அத்தகைய விருத்தப்பாக்களை யியற்றிய வாசிரியர் பெயர் முதலிய விளங்காவிடினும் அவை வான்மீகியாலியற்றப்பட்ட வடமொழி இராமாயணத்தையும் கம்பநாடரால் இயற்றப்பட்ட தென்மொழி இராமாயணத்தையும் திடவலிரங்கனய்யன் என்பவரால் தெலுங்கு பாஷையில் இயற்றப்பட்டதொரு (ரங்கனாத ராமாயணம் என்று வழங்கப்பெறும்) தெலுங்கு ராமாயணத்தையும் தழுவி எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது கீழ்வருஞ் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

‘ வடகலை நூல் வால்மீகிர(ய)வர் வகுத்த தென்கலைச்சொற் கம்பன்
திடவலி ரங்கனய்யன் செப்பிய தெலுங்கின் மூன்றின்
அடவினுர்ச் சொல்லப்பட்ட ராமாவதாரஞ் செய்யுட்
டடவரைபுவியிற் கல்வி கற்றவன் தன்முன் சொல்வாம். (௩௨)

‘ பத்திருபத்திரண்டில் பகர்ந்ததோர் விருத்தந்தண்ணில் ’ என்னும் 33-ஆம் செய்யுளின் முதலடியை நோக்கின் இது 1022-ஆம் கொல்லம் ஆண்டில் இயற்றப்பட்டதாகவும் இருக்கலாமெனவும் தோற்றுகிறது. மற்றும் ‘ வருகையில் ராமனென்னும் சாகரமுட்கொள்வார்க்கு ’ என்னும் 4-ஆம் செய்யுளடியாலும் ‘இந்த ராமகதையினுட சாகரத்தில்’ என்னும் வசனத்தாலும் ‘ராமஸாகரம்’ அல்லது ‘ ராமகதாஸாகரம் ’ என்று அதற்குப் பெயரிட்டிருக்கலாமென்றும் ஊகிக்க இடமுண்டு. ஆகவே இத்தகையதொரு நூலுக்கு இவ்வசனம் உரையாகவமைத்துள்ளதெனக்கொள்வதுகூடும். வசன நடையும் அவ்வாறே இதை அறிவுறுத்துகிறது. ‘ என் புன் சொல்லினாலும் உரையெழுதினேனென்றவாறு’ என்னும் வசனமும் இதை வலியுறுத்துகிறது. உரையாசிரியன் யாரென்பதும் விளங்கவில்லை. அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை.

R. No. 1483.

Paper. 10½ × 9½ inches. Foll. 90. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 2,685 granthas.

Restored in 1943–44 from a MS. described under D. No. 2102.

வில்லிபுத்தூரார் பாரதம் by வில்லிபுத்தூர் ஆழ்வார் உரையுடன்.

VILLIPPUTTŪRĀR BHĀRATAM by Villipputtūrālvār with Commentaray.

Complete. Krishnatūduppatalam only.

கிருஷ்ண தூதுப்படலம்.

உரையுடன்.

ஹரி: ஓம்.

Beginning :

நீடாழியுலகத்தில் மறை நாலோடைந்து நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை தவமுதமுனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வெங்கூரெழுத் தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப்பணிந் தன்புகூர்வாமரோ.

என்பது நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்திலே வேதம்

* * * *

End :

வாழிவாழி குந்திமைந்தர் வலவன் வாழிவாழியே
வாழிவாழி யவனியுய்யவந்த நாதன் வாழியே
வாழிவாழி காளமேகவர்ணன் வாழிவாழியே
வாழிவாழி வாசுதேவர் வாழி வாழி வாழியே.

* * * *

சுவாமிநுதன் தூதுப்படலம் படித்ததென்றவாறு.

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2102-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதுவைக்கப்பெற்றதாகும். அச்சிட்ட மூலபாடத்திற்கும் இதினில் காணும் மூலபாடத்திற்கும் ஆங்காங்கு சிற்சிலவிடத்து மாறுபாடு காணக்கிடக்கின்றது. உரைநடை சுமாரானது. ஸ்ரீ கிருஷ்ண தூதுப்படலம் ஒன்றே இதனில் உள்ளது. முற்றுமிருக்கிறது.

R. Nos. 1484 to 1488 (one code).

Palm-leaf. 10 × 1½ inches. Foll. 129. Lines, 5–12 on a page. Tamil. Condition, good. Old. Extent, 2,740 granthas.

R. No. 1484.

அகத்தியர் பூரணசூத்திரம் (216) by அகத்தியர்.

AKATTIYAR PŪRAṆA SŪTTIRAM (216) by Akattiyar.

Foll. 1—39 (*a*). Lines, 8–12 on a page. Extent, 1,000 granthas.
Same work as that described under R. No. 177.
Complete.

Beginning :

ஹரி ஓம்.

நன்றுக.

அகத்தியர் பூரண சூத்திரம்.

கார்செறி மெய்யன் வெண்மைக் கடவுளுங் காணப்பாதம்
போர் பொருளுண்மை தன்னைப்பூரண நூலிலோதத்
தார் செறி கொன்றை சூடித் தையலைப்பாகம்வைத்த
பேர் புகளானீன்ற கந்தன் பிள்ளையார் காப்புத்தானே. (க)

ஒன்றுன பூரணமு மாறுதார
முரைப்பதற்கு மேலான தொண்ணூற்றுறு

* * * *

நலமான சவுக்காரத் திறவுகோலே. (உ)

* * * *

End :

ஆமிந்த யிருநூற்றுப் பதினுறுக்குள்
ளடக்கிவைத்த பொருகளெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
ஞமிந்த உலகத்தில் யின்னூல்க் கிட்டில்
நலமான சித்ததிக முண்டாய்ப் போச்சு
தாமிந்த சூத்திரத்தைக்கெணியாதிந்தால்
தலைதெறித்துப்போகுமடா சத்தியமாய்ச் சொன்னேன்
நாமிந்தப்படிச் சொன்ளும் யோகிக்கிய்வாய்
நலமான பூரண சூத்திரமும் முற்றே. (216)

Colophon :

பூரண சூத்திரம் முற்றும்.
குருபாதமே கதி.
முற்றும்.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 177-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிபோன்றதேயாகும். ஆயினும் அதற்குமிதற்கும் பலவிடத்துப் பாட பேதங்கள் காணப்படுகின்றன. கற்பமுறை, யோகம், தைலமுறை போன்ற விடயங்கள் இதில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. 177-ஆம் பிரதியில் காப்புச் செய்யுளுக்குப் பின்னர் காணப்படும் ‘மறை நூலு வேதமொடு சாத்திரம் தானும்’ என்று துடங்கி ‘முன்வயஸ்தம்ப முதற் பூரணமா மொன்றே’ என்று முடிவுறும் ஓர் செய்யுட்ப் பகுதி இதனிற் காணப் படவில்லை.

R. No. 1485.

அகத்தியர் பூசை விதி (200) by அகத்தியர்.

AKATTIYAR PŪSAI VIDHI (200) by Akattiyar.

Foll. 40 (*a*)—84 (*a*). Lines, 9 on a page. Extent, 800 granthas.

Same work as that described under R. No. 9-b.

Complete.

ஹரி ஓம்.

Beginning :

நன்றாகுக. குருவாழ்க

குருவே துணை.

அகத்தியர் பூசை விதி உள.

நனறாக.

காரணமாகு சிவயோகி சித்தர்பூசை
களங்கமறச் சொல்லுகிறேனன்றாய்க்கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாட்கை
புகழான வஷ்ட்டாங்க நடனமாடுஞ்
சீரணமாய்ப்போகாமல் பூசைமாறகஞ்
செப்பி(கி)றேன் மனந்தெளிந்த சித்தற்கையா
வாரணமாமுகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே (க)

End :

ஒண்ணான மனதுறு(ரி)மை சீஷனுக்கு
உரை சொல்லியறிவு பெற வூணச்சொல்லு
விண்ணூட்டங் கண்ணாடி மேவச்சொல்லி
மேலான மவுனத்தைப்பத்தச்சொலலு
சுண்ணாம்பு மஞ்சளும் போல்க்குறிகள் நாட்டிச்
சுளினையிலே நாட்டமுறத் தொட்டுக்காட்டிக்
கண்ணாடிக்குள்க் குருவின் பதத்தைப்போற்றிக்
கருணை பெறும் பூசைவிதி கருவாமுற்றே. (201)

குருபாதந்துணை

செய வருஷம் காற்திகைமீ உ௰கஉ வியாழக்கிழமை உதையாதியில் தெட்சிணாமூற்தி பூசைவிதி எழுதி முகி(டி)ந்தது. முற்றும்.

மீனாட்சியம்மன் பாதாரவிந்தமே துணை.

(கு. - பு.)—

இது மூவருடக் காடலாக்கு 9 (b) நம்பரில் வருணிக்கப்பட்ட பிரதி போன்றதேயாகும். ஆயினும் அதற்குமிதற்கும் சிற்சில விடத்துப் பாடபேதங் காண்கிறது. இதில் தம்பனம், மோகனம், வசியம், ஆகர்ஷணம், பேதனம், வித்துவேஷணம், மவுனபூசை, கண்ணேட்டம், விஷ்ணுசங்காரம், சித்தர்கள் பூசை, சத்திபூசை, சற்குருவறிதல், கேசரியோகம், அங்கநியாசம், சிவசத்திநியாசம், சோடசநியாஸம், சடாதாரநியாசம், சின்மய முத்திரை, தேனு முத்திரை, யோனி, லிங்க, கும்ப, பிறை, ரவி, நாத, விந்து, முத்திரைகள், வாலையுபதேசம், செனனவுற்பத்தி முதலானவை விரித்துக்கூறப்பட்டுள. இதன் பின்னர் 84 (b) ஏட்டில் பொய்யுரையாமை

பற்றிய முன்பின் சம்பந்தமற்றதோர் பாடல் எழுதப்பட்டுளது. 85 (a) ஏட்டில் கீழ்க்காணும் இரு சக்கரங்களும் வரையப்பட்டுள்ளன. அவையாது பற்றியவையென விளங்கவில்லை.





R. No. 1486.

ஆருதார விபரம் (உடல்கூறு.)

ĀRĀDHĀRAVIPARAM (Uḍaṟkūṟu).

Foll. 86 (*a*)—88 (*b*). Lines, 5–8 on a page. Extent, 30 granthas. Similar work as that described under D. No. 2133. Complete.

Beginning :

உடல்கூறு.

ஆருதாரம் விபரஞ் சொல்வது.

ஓ०-ந-ம-சி-வ-ய. இந்த ஆறெழுத்துமே ஆருதாரம். எப்படியென்றால் :—

ஓங்காரம் மூலாதார வீடு. அதிலே கணபதி வல்லபை யிருபேரும் வீத்திருப்பது. * * * நகாரம் பிறமாவுடைய வீடு * * * மகாரம் மகாவிஷ்ணு வீடு * * * சிகாரம் ருத்திரன் பதி * * * வாகாரம் மயேசுவரன் பீடம் * * * யகாரம் சதாசிவ பீடம். ஆகாசம் நிறம். மேக நிறம் * * *

End :

போற்றியவவ்வரியுஞ் சதாசிவ பூரணமே.

ஓ ய-ம-அ.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2133-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்ட பிரதிபோன்றதாகும். ஓங்காரத்துடன்கூடிய பஞ்சாக்கரவெழுத்துகளையே ஆருதாரமாகக்கொண்டு அவற்றின் தேவதைகள் வரணங்கள் முதலான விஷயங்களை விரித்துரைக்கின்றது. சக்கரங்களும் இவற்றுடன் வரையப்பட்டுள்ளன. திருமூலர் ஆருதாரம் முதலியவற்றினும் இது வேருயது. இயற்றியவர் பெயர் முதலிய விளங்கவில்லை.

R. No. 1487.

இராமதேவர் சூத்திரம் (216) by இராமதேவர்.

IRĀMADĒVAR SŪTTIRAM (216) by Irāmadēvar.

Foll. 89 (*a*)—128 (*a*). Lines, 10–11 on a page. Extent, 900 granthas. Complete.

Beginning :

ஹரி ௦ ஓம்

நன்றாக
இராமதேவர் சூத்திரம் 216.
நீடூழிவாழ்கவும்.

ஆதியந்தமெய்நிறைந்தசோதிபாதம்
கண்டபரிபூரணத்தினறிவைக்கூட்டிப்
பாதியாய்முப்பொருளுமூன்றுமொன்றுயப்பா
வெளியாய்நின்றபராபரையின்பாதம்
நீதியாய் வாரணத்தினமுகவன்பாதம்
நிறைந்தமலர்வாணிகுரு கந்தன் பாதம்
சோதியாம் நாதர்கள் பாதம் போற்றிச்
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லுவேனே. (க)

* * * *

End :

வையப்பா சகலகலைச் செய்தியெல்லாம்
வளமாக அடக்கிவெகு தெளிவாய்ச்சொன்னேன்
ஐயமென்று நினையாதே பிரம்பேசாதே
யாத்தானேயனுதினமு மறவாதே நீ
செய்யாதே தீவினைதான் கொடிதுபாவஞ்
சேந்துவெல்லா மீசனென்று தெளிந்துகாணு
மெய்யான குருபாதத்தைப்பணிந்து போற்றி
விளம்பினேன் பலதிரட்டுச்சூத்திரந்தான் முற்றே. (உாய்ள)

இந்தச் சூத்திரமெழுதினது பட்டாளு வாத்தியார் சீனதம்பியா பிள்ளை கையெழுத்து.

குருபாதந் துணை.
மீனாட்சியம்மன் துணை.

(கு. - பு.)—

இந்நூல் இராமதேவரால் இயற்றப்பெற்றதென்பது இப்பிரதியின் துடக்கத்துள்ள வாக்கியத்தால் தெரிகிறது. இதில் ஆதியுப்பு சவுக்காரம், வழலையுப்புச், சுண்ணும்பு, ரசக்கட்டு, ரசகுளிகை, செந்தூரம், வெடியுப்பு, செய்நீர், அயப்பொடி, நவசாரச் சுண்ணம், நாகசெந்துரம் காந்தக்கிண்ணம், அயச்செம்பு, கறியுப்புக்கட்டு, கல்லுப்புத்தைலம், ரசமணி, துருசுச்சுண்ணந், தாளகச் சுண்ணம், கெந்தி மெழுகு, பாஷாண மெழுகு, கருவங்கக்கட்டு, செம்புசுத்தி, பதங்கம், வழலைக்குரு, அஷ்டமாசிங்கி,

அஷ்ட்டகர்மம், உடற்சக்கரம், அஷ்ட்டகற்மவாலை, அஷ்ட்டகர்மத் தகடு, நூலறிதல், பொய்க்குருவறிதல், வெள்ளையாவரை, அஞ்சனம், மார(ர)ணம், வசியம், கரு(சூ)வின்வகை, மசானத்திஸ்ப்பேய்க்கு, அஷ்ட்டகர்மம், மருத்திடு, மாரணம், முற்கரு பிற்கரு அறிதல், மாரணம், போன்ற விஷயங்கள் விரித்துக் கூறபட்டுள்ளன.

R. No. 1488.

வாதமருந்து.

VĀDAMARUNDU.

Fol. 129 (a). Lines, 5. Extent, 2 granthas.

Similar work as that described under *D. No.* 1978.

Incomplete.

Beginning :

வாதமருந்து.

1 குக்குலு பலம் க.
2 அக்குறு பலம் க.
3 கூவைப்பொடி பலம் க.
4 பறங்கிப்பட்டை பலம் க.
5 புளி பலம் க.
6 வெள்ளளவை பலம் க.
7 கெவுரி பலம் க
8 நொச்சி பலம் க.
9 ருச்செந்தூரலை பலம் உ.
10 புளியிலைசாறு படி
11 வெள்ளை கெவுரி படி எரிக்கவும்.

குக்குரு, பறங்கிப்பட்டை, வெள்ளை கெவுரி பாலு படியிலே சுத்தி செய்யவும்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1978-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிபோன்றதொரு பிரதியின் கடைப்பகுதியாகும். இவ்வேட்டின் பின்புறம் எழுதாது விடப்பட்டிருப்பதால் இதுவே கடைசியாகவிருக்கவேண்டும். தற்பொழுது உள்ள மொத்த ஏடுகளில் இது 129-ஆவது ஏடு ஆகவிருந்தபோதிலும் அப்பிரதிக்கென்று தனிமுறையில் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணை நோக்கின் இது அப்பிரதியின் 32-ஆவது ஏடாகக் காண்கிறது. இங்கு ஆரம்பப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயமட்டுந்தான் அதிலுமுள்ளது. வேறு இடையாது. மற்றைய வேடுகள் முன்னரே சிதைந்தோ, காணாமலோ போயிருக்கவேண்டுமெனத் தோற்றுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியவை விளங்கவில்லை.

R. No. 1489–91 (one codex).

Palm-leaf. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ *inches.* Foll. 33. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 725 granthas.

Restored in 1944–45 from the MSS. described under D. No. 1811, D. No. 2753 and D. No. 1535.

R. No. 1489.

மூவரம்மானை.

MŪVARAMMĀNAI.

Foll. 1–13 (a). Extent, 250 granthas.

Complete.

Beginning :

விநாயகர் துணே.
வாணீ நமோஸ்து.
நன்ருக.
தேவீசகாயம்.
மூவரம்மானே சகாயம்.
காப்பு.

வேகமாய்நெறிசேரும் விணேகளும்
தாக போகம் விடாத தளர்ச்சியும்
சோகவாரியினுல் வருந்துன்பமும்
போகயானே முகத்தனேப்போற்றுவாம்.

* * * *

புந்திவனஞ் சூழும் பொருவில்லாப் பிள்ளேயார்
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணியம்மானே
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணியாமாகில்
இந்தவயிற்றுக்கிரையெங்கே அம்மானே
இன்றென்றே யீசுனிரக்கலுற்ருன் அம்மானே. (க)

* * * *

End :

அந்தப்புசும் பொற்கிரி வாழாதிசத்தி நாதரவர்
வந்தபுலித்தோலுரித்தவல்லாளரம்மானே
வந்தபுலித்தோலுரித்த வல்லாளராமாகில்
இந்தமலேமேலிருப்பதென்னம்மானே
இருந்தார் மலேயன்மகளின்பத்தாலம்மானே. (கூரு)

Colophon :

மூவரம்மானே முற்றிற்று * * *

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1811-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். இதில் விஞயகர், முருகன், திருமால், சிவ பிரான், சத்தி, ஆகிய அய்வர் மேலும் அம்மானே பாடப்பட்டிருப்பினும் முதலிலும் இறுதியிலும் மூவரம்மானே யெனத் தலேயங்கங்கொடுத்திருப்ப தின் காரணம் விளங்கவில்லே. பெரும்பான்மைபற்றியிருக்கலாமெனத் தோற்றுகிறது. இல்லேயேல் அய்வரம்மானே எனக்கொள்ளுதலே வேண்டும். ஆசிரியர்யாரென விளங்கவில்லே

R. No. 1490.

தொட்டதேவராயர் சரித்திரம் (மைசூர்).
DODḌADĒVARĀYAR CARITTIRAM (Mysore).

Foll. 14 (*a*)–29 (*a*). Extent, 400 granthas.
Incomplete.

Beginning :

ஸ்ரீ

மைசூர் தொட்டதேவராயர் சரித்திரம்.

அத்திரி முனீசுவர வமிசத் * * * சந்திரன் பிரந்தான் * * *

End :

* * பூசைக்கு வெங்கடேசுவர சுவாமிக்கு ரெத்தின சிங்கா.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2753-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். இதில் மைசூரை யாண்டுவந்த அரசருள் திம் மராசா முதலாக, தொட்டதேவராயர் இறுதியாகவுள்ளவர்களின் சரித் திரங்கள் கூறப்பட்டுள்ளன. அவர்களுள் தொட்டதேவராயரின் சரிதமட்டும் விரிவாக இதில் கூறப்பட்டிருக்கையினால் இந்நூலுக்கு இப்பெயர் கொடுக் கப்பட்டிருப்பதுபோலும். தேவப்பராயன் என்பவர் இவரது தகப்பனு ரெனத் தெரிகிறது. சயனே? சாலிவாகன சகத்தில் இவர் பிறந்ததாகவும் சடூாஅக்குமேல் விகாரி வருஷம் பட்டத்திற்கு வந்ததாகவும் கூறப்பட் டிருக்கிறது. சாலிவாகன சகத்தை முதலில் குறிக்குமிடத்து காணப்படும் எண் இரந்த பாதத்தால் தெளிவுபடவில்லை. ஆகவே இதைக் கொண்டு காலநிர்ணயம் செய்யவியலவில்லை. இவருக்கு மூன்று தம்பி கள் இருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. மற்றும் தர்மகுரு அப்பய்யா சாரியர், மந்திரி வெங்கடய்யன், பொக்கிஷதாரன் பசவய்யன் என்றும் அவர்காலத்துமற்றய சிற்றரசர்கள் மந்திரிகள் புரோகிதர்கள் யார்யாரென் றும் கூறப்பட்டுள்ளது. பெரிய பட்டணம் நஞ்சராசய்யன் தோழன் கெனுதி ஸமஸ்தானம் சிவப்ப நாயக்கன் செறுக்கினால் இவர்மேல்படையெடுத்து வந்து எதிர்பாராதமுறையில் இவரால் புறியடிக்கப்பட்டான் என்னும் விஷ யம் விரிவாகக்கூறப்பட்டிருக்கிறது.

R. No. 1491.

ஞானவுலா by சங்கராசாரியார்.

ÑĀNAVULĀ By ŚAṄKARĀCĀRYAR.

Foll. 30 *a*–33 *b*. Extent, 75 granthas.

Complete.

Beginning :

சீரானகாசிச்சிதம்பரத்திலேகுடியாய்ப்
பேரான நெஞ்சமே பேசக்கே—ளாராயந்
துன்னையுணர்ந்தபடியுலகத்தில்—ஞானவுலாத்
தன்னை விரித்தறியாற்றுன்பாடப்—பிள்ளை
வஞ்சப்பிறவியிலே வாராமலென்னும்
தஞ்சப்பரத்தைநீ சார்ந்திடுவாய்—நெஞ்சேகேள்
அண்டமுலகுமனைத்துயிருமேதாங்கி
கொண்டசிவன் மூலத்தே குடியிருந்தான்—விண்டிடவோ

* * * *

சங்கராசாரி தமிழாலுரைத்தவுலா
விங்காருங்கத்துயியம்பினோர்-சங்கானர்
பாதம் பெருவர் படியிலுலகாள்வா
வேதம் பெருவர் மிகு ஞானமோதுங்
குருவாயனைவோர்க்குங் குணமுடையராகித்
தருவாயிருப்பரெனச்சாத்து.

* * *

Colophon :

ஞானவுலா முற்றும்.

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1535-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். 'சங்கராசாரி தமிழாலுரைத்த வுலா' என்பத னல் இந்நூல் சங்கராசாரி யென்றவொரு தமிழ்வல்ல வாசிரியரால் இயற் றப்பெற்றதென்பது தெரியவருகிறது. 'சங்கராசாரியம்' 'சங்கராசாரியர் சுத்தகாண்டம்' என்பதுபோன்ற நூல்களை யியற்றிய சங்கராசாரியரே இவரா அல்லது வேறு என்பது ஆராயப்பாலது. வடமொழியில் சங்கர ரென்று வழங்கா நிற்கும் சங்கராசாரியரினும் இவர் வேறனவர் என்றே தோற்றுகிறது. 'சங்கராசாரி தமிழாலுரைத் வுலா' என்பதைக்கொண்டும் இது வேதாந்த விஷயமாயிருப்பதுபற்றியும் அவரே இதை தமிழில் இயற் றினரென்ற வாதுக்குமிது இடந்தரும். அதுவும் ஆராயத்தக்கதே.

R. No. 1492.

Paper. 10½ × 9½ inches. Foll. 186. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 3,710 granthas.

Restored in 1944–45 from a MS. described under D. No. 476.

உத்தர ராமாயண நாடகம் by அனந்தவேதன்.

UTTARARĀMĀYAṆANĀṬAKAM BY ANANTAVĒDAN.

Complete.

Beginning :

ஸ்ரீ

உத்தரராமாயண நாடகம்.

வெண்பா.

சீராருஞ் செங்கமலச் செய்யவனைச் சேர்ந்திருக்கும்
நாராயணன் புகழை நாட்டுகவே—நேராகி
வந்தருள்வா யுத்தர ராமாயணநன் னுடகமே
தந் தருள்வாய் சேனநாதா.

விருத்தம்.

* * * *

(நூல்)

விருத்தம்.

தலம் பெருகும் புகழுள கோதண்டராமன்(ச்)
சந்திரனுமிராவணனுதிகளை வென்று
குளம் பெருகும் தம்பியர்கள் பணிந்துபோற்றக்
குயிலனைய மொழிச்சீதை . . . ன்கூடிப்
பிலம்பெருகுமகுடாபிஷேகஞ் சூடிப்
பெரும்புவியையாளுமளயோத்திமீதில்
நலம் பெருமகிமை சொல்லியுங்கொண்டாட
நாடினர் முனிவர் வந்து கூடினரே.

சௌராஷ்ட்டகம்—சாபு தாளம்.

* * * *

End :

சந்தவிருத்தம்.

இந்தவகையந்தமுனிகிரந்த வுரை
கொண்டவையிசைந்துவரநடந்து துணையாய்
வந்தவரோடுந்தனையர் பந்துகணிறைந்து
புகழ்வந்தரெகுநந்தனருமாய்
சந்ததமகிழ்நீதினிதிருந்தனருவந்து
திறைசந்திரனெனுந் தசரதர்
தந்தரு நந்தனர் வரந்தருவர்
சந்ததி தழைந்திடுமிகுந்த நலமே.

* * * *

Colophon :

உத்தரகாண்ட முற்றும்.

இவை நிறைவேறின விபரம்.

(விருத்தம்).

கவிதிலகர் வான்மீகி சொலும்இராம
கதையேழாங்காண்ட நாடகமாய்ச் செய்தே
நவிலெழுபதுக் கெழுபதேழுமூன்று
நல்ல கலியாண்டு கன்னி மதிப்பூசத்தில்
புவிபுகழுங்குடந்தைக்கோமளவல்லிப்
பொன்புணருமெங்கள் சாரங்கபாணி கோயிற்
கவிவாதிசிங்கார மண்டபத்தின்முன்னே
கவியனந்தவேதனரங் கேத்தினனே.

ஸ்ரீராமசந்த்ர ஸஹாயஃ
ஓம் ஹரி ஃ

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 476-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இது வான்மீகியான் வடமொழியிலியற்றப் பட்ட ராமாயணத்தை ஆதாரமாகக்கொண்டு அதன்கணுள்ள ஏழுகாண்டத்தி னுள் ஏழாவதான உத்தரகாண்டத்தின் கதையைமட்டும் நாடக உருவின்

விரித்துரைப்பதாயமைந்துள்ளது. விருத்தங்களாலும் பாடல் (கீர்த்தனங்) களாலுமாயது. பலதிறப்பட்டராகங்களும் தாளங்களும் இதில் காண் கின்றன. இது **அனந்தவேதனென்னுங்** கவியாலியற்றப்பட்டதென்பது ' கவியனந்தவேதனாரங்கேத்திருனே ' என்னும் இறுதியிலுள்ள விருத் தத்தின் இறுதியடியால் அறியப்படுகிறது. கி.பி. 1810-ஆம் ஆண்டில் இது திருக்குடந்தை சாரங்கபாணி கோயிலில் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறப்பட்டுளது. சீதை பூமியுள் மறைந்தவரைக்குமான கதை விரிவாக வும் அதன் பின்னருள்ளது சுருக்கமாகவுமுள்ளது. அப்பகுதியையும் விரித்துக்கூறுகின்றதும் இதே முறையில் அமைந்ததுமான மற்றொரு நூலும் இதே பெயரில் வேறொரு கவியால் இயற்றப்பட்டுள்ளது. அந் நூலின்து இறுதி விருத்தத்து மூன்றுமடியில்

" ஒப்பிலாக்கீர்த்தனையுந் தருக்களாலே
யுரைத்தனந்த **கவியினுட** பாதந்தன்னை '

என்று இவ்வனந்த கவியின் பெயர் அதனாசிரியரால் கூறப்பட்டிருப்பதனால் அது இதற்குப்பின்னரே எழுதப்பெற்றதென்பது தெளிவு. அதனாசிரியர் யாரென்பது விளங்கவில்லை. அந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 477-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1493.

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 28. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 660 granthas.

Restored in 1944–45 from a MS. described under D. No. 500.

வள்ளியம்மை நாடகம் by குமரப் பிள்ளை.

VAḶḶIYAMMAI NĀṬAKAM By KUMARAPPIḶḶAI.

Similar work as that described under D. No. 508.

Complete.

Beginning :

ஸ்ரீ :

வள்ளியம்மை நாடகம்.

(காப்பு).

திருநகர்த்தணிகைமேவும் சிவஞ்சுதன் வேலர்மீதில்
அருந்தமிழ் நாடகத்தை அம்புவிதனிலேபாட
வருவினையகற்றுமெங்கள் வாம்புலியூரில் மேவுங்
கரிமுகக் கடவுளான கணபதி காப்புத்தானே.

தேவீசகாயம்.

அற்புதவிளம்பியாண்டிலச்சுதராயனுனி
லிப்புவிமேஷமாத்திருபத்துரெண்டுநாளில்
பொற்பகையருளான் சேயன் புலிப்பாகை கருணைமூர்த்தி
கற்புடைவெள்ளியம்மை கதைகளையாடலுற்றேன்.

ஆசுடன் மதுரம் சித்ரமறிந் தவர்பாதம்போற்றிப்
பாசமாயாணுங்கூர வாழ்பச்சையப்பிள்ளையானேன்
நேசமாய் தவத்தால்வந்த நீதியாங் குமரபூபன்,
வாசமாய்ச்சொன்ன நாடகம் வரும்பிழை பொறுத்திடீரே.

* * * *

அகவல்.

புள்ளிமானினற் பூங்கொடியென்னும்
வள்ளியை வேலர் மருயியணைய
உந்தனைத்துதிக்க உயர்கதிர்வடிவாய்
வந்துமுன்தோன்றிடுமதகெசகெளிரே.

* * * *

கவி.

* * * *

End :

வசனம்.

வாருமம்மா வள்ளியாரே, யின்னேரம் போயிருந்து வந்தாயே. புனத்தில் கிளிகள் மான்கள் மேஞ்சுதென்று தாதி கோபித்துக்கொள்ள வள்ளி நாயகி பந்தலின் பேரிலேரிக்கொண்டு கிளிகளையோட்டிக்கொள்ளுகிறுள்.

இந்தமட்டுங் கதை
யாச்சுது
சுப்பராயர் துணை.
வள்ளிநாயகி துணையுண்டாகவும்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 500-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கபெற்றதாகும். திருத்தணிகையிற் கோயிற்கொண்டுள்ள முருகப்பெருமான்மீது குமரபூபன் என்னும் குமரப்பிள்ளை யென்பவரால் பாடப்பெற்றது. ‘ அச்சுதராயனுளில் . . . வள்ளியம்மை கதைகளை யாடலுற்றேன் ’ என்பதனுல் இது எழுதப்பட்டதோடன்றி நடத்தியும் காட்டப்பட்டுவந்ததென்பது புலனுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள அச்சுதராயனென்போன் யார் எக்காலத்தவன் என்பது ஆராயத்தக்கது. இந்நூலில் முருகப்பெருமான் வள்ளியம்மையைக் காந்தர்வமணம்புரிந்து, பின்னர் தேவர்களறிய சிரூர் பட்டணத்துவந்து கல்யாணஞ் செய்துகொள்ளுகிறுரே மென்றும் தற்பொழுது நீ தினைப்புனமேகலாமென்றும், அவளிடம் சொல்லியனுப்ப அவள் துயரத்தோடு தினைப்புனம் வந்து சேரும் பகுதிவரைக் குமே உளது. நூலின் இவ்விறுதிப்பகுதியை நோக்கின் இது இத்துடன் முடிவுற்றிருது. எஞ்சிய பாகமும் இருந்திருக்கவேண்டும். அது எழுதியோருக்குக்கிடைக்கபெருததுபற்றியே ‘ இந்தமட்டும் கதையாச்சுது ’ என்று முடிவில் எழுதியிருக்கவும் வேண்டுமெனத் தோற்றுகிறது. இந்நூலினது கதைப்பகுதியை சுருங்கச்சொல்லும் வகையிற் முன்னரமைத்துக் கூறப்

பெற்றிருக்கும் அகவற்பாக்களை நோக்குமிடத்தும் இது தெளிவாகும். அதனிறுதியில் ' **மருகி மூவரும் வாழ்ந்ததோர் கதையை. . . கீர்த்தி யாய்த் துதிக்க** . . . ஆனைமுகவனைங்கரன் காப்புத்தானே ' என்று கூறப்பட்டுளது. அல்லது யாதானுமொரு இடையூறால் எஞ்சியபாகம் எழுதாமலே விடப்பட்டிருக்கவேண்டும். யாது காரணமாயினும் இப்பிரதியிலிது முடிவுபெற்றுவிட்டதாகக் கொள்ளுதல் கூடாதெனவே தோற்றுகிறது. இதுவேபோன்று ' சுப்பிரமணிய விலாசம் ' என்றதோர் நாடக நூலுள்ளது. அஃதில் அடிமுதல் நுனிவரைக்குமுள்ள எல்லாக்கதைப் பகுதியும் முற்றும் வருணிக்கப்பெற்று முடிவுற்றிருக்கிறது. அதுபோன்றே இதுவும் இருந்திருக்கவேண்டும். அதுயாரால்எப்பொழுது யியற்றப் பட்டதென்பது விளங்கவில்லை. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 508-ஆம் நம்பரில் அந்நூலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. ' சுப்பராய விலாசம் ' என்ற மற்றொரு பெயராலும் அந்நூல் வழங்கப்படுமென்றும் அவ்விடத்துக் கூறப் பட்டிருக்கிறது. இந்நூல் நடை அற்றுணை சிறந்ததாகவில்லை. இராமாயணக்கதைப்பகுதியுமிதனுள் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

R. No. 1494.

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 60. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 1,400 granthas.

Restored in 1944–45 from a MS. described under R. No. 953.

விஷ்ணுபுராண வசனம் by ஸ்ரீனிவாஸாசாரியார் (கரிச்சங்கால்)

VIṢṆUPURĀṆAVACANAM By ŚRĪNIVĀSĀCHĀRIYAR.

Incomplete.

Beginning :

ஸ்ரீ:

ஸ்ரீ விஷ்ணுபுராண வசனம்.

ஸாங்க்ராமைராம.........................ஸாஞ்ஜயே || க ||

* * * *

ஸ்ரீ உத்விஷ்ணுபுராணஸ்ய வ்யாக்யா உத்திஹாஷயா
க்ரியதே ஸ்ரீநிவாஸேந ஸஜ்ஜநாநாம் உபயோகதா ||
|| மிக ||

ஸ்ரீ பராசரமஹர்ஷியாலே அருளிச்செய்யப்பட்ட ஷைபுண்யகஸாஹித்யமாகிய ஸ்ரீ விஷ்ணு புராணத்தைக் **கரிச்சங்கால் ஸ்ரீனிவாஸய்யங்கார்** (ஸாச்சார்) உணிவ்யாளத்திலே வெளியிட்டு ஜந்துஸாகூமும் பெறவேணுமென்று பண்ணிவைத்ததைத்துறையூர் மாடபூசி வீராராகவவது எழுதின கிரந்தத்தைப் பெரியவாள் கடாக்ஷித்து ஷேர்ஷபசாங்முதாளாகிக் கிருபை செய்தருளி திருவுள்ளம்பற்றக்கடவர்கள் * * *

End :

சகல ஸெளபாக்யமுண்டாய் தீர்க்காயுஸ்ஸுண்டாய் அமரலோகத்திலே வஸித்த வாரணபூஜிதராய் ஸுகத்தையடைவான்.

Colophon :

இதி விஷ்ணுபுராணே

ப்ரதமாம்ஶே

த்வாதஶோऽத்⁴யாய꞉

(கு.-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 953-ஆம் நம்பர் பிரதியினது ஓர் பகுதியைமட்டும் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். இதில் ஆதிதுடங்கி துருவனது சரிதத்தைக்கூறுவதான 12-ஆவது அத்தியாயமுடிகிறவரைக்குமே உளது.

R. No. 1495.

Paper. 10½ × 9½ inches. Foll. 43. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 850 granthas.

Restored in 1944–45 from a MS. described under D. No. 504.

சிறுத்தொண்டர் யக்ஷகானம் by ஞானப்பிரகாசர்.

SIRUTTOṆḌAR YAKṢAGĀNAM BY ÑĀNAPPIRAKĀSAR.

Complete.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

(சிறுத்தொண்டர் யக்ஷகானம்).

திபதை.

புரந் தரன் மாதவர் போதனும் பணிய
வரந் தருமு ருங்கை மகா கணபதியே

*   *   *   *

சிறுத்தொண்டன்ருன் பெற்ற செல்வனைவாளா
லறுத்துச் சுவைக்கறியாக்கியீசருக்கு
உதவியே மோக்ஷத்திலுற்றிருடுமினிய
கதை தனையக்ஷகானமதாக

*   *   *   *

உளங்களிகூர்ந்துநானுரை செய்குவேனே.

*   *   *   *

மாக்களர் பசுமாதை யூர்க்குளென்னுளும்

*   *   *   *

வேலவரருள் பெற்ற வெள்ளிக்கந்தய்யன்

*   *   *   *

தியாணித்து மாதவஞ் செய்தேயணித்த
ஞானப்பிரகாசன் நவிலுகின்ருனே.

End :

ஸ்ரீ திருமனத்துடைச் சிறுத் தொண்டனுக்கும்
நன்னுதல் வெண்காட்டு நங்கையென்பவனுக்கும்
அன்னவரீன்ற சீராளனுக்கும்
பின்னிந்தா தலைக்கறியெனக்கொணர்ந்தளித்த
சந்தண நங்கை தனக்கும் வெள்ளாழக்
கழக்காணியம்மைக்குங் கழுவாமணிக்குஞ்
செழிக்கவே தேங்கவே திருவருள்புரிந்து
* * * வெண்பருப்பதவள்ளா
கோலமாய்த்தாம் வைத்துக்கொண்டிருந்தனரே.

வசனம்.

இந்த சிறுத்தொண்டன் * * * அரனருள் பெற்றிருப்பர்.
திருத்தணிகையாண்டவர்
இரட்சிக்கக்கடவது.
பரீதாபிஹு மாசிமீ.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 504-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். திருச்செங்காடென்னுந் தலத்து வாழ்ந்து வந்த சிவனடியாருளொருவரான சிறுத்தொண்டரது சரிதம் இதனில் கூறப்பட்டுள்ளது. இதை நாடகமெனப் பண்டு காலத்தில் வழங்கிவந்தனர்போலும். இக்காலத்து நாடக வமைப்பிற்க்குமிதற்கும் மிக்க வேறுபாடு காணப்படுகின்றது. **ஞானப்பிரகாச**ரென்பவராலிது யியற்றப்பட்டது. இவர் **பசு மாதை** யென்னுமூரில் வாழ்ந்துவந்தவரான **வள்ளிக்கந்தய்யன்** என்பவரது குமாரராவர். வள்ளிக்கந்தய்யனென்பவர் ‘சாரங்கதர யக்ஷகானம்’ என்னுமொரு நூல் இயற்றியுள்ளாரெனத் தெரிகிறது. வீரசைவ மதத்தைத் தழுவியவர். இப்பிரதியின் இறுதியில் ‘திருவளர் குன்றத்தூரில் * * * கணபதி காப்புத்தானே’ என்றதொரு செய்யுள் காண்கிறது. அதுயாதுபற்றியென்பது விளங்கவில்லை. மூலப்பிரதியில் ‘விநாயகன் திருவருள்’ என்ற தலையங்கத்தின் கீழ் தனியொரு யேட்டில் இச்செய்யுளெழுதப்பட்டிருக்கிறது. அவ்வேட்டில் துடரெண் கொடுக்கப்படவில்லை. யக்ஷகானத்தைப்பற்றி தெலுங்கு காட்லாக்கு 8-ஆம் பிரதியைப் பார்க்க.

R. No. 1496.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 54. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 1,300 granthas.

Restored in 1944–45 from a MS. described under R. No. 884.

ஹ திருமயிலைக்கோவை by தாண்டவராயர்.

TIRUMAYILAIKKŌVAI By TĀṆḌAVARĀYAR.

Incomplete.

Beginning :

வேலுமயிலுந் துணை.

திருமயிலைக் கோவை.

விநாயகர் வணக்கம்.

பெருகாரணம் புகழ் சிங்காரவேலர் பெருமை சொல்ல
வருகாதல் சேரும் பலன் மேவிவண்டுமலர்ப்பசுந்தேன்
பருகாவி சூழு மயிலைநற் கோவைபடர்வதற்கு
முருகாரொரு கொம்பிற் கூத்தாடும் பேரத்தி முன்னிற்குமே.

* * * *

நூல்.

கைக்கிளை.

காட்சி.

நீர்கொண்ட கொண்டல் செழுந்தாமரை குமிழ் நீலமலர்
ஏர் கொண்ட கோங்கு செவ்வாம்பல் பைங்காந்தளிவைமலர்ந்து
சீர் கொண்ட சுந்தர சிங்காரவேலர் திருமயிலைக்
கார்கொண்ட காவிலொரு காமவல்லியென் கண்ணுற்றதே. (க)

* * * *

Colophon :

தலைவிப்புணர்ச்சி.

முற்றிற்று.

வன்புறை.

அணிந்து நாணியது அறிந்து தெளிவித்தல்.

* * * *

Colophon :

இல்வாழ்க்கை முற்றிற்று.

* * * *

End :

பாங்கிமறை.

அணிவாழ் மயிலையிற் சிங்காரவேலரருவி வெற்பில்
மணிவாய்மதலை பிறந்தானவளாறவளாரைக்கின்
இணிவாய் மிழற்ற நடை செய்யும் போதன்பர் கேண்மனைப்பால்
பணிவாய்மணியுன்ற பாங்கிவந்தாளன்ன பாங்கிதுவே. (சுக)

(கு.-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 884-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். அப்பிரதியினது குறிப்பில் 'நூலாசிரியர்' இன்னாரெனத் தெரியவில்லை எனக்குறிக்கப் பட்டுளது. அப்பிரதியினுள் அதையியற்றியவர் இன்னாரெனக் குறிக்கப் படாதிருப்பதே அதன் காரணமாகும். ஆயினும் கவிநடையை யாராயு மிடத்து 'மயிலையமகவந்தாதி' 'திருமயிலைப்பிள்ளைத் தமிழ்' முதலாய நூல்களை யியற்றியுள்ள 'தாண்டவராயரெ'ன்னும் புலவரே இதையு மியற்றியிருக்கலாமெனத் தோற்றுகிறது. கூற்றும் கணபதியென எல்லா

விடத்தும் குறித்துப்பாடியிருப்பதும் இதற்கு ஓர் சான்றாகலாமெனத் தோற்றுகிறது. மயிலையமகவந்தாதியில் 'கூத்தாடுமைங்கரன் காப்பாகு' மென்றும் திருமயிலைப்பிள்ளைத் தமிழில் 'கூத்தாடுமைங்கரப்பிள்ளை சரணம்' என்றும், இந்நூலில் 'கூத்தாடும் பேரத்திமுன்னிற்குமே' என்றும் கூறப்பட்டுள்ளது. கணபதியின் கூத்தாடு நிலைகாண இவர்க்கீடுபாடுமிகுதி போலும். இதேபோன்று 'திருமயிலையுலா' 'திருமயிலை வெண்பா' இவற்றையும் இவரே செய்திருக்கலாமெனவும் கொள்ளலாம். செய்யுள் நடை கம்பீரமாகவும் நன்றாகவுமுள்ளது. இன்னூலினிறுதியை நோக்கின் இது முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. எஞ்சியது எழுதப்பட்டதா எழுதாது விடப்பட்டதா வென்பது ஆராயவேண்டியது. இப்பிரதியில் நூலாரம்பத்தின் முன்னருள்ள ஓரேட்டில் 'நளவருடம் ஆவணி மாதம் உ௪-ந் தேதி திங்கட்கிழமை பூரணை சதயத்துச் சித்த யோகத்தில் பொய்யடிமையில்லாத புலவர்க்கு அடியனாகிய மயிலை சீனி. கோவிந்தராசன் பார்வையிடத் தொடங்கினான்.

Sept. 11, 1916.

எனக்குறிக்கப்பட்டுள்ளது.

R. Nos. 1497-98 (one codex).

Paper. 10½ × 9½ inches. Foll. 16. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 320 granthas.

Restored in 1944-45 from the MSS. described under D. No. 430 and R. No. 459 (*n*).

R. No. 1497.

பாகவதசாரம் by தாண்டவ சாஸ்திரி.
BHĀGAVATASĀRAM By TĀṆḌAVAŚĀSTRY.

Foll. 1(*a*)-2(*b*). Extent, 40 granthas.

Incomplete.

Beginning :

பாகவத சாரம்.

வேத வியாஸர் விரித்துரைத்த பாகவத
மோதிக் கருத்துள்ளூறுதிபெற்றுத்—தீதகற்றி
மோக்ஷமுடனைசுரியமுண்டாய் முகூர்த்தமெனுங்
காட்சிபெற மும்மதத்தான் காப்பு.

* * * *

End :

ஆகையால் அனந்த ஜன்மத்திலே அனேக புண்ணியம் பண்ணினவன் இதிலே ஆசைபண்ணுவன். இந்தப்பாகவத பலமானது வேதமாகிற கற்பகவிருட்சத்திலுண்டாச்சுது. அத்தை

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 430-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும்.

R. No. 1498.

நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா.
NŪṞṞEṬṬUTTIRUPPATI VEṆBĀ.

Foll. 3(*a*)–16(*b*). Extent, 280 granthas.

Complete.

Beginning :

நூற்றெட்டுத் திருப்பதி
வெண்பா.

தோதாத்தி திரிநாதன் துய்யசெம் பொற்பாதத்தைக்
காதலுட னேதொழுது கண்குளிர்ந்தென்—சீதமலர்
மேலுரைச்சீ வரமங்கை மேவிவளர் மார்பா
தாலுனி லுன்பெயர் தந்தான். (க)

* * * *

Colophon :

காப்பு முற்றும்

* * * *

சோழமண்டல முற்றும்.
பாண்டிமண்டலம்.

* * * *

பாண்டி மண்டல முற்றும்
மலைநாடு.

* * * *

மலை நாடுமுற்றும்
தொண்டைமண்டலம்.

* * * *

தொண்டைமண்டல முற்றும்
வடநாடு.

* * * *

வடநாடுமுற்றும்.
திருநாடு.

* * * *

End :

சோழநாட்டிருப்பான் சொற்பாண்டியீ ரொன்பான்
பாழிமலை நாட்டி (ரு) ப்ப(ா)ன் மூன்றும்—வாழ் தொண்டை
நாட்டிருப்பான் மூன்று வட நாட்டாறிரண்டு கடல்
வீட்டோடு **நூற்றெண்பதியாமே.**

* * * *

வாழி திருப்பதிகள் வாழி திருநெடுமால்
வாழி திருக்குருகூர் வாழ் மாறன்—வாழி தமிழ்
ஆழ்வார்கள் வாழி யருள் வயிணவர்களாய்
வாழ்வார்கள் வாழி மகிழ்ந்து.

* * * *

(கு.-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 459 (n) ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூற்றெட்டு விஷ்ணு ஸ்தலங்கள் அவற்றுள் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் பற்றிய விஷயங்களை வெண்பாக்களால் கூறுவதிது. நூற்றெட்டுத் திருப்பதிகளைப் பற்றிய விபரங்கள் "நூற்றெட்டுத் திருப்பதிப் பிரபாவம்" என்னும் அச்சிட்ட புத்தகத்தில் விரிவாய்க்கூறப்பட்டிருத்தலின் அதில் காண்க. அதன் லைப்ரெரி நம்பர் 471 ஆகும். இந்நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று பரமபதமான வைகுண்டமே. மற்றுள்ளவைகளுள் சோழ மண்டலத்துள் 40-ம், பாண்டி மண்டலத்துள் 18-ம், மலைநாட்டுள் 13-ம், நடு நாட்டுள் 2-ம், தொண்டை மண்டலத்துள் 22-ம், வடநாட்டுள் 12-ம் ஆக அடங்கியுள்ளன. அஷ்டப்பிரபந்தமென்னும் அச்சிடப்பட்ட நூலிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. அதன் நெ. 1000 ஆகும். இவ்வெண்பா நூலிலோ அவற்றைக் கணக்கிட்டுச் சொல்லும் "சோழநாட்டிருப்பான்" என்னும் செய்யுளை நோக்கின் 87 தலங்களே கிடைக்கின்றன. இப்பிரதியின் மூலப்பிரதியிலும் இச்செய்யுள் இவ்வாறே காணகிறது. இது தவருக எழுதப்பட்டிருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது. இச் செய்யுளையே "சோழ நாட்டிருப்பான் சொற்", என்னுமிடத்து 'சோழ நாட்டிருப்பானென்று' என வைத்துப்படிக்கின் கணக்கு சரியாகுமெனத் தோன்றுகிறது. மற்ற நூல்களில் நடு நாட்டுள் 2 எனச் சொல்லப்பட்டதில் ஒன்றை சோழ நாட்டுள்ளும், மற்றென்றை தொண்டை நாட்டுள்ளும் இந்நூலாசிரியர் அடக்கியுள்ளார் போலும். ஆனதுபற்றியே தொண்டை நாட்டுள் 22 தலங்களே மற்றய நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்க, இந்நூலில் "வாழ் தொண்டை நாட்டிருபான் மூன்றென"க் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லது "சோழநாட்டிருப்பான்" என்னுமிடத்து "சோழநாட்டீரிருபான்" என்றும் "மலைநாட்டிருப்பன் மூன்றும்" என்னுமிடத்து "மலை நாட்டிருபன் நான்காம்" என்றும் பாடம் வைத்துக் கொள்ளல் வேண்டும். வங்கிபுரத்தாயச்சியாலியற்றப்பட்டுள்ள "நூற்றெட்டுத் திருப்பதிக் கோவை' என்றும் நூலில் "வாழுமாமலையான் மீரேழுமுடன்" எனக்கூறப்பட்டிருப்பது மிதற்கோர் சான்ருகும். அவ்விடத்திய எண்ணிக்கையும் இதே போன்று மற்றைய நூலோடு முரண்படுகிறது. அதுவும் ஆராயத்தக்கதே. அவ்விடத்திய "சோழமண்டலம் நாற்பத்திரண்டுடன்" என்னுமிடத்து "சோழ மண்டலம் நாற்பத்துதொன்றுடனே" என்று இருத்தல் நலம். அன்றேல் பாற்கடலொடு 109 திருப்பதிகளாம். அல்லது பரமபதம் நீக்கி இப்பூ மண்டலத்துள்ளேயே நூற்றெட்டுத்திருப்பதிகளுள்ளன வென்பது அவ்வாசிரியர் கருத்துப்போலும். விரிக்கின் விரியுமாதலின் இவ்விடத்து விவரிக்க வில்லை. இந்நூற்றெட்டுத் திருப்பதிகள்பற்றி அந்தாதி, அகவல், திருப்புகழ், கோவை, தாலாட்டு எனப்பல்வேறு பட்டப் பிரபந்தவகைகளும்' பல்வேறுன ஆசிரியர்களாலியற்றப்பட்டுள்ளன. இந்நூல் வெண்பா வகையைச் சார்ந்தது. இயற்றியவர் இன்னுரெனத் தெரியவில்லை. வெண்பாக்களின் எண்களும் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை..

R. No. 1499.

Paper. 10½ × 9½ inches. Foll. 139. Lines, 20 on a page. Tamil. Condition, Good. New. Extent. 3,300 granthas.

Restored in 1944–45 from a MS. described under D. No. 2103.

வில்லிபுத்தூரார் பாரதம் by வில்லிபுத்தூராழ்வார் (உரையுடன்) ஆதிபருவம்.

VILLIPUTTŪRĀR BHĀRATAM By VILLIPUTTŪRĀḶVĀR (with commentary) ĀDIPARVA.

Incomplete.

Beginning :

நீடாழியுலகத்தில் மறை நாலோடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை . . . . வேதமுனிராசன் மகாபாரதஞ்
[சொன்னநா
ளேடாக வடமேரு வெற்பாக வெங்கூரெழுத்தாணி தன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

(எ.-து.)—நெடியகடல் சூழ்ந்த பூலோகத்திலே வேதம் நாலுடனே அஞ்சாம்வேத மென்னப் பிரசித்தமாக நிலைநிற்க குறைவன்றித் தபசு நிறைந்த வேதவியாச மகாமுனி மகாபாரதமென்றும் பெருமைபெற்ற தெய்வக்கதையைச் சொன்னநாளையில் ஸ்ரீமகாகணபதியானவர் தமமுடைய வெள்ளிக்கொம்பை எழுத்தாணியாகப் பிடித்து யிந்தமகாபாரதத்தை மகா மேருகிரியை ஏடாகப் பிடித்து எழுதியருளிய விக்னேசுவரருடைய ஸ்ரீபாதார விந்தங்களை நமஸ்கரித்து அன்பாகப் பிரசங்கிக்கிறே மென்றவாறு.

* * *

பாயிரமுற்றும்.

Colophon :

ஆழ்வார்களே துணே.

* * * *

குருகுலச்சருக்கம்.

* * * *

End :

வேறு.

இன்னணம்வளருங்காலை யெறிகடலுடுத் தவல்குன்
மின்னெனுமருங்குற் கொங்கை வெற்புடை வேய்கொண்மென்றோட்
பொன்னெனு நிறத்திறேடும் பொற்பழியாகுரித்தா
டன்னெண முடிப்பான் வந்த தலைவனைத் தந்தகோமான் (கககக)

(எ.-து.)—இந்த நலம் மகாராஜ குமாரர்கள் வளருகிற நாளையிலே அலையெறியுஞ் சமுத்திரமே கூறையாக வுடுத்தப்பட்ட அல்குலும், மின் னலைப்போல் பிரகாசமா யுண்டில்லை யென்னப்பட்ட யிடையும் அலைகளேகொ.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிங் காடலாக்கு 2103-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்ற தாகும். **வில்லிப்புத்தூராழ்வாரா**லியற்றப்பட்ட மா பாரதத்தின், முதல் பருவமாகிய ஆதிபருவத்துள்ள, "குருகுலச்சருக்கம்" துடங்கி காண்டவ தகனச்சருக்கம் இறுதியாகவுள்ள எட்டுச்சருக்கங்களுள், முதலாவதான குருகுலச்சருக்கம், இரண்டாவதான சம்பவச் சருக்கத்து ஒன்று முதலான நூற்றிப்பதினொன்று செய்யுட்களாகிய பகுதிக்குமட்டுமே இப்பிரதியில் பொழிப்புறை காண்கிறது. 111-ஆவது செய்யுளின் உரையும் பூர்த்தியாகவில்லை. உரை நடை சாதாரணமானது. இயற்றியவரின்னாரெனப் புலப்படவில்லை. அச்சுப் பிரதிகளில் "தற்சிறப்புப் பாயிர"மென்னுந் தலையங்கத்தின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள ஆறு செய்யுட்களும் இப்பிரதியில் குருகுலச்சருக்கத்துள்ளே சேர்க்கப்பட்டுள்ளன. அப்பிரதிகளில் காணப் படாத

> " கலியுக வியாசர் சொல்லக் கணபதி எழுதும் பாடல்
> பொலிவுறு தமிழாலே வாறுயிரமெனும் விருத்தம் போற்றி
> சலிவுறு வில்லிப்புத்தூரிறைவனுஞ் சார்வபூமன்
> றெலிகெழுமறையோர் கோமானுயர்ந்த வருவப்பச்சொன்னான்.
> (உ)

என்னுமோர் செய்யுளிவ்விடத்துக் காணக்கிடைக்கின்றது. அவற்றுட்காணும் "முருகார் மலர்த்தாமமுடியோனை" என்றும், "பொருப்பிலே பிறந்து. தென்னன்" என்றும் தொடங்கு மிரு செய்யுட்களிவ்விடத்து காணப்படவில்லை.

R. No. 1500.

Paper. 10½ × 9½ inches. Foll. 129. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent 2,500 granthas.

Restored in 1944–45 from a MS. described under D. No. 2104.

வில்லிப்புத்தூரார் பாரதம் by வில்லிப்புத்தூராழ்வார்
(உரையுடன்) வீஷ்ம, துரோண பருவங்கள்.

VILLIPUTTŪRĀR BHĀRATAM By VILLIPUTTŪRĀḺVĀR
(with commentary) VĪṢMA-DRŌṆAPARVAS.

• Incomplete.

Beginning :

வில்லிப்புத்தூரார்
பாரதம்
பொழிப்புரையுடன்
வீட்டுமபருவம் 6
ஐந்தாம் போர்ச்சருக்கம்

. . . .
. . . . .றெடுத்தேவினான்
கொல்லுங் கொடும்பாண மலைவையைந்து விசயன் கொதித்தேவினான்
வில்லுந் தன்னாணும் விறலம்புமுடனற்று விடைகொள்ளவே. (எ)

(எ.-து.)—வீட்டுமாச்சாரியாருக்கு. . . . . விடைகொள்ள என்ற வாறு (எ).

Colophon :

பத்தாநாட் போர்ச்சருக்க முற்றும்
பதினோராம் போர்ச்சருக்கம்.

* * * *

End :

பற்பலருமரத்தரதர் விற்பல வணக்கி யெதிர்
சொற்பொலி வயப் பகழி சிற்சில தொகுத்தனரே. (உஅ)

(எ.-து.)—சல்லியனும் அவனைச் சேர்ந்த மத்திர தேசாதிப ரெல்லாருங் கூடி வீரப்பிரதாபங்களான வார்த்தை சொல்லி............ (உஅ)

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2104-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். இதில் வீட்டும பருவத்து ஒன்றுமுதல் பத்தாவதான போர்ச்சருக்கங்களுள் முதன்மூன்கு போர்ச்சருக்கங்களும் ஐந்தில் ஆறு செய்யுட்களும் விட்டு எஞ்சிய பகுதிக்கும், துரோணபருவத்து பதினொன்றுமுதல் பதினைந்தாவதான போர்ச்சருக்கங்களுள், பதினான்கு பதினைந்து ஆவதான போர்ச்சருக்கங்களும் பதிமூன்றில் கூக-ஆம் செய்யுள் முதல் எஞ்சிய பகுதியும்விட்டு மிகுதியாயுள்ள பகுதிக்கும் மட்டுமே பொழிப்புரை காணகிறது. பதினோராஞ் சருக்கத்துக் கடைச் செய்யுளுக்கு உரை எழுதாது விடப்பட்டிருக்கிறது. மூலப்பிரதியில் அப்பகுதி சிதிலமாயிருப்பதே காரணமாகும். உரை நடை சாதாரணமானதே. ஆசிரியர் புலப்படவில்லை.

R. No. 1501.

Paper. 10½ × 9½ inches. Foll. 267. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 4,950 granthas.

Restored in 1945–46 from a MS. described under D. No. 107.

சூளாமணி by தோலாமொழித் தேவர் (முதற்பாகம்).
CŪḶĀMAṆI By TŌLĀMOḶITTĒVAR (Vol. I).

Foll. 1–193 *a*. Extent, 3,850 granthas.

Incomplete.

Beginning :

ஸ்ரீ :

இரண்டாங்காவியம்
சூளாமணி
கடவுள் வணக்கம்.

வென்றான் வினையின் றொகையாகி விரிந்து தன்க
ணொன்றாய்ப்பரந்த வுணர்வின்றொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ்சுடர் சூழொளி மூர்த்தியாகி
நின்றானடிக் கீழ்ப்பணிந்தார் வினை நீங்கி நின்றார்.

பாயிரம்.

* * * *

Colophon :

பாயிரமுற்றும்
நாட்டுச்சருக்கம்

* * * *

End :

1583.—

திருவமர் தாமரைச் செம்பொனுவிதழ்
மருவிய திருவடிவாமன் பொன்னகர்
விரவிய விழவொடு வேழ்விக்கொத்தரோ
கருவிய வனநகர் கண்குளிர்ந்ததே. (சகச)

Colophon :

அரசியற்படல முற்றும்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 107-ஆம் நம்பர் பிரதியினது முதற் பாகத்தைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இதில் நாட்டுச்சருக்கந் துடங்கி அரசியற் சருக்கமீறுக ஆறு சருக்கங்கள் உள்ளன. எஞ்சிய மூன்று சருக்கங்களை அடுத்து வரும் பாகத்திற் காண்க. இந்நூல் அச்சிடப்பெற் றுளது. அதன் நெம்பர் 155. ஆயினும் அச்சுப்பிரதிக்கும் இதற்கும் ஆங்காங்கு மாறுபாடு காணகிறது. அச்சுப்பிரதியில் இந்நூல் பனிரெண்டு சருக்கங்களாக பகுக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரதியில் ஒன்பது சருக்கங்க ளாக வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அதில் காணும் நாட்டுச் சருக்கமும் நகரச் சருக்கமும் இதில் ஒரே சருக்கமாகவும், குமாரகாலச்சருக்கம், இரத நூபுரச்சருக்கம், மந்திரசாலைச் சருக்கம் இம்மூன்றும் ஒரு சருக்கமாகவும் மற்றவை அதிற் காணகிறபடியும் ஆக ஒன்பது சருக்கங்களாக வகுக்கப் பட்டிருக்கின்றது. அச்சுப்பிரதியின் பாகுபாட்டின்படி, ஒன்றுமுதல் நான்கு சருக்கங்களும், ஒன்பதாவதான அரசியற் சருக்கமும் ஆகிய ஐந்து சருக்கங்க ளான பகுதிக்குமட்டும் சடகோபராமானுஜாசாரியர் அவர்களாலியற்றப்பட்ட ஓர் உரையும் அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் நெம்பர் 516. தவிர பலராம அய்யர் என்பவரால் இந்நூற்பொருள் வசனநடையில் எழுதப்பட்டு அதுவு மச்சிடப்பட்டுள்ளது. அதன் நெம்பர் 908. ஆகவே இந்நூல், இதனாசிரியர் முதலான விஷயங்கள் பற்றிய விபரங்களை அவற்றுட்கண்டு கொள்ளலாம்.

சூளாமணி by தோலாமொழித் தேவர் (இரண்டாம் பாகம்).

CŪḺĀMAṆI By TŌLĀMOḺITTĒVAR (Vol. II).

Foll. 194 *a*–267 *b*. Extent, 1,100 granthas.

Complete.

Beginning :

7-வது சுயம்வரச் சருக்கம்.

1584—

தேவருமனிதர் தாமுஞ்செறிகழல் விஞ்சையாரு
மேவருந்தகைய செல்வம் விருந்தபட்டனகடொற்ற
மாவரசழிந்த செங்கண்மணிவண்ணன் மகிழ்ந்தசாலைத்
தாவிருஞ் செல்வமொன்று தலைவந்ததுரைக்கலுற்றேன். (க)

* * * *

சுயமரச்சருக்க முற்றும்.

Colophon :

8-ஆவது துறவுச்சருக்கம்.

* * * *

துறவுரைச்சருக்க முற்றும்.

Colophon :

9-வது முத்திச்சருக்கம்.

* * * *

End :

2162

வலம்புரிவண்ணறு மகரமுன்னீர் மண்மேனி
யுலம்புரிதோ ணெடியவனு முலகமெல்லாமுடன் வணங்கச்
சலம்புரிவினை வென்றதங்கோன் செந்தாமரை யடிக்கீழ்
நலம்புரிவிழவியற்றி நாளுநாளு மகிழ்கின்றார். (கூஉ)

Colophon :

முத்திச்சருக்கம்

முற்றும்.

வெண்பா.

பெர்மிந்தது பொருள்விளக்கும் போழந்நருள் காய்ச்சீய்க் தும்
மிழிந்தவரை யேற்றிநிறுத்துஞ்—செழுந்தானத்
தோளாமணி தொகுத்தார் போலாதே தோலரக்கீர
சூளாமணியகத்துச் சொல்.

1. நகர வர்ணனைச்சருக்கச் செய்யுள்.
2. மந்திரசாலைச்சருக்கச் செய்யுள்.
3. தூதுவிடுசருக்கச் செய்யுள்.
4. சீயவதைச்சருக்கச் செய்யுள்.
5. கல்யாணச்சருக்கச் செய்யுள்.
6. அரசியற்சருக்கச் செய்யுள்.
7. சுயமரச்சருக்கச் செய்யுள்.
8. துறவச்சருக்கச் செய்யுள்.
9. முத்திச்சருக்கச் செய்யுள்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 107-ஆம் நம்பர் பிரதியின் இரண்டாம் பாகத்தைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். சுயமரச்சருக்க முதல் முத்திச்சருக்க மீறான மூன்று சருக்கங்களிதிலுள்ளன. முடிவுற்றுளது. இதன் முன்பாகத்தின் துடற்சியாகவுள்ளது இது.

R. No. 1502.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 44. Lines 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 800 granthas.

Restord in 1945–46 from a MS. described under D. No. 326.

திரிபுரசுந்தரி பிள்ளைத் தமிழ் (புதுவை) by முத்துக் குமரப்ப கவி.

TIRIPURASUNDARI PIḶḶAITTAMIḺ (PUDUVAI) By Muttukkumarappakavi.

Complete.

(திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ்).

Beginning :

திருமருவு தம்பிரான் ரேழுண்முக்கட்சிவன்
றெய்வத் தலங்கடோறுஞ்
சீர்கொள்பதி கம்பாடு செயலினாற்பெறுபொரு
டிரட்டி முத்தாற் றினிதிட
வருமை திகழாரூர்க் குளத்தெழுபொன்மாத்துரைத்
தளவிடும் வணிகனுவந்
தருள்செய்து வேதவன மாமணக்குறமேவு
மைங்கரப்பிள்ளை காப்பாம். (க)

*   *   *   *

தருமநிறை செல்வியைத் திரிபுரசவுந்தரித்
தாயைமற் றெப்பின் மணியைத்
தமியேன் குறித்துப் புகன்றிடும் பிள்ளைத்
தமிழ்க்கவிதை முற்றுதற்கே. (உ)

*   *   *   *

End :

*   *   *   *

அமலே விமலேசிவ கௌரியலங்காரி
யாடுக பொன்னூச
லருள் செய்தெனது துதிமகிழு நிரந்தரி
யாடுக பொன்னூச
லமலைநெடு விடையினிலகு துரந்தரி
யாடுக பொன்னூச
லரகர சிவசிவ திரிபுரசுந்தரி
யாடுக பொன்னூசல். (ம)

வேலுமயிலுந் துணை.

பாயிரம்.

தாண்டவராயக்கவிராசா.

வெண்பா.

ஒப்பின முதலவிக்கு வப்புற முத்துக்கும
ரப்பன் சொன முற்பிரபந்தத்தை—நப்பெருந்த
கைத்தமிழென்பர் கலைஞரிஃதுபிள்
ளைத்தமிழென்பாலர். (க)

*   *   *   *

(கு.-பு.)—

இது மூவருடக் காடலாக்கு 326-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பாண்டிச்சேரியென வழங்கப்படும் புதுவைமா நகரில் எழுந்தருளாநிற்கும் அம்பிகைபேரில் **முத்துக்குமரகவியால்** பாடப் பட்ட நூலிது. R. No. 350, பிரதியினு மிது வேறுயாது. இந்நூல் பற்றி பதின்மரால் பாயிரங்கள் பாடப்பட்டுள்ளன. அவர்கள் :—

1. தாண்டவாராயக் கவிராயர்.
2. இராமசந்திர கவிராயர்.
3. நயினியப்ப கவிராயர்.
4. வீராசாமி முதலியார்.
5. வெங்கடாசல முதலியார்.
6. சாம்புசிவக்கவி.
7. கூனிபோகுராமசாமி
8. அருணசல வுபாத்தியாயர்.
9. இராமானுசக் கவிராயர்.
10. வாலை தாஸன்.

என்பவர்களே யாவர். 11-வது பாயிரம் 4-வது ஆன வீராசாமி முதலி யாராலேயே பாடப்பட்டதெனத் தெரிகிறது. நூல் முற்றுமுளது. செய்யுள் நடை சாதாரணமானது.

R. No. 1503.

Paper. 10½ × 9½ inches. Foll. 319. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 6,000 granthas.

Restored in 1945–46 from a MS. described under D. No. 2981.

சோழன் பூறுவ பட்டயம்.
ŚŌḺAN PŪṚUVA PAṬṬAYAM.

Complete.

Beginning :

சோழன் பூர்வ பட்டையம்.

காஞ்சீபுரத்துக் கல் வெட்டுப்படிக்கு முற்காலம் பிற்காலம் இருக்கலாம். பூருவ வரவு ஆதி பூருவத்தில் சதாசிவன் . . . . . . பிருமதேவன் கற்பனையால்.

* * * *

கரிகாலச் சோழன் நாள்.
பூருவீகப்பட்டைய
விபரம்.

உத்தமச் சோழனுக்கு உறையூர் நகரில் பட்ட முடிவினுன் செனனம் அவன் மகன் உறையூர்ச் சோழனுக்கு உறையூர் நகரில் பட்டமான நாள் கலியுக சகாத்தம் மூவாயிரத்தைந்நூற்று முப்பத்தைந்துக்குமேல் செல்லா நின்ற சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதம் உஎவ சுக்கிரவாரமும் பஞ்சமி யும் பெற்ற நாளில் உறையூர்ச் சோழனுக்குப்பட்டமாகி ராச்சியபரிவாரஞ் செய்துவரும்போது அந்நாளில் தென்மது . . . .

* * * *

End :

சுவாமி அப்பனை ஆளவேண்டுமென்று கேட்க அப்படியே சதாசிவன் அப்பனைக் கொடுக்க சுந்திரமூர்த்தி வந்து சேரமாம் பெருமாளென்னும் சேரனை வரவழைத்துக்கொண்டு இருவருமாகச் சதாசிவனிடத்திற்குப்போய் விழு சரணம் தொழு சரணம் செய்து இருக்கச் சதா சிவனுமிவர்களிரு வருக்கும் சாயுஜ்யப்பதவி கொடுத்தார். இவர்களிருவரும் சாயுஜ்யபதவி பெற்று இருக்கிறார்கள்.

திருச்சிற்றம்பலம்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2981-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். இந்நூலை இருபகுதி யாகப் பிரிக்கலாம். முற்பகுதி கரிகால சோழனுக்கு முன்னர் நிழந்தன வற்றையும், பிற்பகுதி அவனது நாளில் நிகழ்ந்தனவற்றையும் பற்றி விரி வாகக் கூறுவனவாகும். இப்பிரதியில் முற்பகுதி 1-134 ஆவதான பக்கங் களிலும், பிற்பகுதி 135-637 ஆவதான பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது அதன் பின்னர் 638-643 ஆவதான பக்கங்களில், 'ஆறுநாட்டு விபரம்,' 'நாலுமண்டல விபரம்', "நூற்றெட்டுத் திருப்பதிக்கு விபரம்" போன்ற சில விஷயங்கள் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன. இப்பிரதியினது விபரத்தை மற்றும் டி. நெ. 2981 ஆம் நம்பர் பிரதியினது குறிப்பில் காண்க. அப் பிரதியின் கடையில் கோர்க்கப்பட்டுள்ள 77 ஏடுகளில் காணக்கிடக்கும் விஷயங்கள் முன்னரே எழுதப்பட்டுப்போனதால் திரும்ப இப்பிரதியில் எழுதப்படவில்லை.

R. No. 1504.

Paper. 10½ × 9½ **inches. Foll.** 144. **Lines** 20 **on a page. Tamil. Condition, good. New. Extent** 2,600 **granthas.**

Restored in 1945–46 from a MS. described under R. No. 1239.

நன்னூற் காண்டிகையுரை.
NANNŪṚKĀṆḌIKAIYURAI.

Incomplete.

Beginning :

உ

சிவமயம்.

*

நன்னூல்.

மூலமுங் காண்டிகையுரையும்.

சிறப்புப்பாயிரம்.

நன்றுக

மலர் தலையுலகின் மல்கிருளகல

....

.... புவுணந்தி

யென்னு நாமத்திருந்தவத்தோனே.

இது நூல் செய்தவன் பெயர் முதலாகிய பதினொன்றையுஞ் சொல்லு கின்றது. * *

Colophon :

சிறப்புப்பாயிரம்.

முற்றும்.

பொதுப்பாயிரம்.

முகவுரை பதிக மணிந்துரை நான்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

இது பாயிரத்திற்கு வருங் காரணப் பெயர்களைச் சொல்லுகின்றது.

* * * *

Colophon :

பொதுப்பாயிர முற்றுப்
பெற்றது.

* * * *

சிறப்புப்பாயிரத்து
இலக்கணம்.

* * * *

Colophon :

சிறப்புப்பாயிர(ம்) [இலக்கணம்]
முற்றுப்பெற்றது.
சண்முகநயினர் துணை.
(நூல்).
முதலாவதெழுத்தியல்.

௫௬. –

பூமலியசோகின் புனைநிழலமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவனெழுத்தே.

இது கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது.

* * * *

Colophon :

எழுத்ததிகாரம்
முற்றிற்று.

* * * *

இரண்டாவது சொல்லதிகாரம்.
முதலாவது பெயரியல்.

உ௫அ.—

முச்சகநிழற்றும் முழுமதிமுக்குடை
அச்சுதனடி தொழு தறைகுவன் சொல்லே.

இது கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது.

* * * *

End :

உளம்—

இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
யெனவிரண்டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந் திசை வட சொல்லணு காவழி.

இது முன் சூத்திரம்வரைக்கும் சொல்லாவது இதுவெனக் காட்டக் கண்ட சொல் இத்தனையா மென்பது உணர்த்துகின்றது.

* * * *

திசைச் சொல்லும் வட சொல்லும் சேர்ந்த
விடத்துப் பத்துவகைப்படு மென்றுமாம். (௯௩)

(கு.-பு.)—

இது மூவருடக் காடலாக்கு 1239-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். அச்சிடப் பெற்றுள்ள சில காண்டிகையுரைகளினுமிது வேறுயது. உறை செய்யுமாறு மிக நன்றாகவுள்ளது. நன்னூலினது, ஆதி துடங்கி முதலாவதான எழுத்ததிகாரம் முழுமையும், இரண்டாவதான சொல்லதிகாரத்தின் முதலாவது பெயரியலின் ௩௩ ஆவதான சூத்திரம் வரைக்குமான பகுதிக்குமட்டுமே உரை காண்கிறது. உரையாசிரியரின்னா ரென்பது புலப்படவில்லை.

R. No. 1505.

Paper. 10½ × 9½ inches. Foll. 42. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 664 granthas.

Restored in 1945-46 from a MS. described under R. No. 505.

சிதம்பர ஞானிப் பாட்டு by சிதம்பர ஞானியார்.
CIDAMBARAÑĀNIPPĀṬṬU By Cidambarañāniyâr.

Incomplete.

Beginning :

சிதம்பர ஞானிப்பாட்டு.

வேறு.

தருச் சிந்து.

இப்படி யெழுப்பலாமோ யென்னிடத்திரையை
இப்படி யெழுப்பலாமோ
இப்படி யெழுப்பலாமோ பொற்படிகை
தூக்கமுறை முற்படியில் காணுமல்
நின்றுள்படி யன்போடச் சொல்லையன
யிப்படி யெழுப்ப. (௨௩)

* * * *

End :

முந்தித் திருநடன முனிவோர் பதஞ்சலிமுன்
திந்தித் தோமென்னவுமே சென்றுடுகின்றதுபோல்
வந்தத் திபாதம் வணங்கியக மகிழ்ந்து
தந்தித் தாமெனவே தான் சபையைச் சுத்திவந்தான். (320)

(கு. - பு.)—

இது மூவருடக் காடலாக்கு 505-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். வேதாந்த விஷயமானது. அவ்விடத்திய குறிப்பில் " நூலாசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை " யெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் " அகத்தியர் சூத்திரம் " என்பது போன்றுள்ள இந் நூலின் பெயரைக்கொண்டு " **சிதம்பர ஞானியார்** " என்ற ஒருவரால் இது இயற்றப்பட்டமைபற்றி இப்பெயர் வந்திருக்கலாமெனக் கொள இடமிருப்பின் அவரே இதை யியற்றியுமிருக்கலாம். திருப்போரூர் வீரசைவ மடாதிபதிக்கான சிதம்பரசுவாமிகள் என்பவரே இவரா அல்லது வேறு என்பது ஆராய்ச்சிக் குறித்து. இந்நூல் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை.

R. No. 1506.

Paper. 10½ × 9½ inches. Foll. 450. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 10,800 granthas.

Restored in 1945–46 from a MS. described under D. No. 2279.

திருவிளையாடற் புராண வசனம் (முதற் பாகம்).

TIRUVIḶAIYĀḌAṞ PURĀṆA VACANAM (Vol. I).

Foll. 1–229 (*b*). Extent, 5,500 granthas.

Incomplete.

Beginning :

திருவாலவாயர்
தம்பிரானுர்
திருவிளையாட்டற் புராணம்
வசனம்.
கடவுள் வணக்கம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வனங்களெல்லா . . . . வறங்களின்ப
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவ மோங்க
. . . . . . மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க. (க)

* * * *

இந்தப் புராணம் வழங்குகிற காலத்தில் வேதத்திலுலே செய்யப்பட்ட யாகாதிகளெல்லாம் வழங்கும். வான்மாரியும் பொழியும். சகலமான

* * * *

Colophon :

அவையடக்கம் முற்றும்.

திருநாட்டுச் சிறப்பு.

* * * *

Colophon :

புராண வரலாறு முற்றும்.

தல விசேடம்.

* * *

End :

மன்மதனைப் பொடியாக்கின மதுரைச் சொக்கலிங்கம் இந்தச் செட்டிப் பெண்கள் கைதொட்டு வளையல் தரித்த நாள்முதல் எல்லோருங் கெற்ப முண்டாய் சுப்பிரமண்யரைப் போலப் பிள்ளைகளைப் பெத்தார்கள். பிறந்த பிள்ளைகள் அளவிறந்த பெருமையும் பெருமிதஞ் சிறந்த வீரமும் திறமையு மாக இருந்தார்கள். செட்டிப் பெண்கள் வாழ்நாளுமிருந்து அரனரு ளடைந்து பாதச் சாயை சேர்ந்தார்கள்.

Colophon :

முப்பத்து இரண்டாவது
வளையல்வித்த
படலம்.
முடிந்தது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2279 ஆம் நம்பர் பிரதியினது முற்பகுதி யைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். பிற் பகுதியை அடுத்துவரும் பாகத்தில் காண்க. இந் நூல் பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்டுள்ள திருவிளையாடற் புராணத்தைத் தழுவி அதனது பொருளை அப்படியே விளக்குவதாகவும் இடையிடையே அதனது செய்யுட்களையே தனது பகுதி யாகவு மடக்கிக்கொண்டு தனிப்பட்டதொரு நூல்ப் போன்றும் அதனுரை போன்றும் அமைந்துள்ளது. மிக நன்றாயுள்ளது. இது போன்று அச் சிடப்பட்டுள்ள சில பிரதிகளினு மிது வேறாயும் விரிவாயு மிருக்கின்றது. இது அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆசிரியர் யாரெனப் புலப்பட வில்லை.

திருவிளையாடற் புராண வசனம் (இரண்டாம் பாகம்).
TIRUVIḶAIYĀḌAṞ PURĀṆA VACANAM (Vol. II).

Foll. 230 (*a*)–450 (*a*). Extent, 5,300 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

முப்பத்து மூன்றாவது
அட்டமாசித்தி
உபதேசித்த
படலம்.

கொன்றை மாலையைத் தரிக்கின்ற சொக்கலிங்கமூர்த்தி தெரு வீதியிலே வந்து வளையல் வித்த விளையாடலைச் சொன்னோம். மேல் யியக்கி மாதருக்கு அட்டமாசித்தி உபதேசித்த கதையைச் சொல்கின்றோம்.

* * * *

End :

அந்த லிங்கங்களுக்கு அர்ச்சனை செய்து தோத்திரம்பண்ணி அஷ்ட மூர்த்தியா யெழுந்தருளியிருக்கிற சொக்கலிங்கத்தை திரிகாலமும் வந்து

தெரிசனஞ் செய்துகொண்டு யின்பமான மனத்தராகி தேன்களைச் சுற்றின வண்டுபோல அந்த மகா ஸ்தலத்தில் வதிஷ்ட்டர் முதலான ரிஷிகள் தபசுகள் செய்துகொண்டிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்
சித்திவிநாயகன் துணை.

Colophon :

அறுபத்தைந்தாவது
அருச்சனைப் படல
முடிந்தது.

*   *   *

குரோதிஞூ அற்பிசிமீ ௰உ
பொழிச்சலூர்
முத்தையர்
எழுதின
அறுபத்துநாலு திரு
விளையாடல்
எழுதி
நிறவேறித்து.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2279 ஆம் நம்பர் பிரதியினது பிற்பகுதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். முற் பகுதியை அடுத்துச் சென்ற பாகத்தில் காண்க. இதனிறுதியில், தலையிடத்துக் காணும் "மல்குக வேத வேள்வி" யென்னுமோர் செய்யுள் திரும்பவும், "அருள் கடவுள் வணக்கம்" எனத் துடக்கமுடையதும் பரஞ்சோதி முனிவரது நூல்பற்றியதுமான மற்றொரு செய்யுளும் எழுதப்பட்டுள்ளன. இரண்டாஞ் செய்யுளில் திருவிளையாடற் புராணத்தினது மொத்தச் செய்யுட்கள் 3,360 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

R. No. 1507.

Paper. 10½ × 9½ inches. Foll. 9. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1945-46 from a MS. described under D. No. 2189.

மத்தியார்ச்சுன மாகாத்மியம்.
MADDIYĀRJJUNA MĀHĀTMYAM.

Complete.

Beginning :

மத்தியார்ச்சுன
மாகாத்மியம்.

श्रीकण्ठं वरदं वन्दे श्रीधराद्यमरेडितम् ।
धारयन्तं वियन्नद्या समं मूर्ध्नि सुधाकरम् ॥

*   *   *

ஸ்ரீ சோழமண்டலத்தில் காவேரி தீர்த்தத்தின் தென்கரையில் மத்தி யார்ச்சுன க்ஷேத்திரத்தி . . . . வரலாறும் * * * *

End :

இப்படிக்கு வெகு மகத்துவங்களுடனே கூடின தலம். இத் தலத்தி லுண்டான மணலெல்லாம் சிவலிங்கமென்றும், ஜலமெல்லாங் கங்கை யென்றும், விருட்சங்களெல்லாங் கற்பகத்தரு வென்றும், வாசம் பண்ணப் பட்ட மனுஷ்யர்களெல்லாம் ரிஷிகளென்றும் இப்படி வெகு புராணங் களிலே சொல்லுகிறது.

Colophon :

இப்படிக்கு ஞானக்ஷேத்திரமாகிய
மத்தியார்ச்சுன
மாகாத்மியம்
எழுதி முடிந்தது.
* * *
மத்தியார்ச்சுனம்
என்கிற
திருவிடைமருதூரின்
கோயில் சிலா சாஸனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ உஜ மகா மண்டலேசுவர சதுர்மூர்த்தி ஸ்ரீமன் சதாசிவ தேவ மகாராயர் பிருத்வீராச்சியம்பண்ணி அருளாநின்ற சகாப்தம் கதுசசுகூ (1466) மேல் செல்லாநின்ற குரோதி ஸம்வத்ஸரத்து மீனஞயத்து பூர்வபட்சத்து. . . . .
தத்தம்பண்ணிக்கொடுத்து நம்முடைய ராச்சியமும். இது திருவிடைமரு தூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி கோவில் பைரவன் பிராகாரம் தென்னண்டை பிராகாரத்தில் மதிளிலே எழுதியிருக்கிற சிலாசாஸனம்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2189 ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். கும்பகோணத்தின் பக்கத்துள்ள "திருவிடைமருதூர்" எனத் தற்காலம் வழங்கப்பெறும் மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தின் வரலாற்றையும் அஃதிலுள்ள தீர்த்தம், தேவதை முதலானவை களின் மகிமையையும் இந் நூல் சுருக்கமாக வுணர்த்துகின்றது. முற்று முள்ளது. இதன் பின்னர் அதாவது 9-ஆம் ஏட்டில் இவ்வூர் கோயில்ச் சிலாசாஸனம் ஒன்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதுள் அஃது சதாசிவ தேவ மகாராயர் என்பவரால் அவ்வூர்த் தம்பிரானுர்க்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

R. No. 1508.

Paper. 10½ × 9½ inches. Foll. 24. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 575 granthas.

Restored in 1945–46 from a MS. described under R. No. 1453d-2 of the Sanskrit T.C., Vol. II-B, and in the Sanskrit part of the T.T.C., Vol. II.

பெரிய திருமொழி by திருமங்கையாழ்வார் வேங்கடா சாரியர் உரையுடன்.

PERIYATIRUMOḶI by TIRUMAṄKAIYĀḶVĀR with commentary of VĒṄKAṬĀCĀRYAR.

Incomplete.

Beginning :

பெரிய திருமொழி

உரையுடன்

(4-ம் பத்து, 2-ம் திரு)

கோயில் விரோதி நிரஸனமும் பண்ணி ஆஸ்ரித ரக்ஷணமும் பண்ணின வன். இன்னமும் இவற்றுக்குப் பாங்கான விடமென்று. . . . .

End :

அவன் விரும்பி வர்த்திக்கிற தேசம் உகந்தினிது "காரணகவெ ஸவெரஃ வடுயிகஃ உயரொகஉ" என்றுடியெயாலே * * * *

(கு - பு.)—

இது, வடமொழி மூவருடக் காடலாக்கு 1453 (d)-2 நம்பரில் குறிக்கப் பெற்றதும் அதே நம்பர் கொடுத்துத் தென்மொழி மூவருடக் காடலாகின் 2-ஆம் பாகத்தில் வடமொழிப் பகுதியில் விரிவாக வருணிக்கப் பெற்றிருப் பதுமான ஓர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். பெரிய திருமொழியினது 4-ஆம் பத்திலுள்ள 2 முதல் 9 ஈறுன 8 திரு மொழிகளுக்குமட்டுமே இப் பிரதியில் உரை காணப்படுகின்றனது. இதினின் றும் இவ்வுரையாசிரியர் யாரெனப் புலப்படவில்லை. ஆயினும் மூலப்ரதி தியின் குறிப்பிலும், இப்பிரதியின் இறுதியிலும் அவர் வேங்கடாசாரியர் ஆக இருக்கலாமெனக் குறிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணங்கள் ஒன் றும் கூறப்படவில்லை. பெரியவாச்சான் பிள்ளை யியற்றியுள்ள உரையினும் இது வேறுயது. விரிவாகவே எழுதப்பட்டுள்ளது.

R. No. 1509.

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 50. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 1,250 granthas.

Restored in 1945–46 from a MS. described under R. No. 1453 (a) (1) of the Sanskrit T.C., Vol. II-B, and in the Sanskrit part of the T.T.C., Vol. II.

திருமொழிஸாரம் by வேங்கடேசர்.

TIRUMOḶISĀRAM by VĒṄKAṬĒŚAR.

Complete.

Beginning :

ஸ்ரீ :

திருமொழி ஸாரம்.

நம்மாசார்யர்களுக்கு பூர்வோத்தர ரஹஸ்ய த்ரயத்திலுங் காட்டில் வாக்ய த்ரயத்தாலும் ஸ்வரூபாகாரரூபாதிவோபாயோபாயாநுஷ்டாந ப்ராப்யப்ராப்திப்ரதிபாதக மாகையாலே ஸகலஸாரஸங்கிதமாயிருந்துள்ள த்ரிரஹஸ்யமான மந்த்ரரத்நத்தில் ஸகலார்த்தங்களாலே ப்ரதிபாதிக்கப் படுகிற அர்த்தங்கள்பத்து.

அவையாவன :—

* * * *

End :

‘உலகமளந்த பொன்னடியை யடைந்து’ என்றும் ஶரணத்வம் சொல்லுகையாலே ஸங்க்ரஹமும் இதுவே. ‘வெஞ்சிங்கத்தரி’ என்றதுக்கும் ‘யோகம் நாரஸிம்ஹமாஸ்திதம் தமேவஸ்ஸதா ஸந்திஷ்ட’ என்று இதுவே ஸங்க்ரஹம். விஷயங்களில் இந் நாலுமிறே இத்திருமொழியில் ப்ரதிபாதிதங்கள். இப்படிக் கற்றவர்க்கு ஸங்க்ரஹம் சொல்லித் தலைக்கட்டினாராயிற்று. ‖ ஸ்ரீ:‖

Colophon :

मूर्धा वहन् शासनमीश्वरस्य नागाह्वपुर्याः पुरुषोत्तमस्य ।
कलिघ्नसूक्तौ व्यवृणोद्धि वादिभीकारिसूनुर्दशकं तदीयम् ॥
श्रीकृष्णसूरेरनुसृत्य टीकां यं कञ्जनाभाभिदधद्विशेषम् ।
गुरोः प्रसत्त्यै रुचिरोपयन्तुः श्रीवेङ्कटेशो विवृतिं व्यतानीत् ॥

(கு. - பு.)—

இது வடமொழி மூவருடக் காசலாக்கு 1453 *o* (1)-ஆம் நம்பரில் குறிக்கப்பட்டதும் அதே எண்ணிட்டுத் தென்மொழி மூவருடக் காட்லாக்கின் 2-ஆம் பாகத்தில் வடமொழித் தொகுதியில் வருணிக்கப்பட்டதுமான ஒரு பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். திருமங்கையாழ்வாராலியற்றப்பட்டுள்ள ‘பெரிய திருமொழி’யினது பொருளை ஸாரமாக எடுத்துக் கூறுகின்றமையின் இந் நூல் இப்பெயர்த்தாயிற்று. பெரும்பாலும் அத் திருமொழியின் உரையான பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தையும் தழுவி நிற்கின்றது. இங்கு குறிக்கப்பட்டுள்ள க்ருஷ்ணஸூரி யென்பவரே பெரியவாச்சான் பிள்ளையாவர். வேங்கடேச ரென்பவரே இந் நூலை யியற்றியவராவார். ‘வாதி பயங்கர’ வமிசத்தில் இவர் தோன்றியதாகக் குறிக்கப் பட்டுள்ளது. இவர் தந்தை பெயர் இன்னதென விசேடித்துக் குறிக்கப்படவில்லை. திருநாராயணபுரத்துத் திருமாலின்மீது இந் நூலாசிரியராலியற்றப் பட்டதாக மூலப் பிரதியின் குறிப்பில் குறிக்கப்பட்டுள்ள வடமொழித் தோத்திரங்கள் இப் பிரதியில் 41-ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளன. இந் நூல் மணிப்ரவாள மெனப்படும் முறையைத் தழுவி யெழுதப்பட்டுள்ளது.

R. No. 1510.

Paper. 10½ × 9½ inches. Foll. 3. Lines, 20 on a page. Tamil and Telugu. Condition, good. New. Extent, 50 granthas.

Restored in 1945–46 from a MS described under D. No. 3291 and Taylor's Catalogue No. 800, page 351.

திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் திருப்பணிமாலை தெலுங்கு உரையுடன்.

TIRUNĀRĀYAṆAPURAM VĒDANĀRĀYAṆAPPERUMĀḶ TIRUPPAṆIMĀLAI with Telugu commentary.

Complete.

Beginning :

ஸ்ரீ :

திருச்சிறுப்பள்ளி கசுபா விட்டுக்கட்டி தாலுக்கா திருநாராயணபுரம் தேவஸ்தானம் திருப்பணிமாலை. தெலுங்கு உரையுடன்.

పూర్వపు రాజులయొక్క పేళ్లు వారువారు చేసిన ధర్మా
లు వివరం ॥ పాటలు ॥ అందుకు అర్థం ॥

ஆதியிலே திரிபுவன சக்கிரவர்த்தி
யானந்த மணிமாடங்கள் தான்
வேதியர்கள் முனிவரர் திருப்
பிரதிட்டையைப் பண்ணி
வீதி யணியணியாய் வாழி
மானுளவகுள விண்டலம் வெல்லு
மதுர கவி யெதிராசர் மகுடந் தந்த
விதி.........சக்கிரவர்த்திராயன்
நீள்நிலத்தில் நெய. . . . . யாமே. (க)

End :

கனகமணி கசித நவகன கொம்பு
மகர கொண்டை கஸ்தூரி திருநாமமுங்
கலியாணமான புஜ சங்க சக்கிரங்களும்
கற்........ல் தம சகளையுங்
கனக நக கிரி கேறிம..தி....தேலகா-ம்
க மணீயவடி வில்லையுங்கண்ட சரமாலையும்
குண்டல....கேகனுங் காஞ்சிமணி கடிசூத்திரமுந்
சனகுலமணிதிலக....சீதாபிராட்டியாற்
சிருங்காரமணி மாலையுஞ்
சகன்மோக கரமான பாண்டியக் கொண்டையுஞ்
சவுந்தரிய திருவாசியும்
வனசமுனி மதிமேவு வேதநாராயணன் மனமகிழ வெகு..த்தனை
வகுளபூஷண ராசமணி சக கீர்த்தியும்
வசுமதியில் மிகவாழியே. (௫)

నవరత్న ఖచితముగా వుండబడ్డఖనముచాత

ను మకరగా ....తిరునామమున్ను శుభకర

ముగా వుండబడ్డషువంటి కళలచాతశో.........

భుజి చక్రములున్ను ఘనకనకగిరిగిరిమ

జనులు సంతోషపడేటట్టుగానున్ను 'శ్రీ వేద

నారాయణస్వామి' సంతోషపడేటట్లుగా

యిచ్చెను. యేమండేన.........భూషణంబులు

.........చక్రవర్తి అనేరాజాయొక్క కీర్తిశుభం

గావుండుగాక ॥

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3291-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். இந் நூல் டைலர் காட்லாக்கில் 351-ஆம் பக்கத்தில் 800-ஆம் நம்பரிலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. மிகப் பிழையுடனிருக்கிறது. இது பற்றிய மற்றைய விபரங்களை இதனது மூலப் பிரதியின் குறிப்பிற் காண்க.

R. No. 1511.

Paper. 10½ × 9½ inches. Foll. 79. Lines 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent, 2,000 granthas.

Transcribed in 1945-46 from a MS. of Sri V. M. Gopalakrishnamachariyar, T.P. Koil Street, Triplicane, Madras.

பிருந்தாரணியமாகாத்துமியம், அல்லது திருவல்லிக்கேணி மாகாத்துமியம் உரையுடன்.

BṚINDĀRAṆIYA MĀHĀTTUMIYAM or TIRŪVALLIKKĒṆI MĀHĀTTUMIYAM with Tamil Commentary.

Complete.

Beginning :

ஶ்ரீ:

'ப்ருந்தாரண்ய மாஹாத்ம்யம்'

என்ற

திருவல்லிக்கேணி மாகாத்மியம்

ஹரி: ஓம்.

ஶ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் || (க)

* * * *

(நூல்)

தேவதேவ மஹாதேவ நீலகண்ட ஜகத்குரோ |
ஶ்ருதம் மயா திவ்யதேஶாநாம் ஸமஸ்தம் மாஹாத்ம்யம் விஸ்தரேண ஸதாஶிவ ||

வாரீர்! தேவர்களுக்குத் தேவதையாய் நீலகண்டராய் மஹாதேவ நாமகரான ஜகத் குருவே! எம்பெருமானுடைய திவ்விய தேசங்களுடைய ஸமஸ்தமான மாஹாத்துமியமானது நன்றாகவென்னாலே கேட்கப்பட்டது. **(க)**

* * *

Colophon :

இதி ஶ்ரீப்ரஹ்மாண்டபுராணே
ஈஶ்வர நாரத ஸம்வாதே
ஶ்ரீவ்ருக்ஷாரண்ய மாஹாத்ம்யே
ப்ரதமோத்யாய:

End :

ஶ்ருண்வந் படந்லிகந்வாபி
தயவா ஶ்ராவயந் பராந் |
கோஶஸ்தம் வா நரோ ஹாத்ம்யம்
வைகுண்டே மோததே ஸதா ||

உரை—எந்த பக்திமானான ஹாகவதனானவன் ஸ்ரீஹாவநமாஹாத்மியத்தைக் கேளாநின்றுகொண்டும், படியாநின்றுகொண்டும், எழுதாநின்றுகொண்டும், இந்த ஸ்ரீ கோசத்தைத் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளா நின்றுகொண்டும் [இந்த வாழவத்தை] யிதரர்களைக் கேட்பியா நின்றுகொண்டும், இருக்கிறானோ; அந்த மகாபாகவதனானவன் ஸ்ரீவைகுண்டத்திலே "தேவிமாராவார் திருமகள் பூமி" யென்கிற படியே நித்ய முக்தர்களாலே ஸேவ்யமானனாய் ஸ்ரீபூமி நீளா ஸமேதனாயின் னுயும் பெரிய பிராட்டியார் முதலான நாச்சிமார்களோடே வீற்றிருந்து ஏழுலகந்தனிக்கோல் செல்ல எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ வைகுண்ட நாயனான ஸ்ரீய: பதிக்கு "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்கிறபடியே நித்யஸூரிகளோடே ஒரு கோவையாய் ஸம்ஸாரஸாகரநிவாரணாய் வாழ்ந்திடுவன்.

Colophon :

இதி ஶ்ரீப்ரஹ்மாண்டபுராணே
ஈஶ்வர நாரத ஸம்வாதே
ஶ்ரீ வ்ருக்ஷாரண்ய மாஹாத்ம்யே
த்விதீயோத்யாய:
ஸமாப்தோயம் க்ரந்த: |

* *

இது கலியுகாப்தம் ௪௲௯௰௯, ஶாலிவாஹந ஶகாப்தம் ௲௭௱௰௪, ப்ரபவ வாதிஶகாப்தம் (8) எட்டுக்குமேல் செல்லாநின்ற யுவஸம் மாசிமீ ௨௪உ ஞாயிற்றுக்கிழமை ௨ஶுக்லா, பூர்வபல்குநீ நக்ஷத்திரத்தில் 'வைத்த மாநிதி' முடும்பை நரஸிம்மாச்சாரியருக்கு (67) அறுபத்தேழாவது வயதிலே எழுதபபட்டது.

(கு:- பு.)—

இது சென்னை [திருவல்லிக்கேணி] துளு (தெளி) சிங்கப் பெருமாள்கோயில் தெருவிலுள்ள வை. மு. ஸ்ரீ கோபாலகிருஷ்ணமாசார்யரவர்களிடமிருந்த தோர் பிரதியைப் பார்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும் 'திருவல்லிக்கேணி' யெனத் தற்காலம் வழங்கப்பெற்றுவரும் ப்ருந்தாவந க்ஷேத்திரத்தினது வரலாற்றையும் அதுள் ஐந்து விதமாயெழுந்தருளா நிற்கும் திருமாலி னது பெருமையையும் அவரது அருள்பெற்று நற்கதியடைந்தோர் இன்னின்னு ரென்பதையும் மற்றும் சில விஷயங்களையும் விளக்கும் பிருமாண்ட புராணத் தைச்சார்ந்ததோர் வட மொழி நூலேயாகுமிது. இப்பிரதியில் இப்பகுதி ஓர் தமிழுரையுடன் இருக்கிறது. மற்று, இத்தலத்துக்குக் "கைரவிணி க்ஷேத்திரம்" எனவும் ஒரு பேர் உளது. உரை நடை சாதாரணமானதும் மணிப்ரவாள முறையிலமைந்ததுமாயுள்ளது. ஒன்று முதல் பத்து அத்தி யாயங்களில் இது பூர்த்தியாயிருக்கின்றது. இதே பெயரில் இப்பகுதிக்கோர் மொழி பெயர்ப்புப் போன்ற வசன நூல் ஒன்று மயிலை கொ. பட்டாபிராம முதலியாரவர்களாலெழுதப்பட்டு அச்சிடவும் பட்டிருக்கிறது. அதன் காட் லாக்கு நம்பர் 1213 ஆகும். சென்னை ஸ்ரீ வைஷ்ணவ முத்ராக்ஷரசாலையத்தில் 1928-ஆம் ஆண்டில் இது பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

R. No. 1512.

Paper. 10½ × 9½ inches. Foll. 113. Lines 20 on a page. Tamil and Grantha. Condition, good. New. Extent 2,700 granthas.

Restored in 1945–46 from a MS. described under R. No. 421.

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம் by திருவாய் மொழிப்பிள்ளை.

ŚRĪVACANABHŪṢAṆAVYĀKHYĀNAM By TIRUVĀY MOḶIPPIḶḶAI.

Complete.

Beginning :

ஸ்ரீ:

ஸ்ரீ வசன பூஷண வ்யாக்யானம்.

நம: ஸ்ரீஶைல நாதாய குந்தீ நகரஜந்மநே |
ப்ரஸாதலப்தபரம ப்ராப்யகைங்கர்யஶாலிநே ||
ஶ்ரீமதே ஶேஷகம் வந்தே தேவராஜ தயாஶ்ரயம் |
ஸர்வோபகாரஞ்சா ப்ரபந்நஸ்ய ப்ராப்யப்ராபகயோஸ்ஸம ஸா
தரம் ||

பிள்ளைலோகசார்யார் திருவடிகளே சரணம்.
திருவாய் மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரிய: பதியாய் அவாப்தஸமஸ்த காமனுய் ஸகல கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே 'அவிபாகாபந்நாநி' க்ரமத்தில் சொல்லுகிறபடியே கரணகளேபர விதுராய் போகமோக்ஷ ஶூந்யரான சேதநற்கு கரணகளேபரங்களைக் கொடுத்து இவர்களுக்கு புருஷார்த்த தத்த்வ யாதாத்ம்ய ஜ்ஞாநம் பிறக்கைக்காக வேதத்தையும் வேதோபப்ருஹ்மணங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களையும் கொடுத்தருள அவற்றில் சொல்லுகிற தத்த்வஹித புருஷார்த்தங்கள் ஒருவர்க்கும் அவகாஹித்தறியவரிதாகையாலே ஸர்வஜ்ஞ ஸ்வதந்த்ரரான நம்மாசார்யர்களருளிச்செய்த வசந விசேஷங்களாலே அத்யுத்தமமான அர்த்த விசேஷங்களைப் பிள்ளைப் தம்பரம க்ருபையாலே இவ்வசன பூஷண ப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார் 'வேதார்த்தங்கள் அறிதியிடுவது.'

* * * *

End :

ஸர்வ விஷயமும் ஸர்வோபகாரக்குமென்று முதலிலே ப்ராப்யஸ்வரூப வைபவமும் உபாய வைபவமும் என்று அடங்கி உபக்ரமித்த உபாய யாதாத்ம்யத்தையும் தத்ஸ்வரூப விசேஷத்தையும் விசதமாம்படியருளிச் செய்து தலைக்கட்டினார்.

* * * *

திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே

சரணம்.

இதில் குறையை வானமாமலை ஆத்தான் ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதி முடித்தார்.

ஸம்பூர்ணம்

ஸ்ரீ:

(கு. - பு.)—

இது மூவருடக்காட்லாக்கு 421-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். பிள்ளை லோகாசார்யரவர்களாலியற்றப் பட்டுள்ள பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஒன்றான "ஸ்ரீ வசன பூஷணம்" என்னும் நூலுக்கு உரையாக அமைந்துள்ளது இந்நூல். இதனது மூலப்பிரதியின் குறிப்பில் "இவ்வுரையாசிரியர் மணவாளமாமுனிகளின் ஆசார்யராகிய திருவாய்மொழிப் பிள்ளையென்பர் சிலர். இந்நூலின் தலைப்பில் எழுதப் பட்டுள்ள வாக்கியம் இதற்கு ஆதாரமாகின்றது" எனக் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாக்கியம் இப்பிரதியின் தலைப்பில் காணப்படவில்லை. எழுதாது விடப் பட்டுள்ளது. மூலப்பிரதியினது முதல் ஏட்டுக்கு முன்னர் உள்ள தொரு

வேட்டின் முன் பக்கத்தில் அவ்வாக்கியம் காணக்கிடப்பது உண்மையாயினும் மற்றும் சில குறிப்புகள் பின் பக்கத்தில் எழுதப்பட்டிருப்பதை நோக்கின் அது இந்நூல் பற்றியதாகவில்லை. துடரெண்ணும் கொடுக்கப்படவில்லை ஆகவே அது இந்நூலைச் சார்ந்ததா அல்லது வேறு வென்பது தெளிவாக வில்லை. ஆனது பற்றியே அது இந்நூலின் தலைப்பில் எழுதாது விடப்பட்டதுபோலும் ஜனன்யாசார்யர், (ஆய்), மணவாளமாமுனிகள் என்பாரும் இது போன்று உரை யெழுதி யிருக்கிறார்கள். ஜகந்நாதர் என்றவரொருவர் இந்த ஸ்ரீவசனபூஷணத்திற்கு வட மொழியிலேயே ஓர் உரையுமியற்றி யிருக்கிறார். இந்நூலாரம்பத்துக்குறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீநடேசர் என்பவரே திருவாய்மொழிப்பிள்ளையா வேறு என்பது போன்றவை ஆய்ந்து சொல்லத்தக்கது. இப்பிரதியினிறுதியில் "இதில் குறையை வானமாமலை ஆத்தான் ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதி முடித்தார்," எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எது குறை, என்ன எழுதியிருக்கிறு ரென்பதும் ஆராயப்பாலது.

R. No. 1513.

Paper. 10¼×9¼ inches. Foll. 12. Lines, 20 on a page. Tamil. Condition, Good. New. Extent, 250 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2177.

தேசிங்குராஜன் கதை.
DĒSIṄGURĀJAN KATHAI.

Complete.

Beginning :

தேசிங்குராசன் கதை.

முந்தி முந்தி விநாயகனே முக்குழலாள் சரஸ்வதியே
கந்தனுக்கும் முன் பிறந்த கணபதியே முன் நடவாய்.

* * * *

End :

இக்கதையைக் கேட்டவர்கள் இயல்புறவே வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்திடுவார் அறுகதுபோல் வேரோடி
மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்.

* * * *

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு **2177**-ஆம் நம்பர் பிரிதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பட்டதாகும். திண்டிவனத்தை யடுத்துள்ள 'செஞ்சிக் கோட்டையை' யாண்டுவந்த 'தேசிங்கு ராச' னது சரித்திரத்தை யிது கூறுவதாகும். அச்சுப்பிரதிக்கும் இதற்கும் சில விடத்து மாறுபாடு காணகிறது. இது மிகச்சுருக்கமாயுள்ளது.

இயற்றியவர் யாரெனத்தெரியவில்லை,

R. No. 1514.

Paper. 10½ × 9½ inches. Foll. 135. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 3,000 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2178.

புலந்திரன் தூது.
PULANDIRAN TŪDU.

Incomplete.

Beginning : ஸ்ரீ:

புலந்திரன் தூது.

இடும்பனிடும் பனவன் எத்தரையனப்போது
இவனிருக்க வரிதானுன் என்னுரைப்பானம்பலத்தே
உத்தமர்கள் வேந்தன் ஒச்சியங்கள் சொல்லாதே
தூதுக்குப் போவதற்குச் சொல்லி . . . பெருமாளே
யாரை நாம் தூதுக்குப் போவிடுவோ மானுடையீர்

. . . .

அவள் பாம்புகளோடே பிறந்த பதிவிருதை

* * * * * *

தர்மர் பெருமாளுந் தாமறிவா ரென்றிருந்தோம்
மன்னர் பெருமாளே வழக்கழிவு சொன்னுரே
ஏலங்குழலாளே எழுத்துப்படி தப்பாது
தலையில் விதிப்படிகள் தப்பாதொருக்காலும்

* * * * * *

End :

. . . . க் கொடுத்தவரும்
யின்னுஞ் சொல்லென்று வினிதாகக் கேட்டவரும்
பஞ்சவர்கள் பேறுபெத்துப் பாருலகை யாண்டிருப்பார்
அவ்வருட பேறு பெத்து அரசுமிக வாழ்வார்
ஆல்போலத் தழைத்து அருகுபோல் வேரூேடி
மூங்கில்போலே சுத்தம் முகியாமல் வாழ்ந்திருப்பர்
கைலாசம் வைகுந்தம் காண வருள் பெறுவர்.

குருவே துணை.

* * * * *

Colophon :

முற்றும்.

* * * * *

குருவே துணை.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2178-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பாண்டிய வமுசத்துள் தோன்றிப் பஞ்சவரு ளொருவனுன 'அர்ச்சுனனே' மணந்த 'அல்லி யரசாணி'யின் புதல்வ

ருவான் 'புலந்திரன்,' இளமையிலேயே அதி வீரத்துடனும் தைரியத்துடனும் துரியோதனனது அவையுட்ச் சென்று அவனது சூழ்ச்சிகளுக்குட்படாமல் அங்க நாட்டரசனான கர்ணனது உதவியுங் கொண்டு அவனை அவமதித்து அவன் நாட்டுள்ள அங்காடிகளைக் கொள்ளையிட்டும் அவற்றிற்குத் தீயிட்டும் 'மதுரை' மானகர்த் திரும்புகின்றான். இருஷ்ணனது தூதைப் பார்த்து அதைப்போன்றே இப் புலந்திரனது தூதையும் இந் நூலாசிரியர் கற்பனை செய்துள்ளாரெனத் தோற்றுகிறது. நன்றாயிருக்கிறது. நடை சாதாரணமானது. மற்றவைக்கு மூலப்பிரதியின் குறிப்பைக்கண்டுகொள்ளவும். இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை.

R. No. 1515.

Paper. 13½ × 8½ inches. Foll. 32. Lines, 27 on a page. Tamil. Condition, good. New. Extent, 300 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2302.

திருவரங்கப்பதிற்றுப்பத்தந்தாதி by வேங்கடாசல தாசன்.

TIRUVARAṄGAPPADIṞṞUPPATTANTĀDI by VĒṄKAṬĀCALA-DĀSAN.

Complete.

Beginning :

திருவரங்கப்பதிற்றுப்

பத்தந்தாதி

வேங்கடாசல தாசன்.

ஆழ்வார் வணக்கம்.

காப்பு.

தென்பாற் சிறந்தொளிர் சீரரங்கேசர் திருவடிமே
லன்பாற பதிற்றுப பத்தந்தாதி சூட்டியருள் பெறநாந்
தன்பாற் கருணை பெருகி மறைத்தமிழ் தந்துலகை
நன்பாற் பொருந்திய மாறன் பதாம்புய நாடுதுமே.

*   *   *   *

நூல்.

உலக மெங்கு நிறைந்த பரப்பிரமமாகி
யொளிர் திருநாராயண வென்றுயர் நால்வேதம்
பலகலை நூலயனரன் வானவருமேத்தப்
பதின்மரொடு பாகவதர் பணிந்து போற்ற
வலகில் புகழார்ந்த திருவரங்க மேவி
யனந்தன்மேற் கண்வளரு மாதிமூர்த்தி
இலகிய நன்றிரு வடியே சரணம் புக்க
வெளியேனை யருள்புரிந்தா னெம்பிரானே (க)

*   *   *   *

End :

தேவரெல்லாந் தொழுதேத்துந் திருவரங்கக்
  கோயில் வளர் தேவதேவன்
காவலெல்லா மியாவருக்கு மாயினுன்
  அடியேற்குக் கதியுமானுன்
மூவரெலா முடையவரென் பாரவரு
  ளிவனே மெய்ம்முதல் வனுறு
னேவலிலா முத்தொழிற்கு மொருமூர்த்தி
  யுளனுறு னுலகுந் தானே. (ம)

Colophon :

சம்பூர்ணம்.

ஸ்ரீஶைலேச ராமாநுஜாய நம:

பிறங்குலக மிசையோங்கு பெருவீடாந்
  திருவரங்கம் பெரிய கோவில்
அறங்குலவ வருள்புரியு மழகிய நம்
  பெருமாள் பொன்னடி மேலன்பின்
நிறங்குலவு பதிற்றுப் பத்தந்தாதித்
  தமிழ் மாலே நிலவ மெண்மை
திறங்குலவு குணநேசன் வேங்கடா
  சல தாசன் செய்தான் மாதோ. (௱க)

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2302-ஆம் நம்பர் பிரதியைப்பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். ஆசிரியர் வேங்கடாசலதாஸன். நடை நன்ருயுள்ளது. அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லே. ஒவ்வோரேட்டிலும் ஒரு பக்கமே எழுதப்பட்டுள்ளது.

R. No. 1516.

Paper. 13½ × 8½ inches. Foll. 30. Lines, 20 to 25 on a page. Tamil. Condition, good. New. Extent, 750 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 3279.

அண்ணன் திருமாளிகை ஒழுகு.

ANNAN TIRUMĀLIKAI OLUKU.

Complete.

Beginning :

ஸ்ரீராமஜயம்.

அண்ணன் திருமாளிகை ஒழுகுக்கு நக்கல்.

பெரிய பெருமாள் திருவோலக்கத்தில் முதலியாண்டானுக்கு வரிசை சாதித்தருளினதற்கு வயுணம்.

பெரிய பெருமாள் ' பெருமாள் கோயில ' நின்றும் உடையவரை எழுந் தருளப் பண்ணிவித்து உபயவிபூதி ஸ்ரீ காரியமும் நம்முடைய ஆதீன மாக்கினோம். நீர் நன்றாக வாராய்ந்து நங்காரியத்தில் ஒன்றுங் குறை * * * * *

அசாது நபாபு சாயபு அவர்கள் பைஸல் நாமா பண்ணிக் கொடுத்ததுக்கு நக்கல்.

சருக்காரிலிருந்து பைசல நாமா யெழுதினபடி பைசல்நாமா ஆவது இப்பவும் ' கந்தாடை ' அண்ணங்கார் வரதாச்சாரியார் நபாபு இசாமுல முலுக்கு பக்தரவர்கள் அசூரிலே பிருது சொல்லிக்கொண்டார். என்ன வென்றால் * * * * * * * * * * * * * * * * * * *

சாட்சி சுப்பராயர் எழுதிக்கொடுத்த வாக்குமூலம்—கும்பினியார் நாவே யிலே * * * * * * * * * * * * * * * * * * *

End :

ஒரு வேளையில் இவாளிலே ஒருத்தர் இந்தத் தீர்ப்புக்கு அசித்தி பண்ணினால் சருக்காருக்கு நெறத்தாய் மிராசும் விட்டுச் சருக்கார் ஆக்கி னைக்கு உள்பட்டவராவான்.

௲உ௱௰க (1211) ஷுப யிசாரிசபா (?) ஸ்ரீ மெகஉ நளஷுப ஆடிஸ்ரீ உ௰சஉ இந்தக் காகிதம் எழுதின நன்மைக்கு அட்டவணை.

குமாரசாமி முதலி.

Colophon :

இந்தப்படி ஸ்ரீரெங்கத்திலே யிருக்கும் ' அண்ணனய்யங்கார் ' கிட்டவிருந்த பைசல் நாமாவுக்கு நக்கல்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3279-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இதில் ' கோயிற் கந்தாடை ' யண்ணனது திரு மாளிகையின் மிராசுதார்களின் வாரிசுகள் பற்றின விஷயங்களும் நடுவே ஏற்பட்ட ஒரு சச்சரவு அதன் விசாரணைத் தீர்ப்பு பற்றிய விஷயங்களும் கூறப்பட்டுள்ளன. அதாவது, உடையவர் தொடக்கமாக முதலி ஆண்டான், அவரது குமாரர் கந்தாடையாண்டான், அவர் குமாரர் கந்தாடை தோழப்பர் வரை மிராசு வர அவர் காலத்து அங்கு வந்த ' கூரத்தாழ்வான் ' குடி வந்த ' கூரநாராயண ' ஜீயருக்கும் அவருக்கும் சிறிது நாள் சிநேகபாவமும் பின்னர் பொது ஜனங்கள் மூலம் சச்சரவும் ஏற்பட்டு வியாச்சியம் நடக்க ' நபாபு கோர்ட்டில் ' தீர்ப்பு அளிக்கப்பட்டதான விஷயங்கள் இதில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. ' கிருமிகண்ட சோழன் ' குமாரன் ' குலோத்துங்க சோழன் ' காலத்து இது நடந்ததாகத் தெரிகிறது.? அவன் தகப்பன் இம் மிரா சுக்கு விரோதமாய் நடந்துகொண்டதாகவும் அதன் பரிஹாரமாய்த்தான் இதற்குப் பொருளுதவி செய்து அனுகூலமா யிருந்ததாகவும், இன்னோ ரன்ன இன்னும் பல வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன. முற்று மிருக் கின்றது. இச் சாஸனம் ' ஸ்ரீரங்கம் அண்ணனய்யங்கா 'ரிட முள்ளதைப்பார்த்து எழுதப்பட்டதாகவுங் குறிப்பிடப்பட்டுள்ளது.

R. No. 1517

Paper. 13½ × 8½ inches. Foll. 29. Lines, 18–23 on a page. Tamil. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2791.

டில்லி மகாராசாக்கள் கைபீயத்து.
DILLI MAHĀRĀJAKKAḶ KAIPĪDU.

Same work as that described under R. No. 335 *b*.

Complete.

Beginning :

டில்லி மகாராஜாக்கள் கைபீயது.

இராஜாக்கள் திருமுடி வர்க்கம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ மஹா மண்டலேசுவர ஆறுவரை கண்ட அசுர நாராயண தியாக மகா சமுத்திர யிம்மடி தோராத தேவராய கண்ட மூவருய கண்டர் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதார் * * * * * * * * * * * *

தாம்பிர சாசன நக்கல் 2.

ராஜா 'விசுவனாத நாயகர்' திரிசிரபுரங் கோட்டை மதுரைக் கோட்டைப் பாளையங்கோட்டை யிம் மூன்றுங் கட்டிவைத்துத் தக்ஷிணம் பஞ்ச திருவடி ராசாக்களையும் செயித்துச் சீமையெல்லாம் சுவாதீனம் பண்ணித் தேவாலயப் பிரம்மாலயங்களும் பிரதிஷ்டை பண்ணி நதிகளுக்கு * * * * * * * * *

மராட்டியருக்கு முன் 'தஞ்சை' நகரத்தில் 'விஜயராகவ நாயக்கர்' அவர்கள் முதல் அவர்கள் வம்சஸ்தார் ராஜ்யம் ஆண்ட சரித்திரம் க.

* * * * *

End :

மதுரையில் 'திருமலை நாயக்கர்' அவர்கள் அரண்மனையில் புதையலெடுத்துக் கவர்மெண்டுக்கு வந்து போன பணம் தங்களிடத்திற்கு வந்ததை அதற்குத் தாங்கள் கேட்ட விவரத்திற்கு அந்தப் பணங்களில் போட்டிருக்கிற முத்திரைக்கும் அந்த . . . த்தற்கு விவரமும் . . . . . . எழுதிக்கொடுத்த சரித்திரம். (க)

. . . . (கூ)

ஆக வகை ட-க்குச் சரித்திரம் (டூ௰க)

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2791-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். இப் பிரதியை இரு பகுதிகளாகப் பிரிக்கலாமெனத் தோற்றுகிறது. அஃதுள் முற் பகுதியில், துவாபர யுகக் கடைசியில் 'அபிமன்யு' புத்திரன் 'பரீட்சித்து' முதல் 'சாரங்கதரன்' வரை 'சந்திர' வமிசம் தொடர்ந்து நின்ற விஷயமும் அவர்களது மொத்த ஆட்சி காலம் 329 என்றும், அதன் பின்னர் புரூரவன், மாந்தாதா முதல் போஜ ராஜன் வரை அவ்வப்பொழுது ஆண்டு வந்த பல அரசர்களின்

பெயரும் காலமும் அதன் பின்னர் வடதேசத்து பூமகாராசாவினது ஆட்சி மெதுவாகத் தென்னாட்டுக்குப் பரவியதும் பின்பு விமலகேதனவரசன காலத்தில் தொண்டமண்டலத்துக் காஞ்சி நகரில் கனகராயர் என்பவர் 64 ஊர்களின் மிராசுபெற்றதும் அவ்வூர்களின் விபரமும் பிறகு போஜ மன்வதம் நின்று ராஜேந்திர மகாராசா முதல் சென்ன பள்ளாள மகா ராஜா வரை ஆண்டுவந்த பலவரசர்களின் பெயரும் வருடங்களும், அவன் 56 தேயத்தரசருக்கும் பங்குபோட்டு பஞ்சலோகமிட்டுக் காவேரிக்கு அணைக் கட்டியதும், அப்பொழுது வராது நின்ற காச்மீர தேசத்தரசனுன விக்ரமசோழன் பின்பு கொண்டுவந்த பணத்தைக்கொண்டு பல அக்ர ஹாரங்கள், கோயில், ஏறிகள், நிருமாணித்ததும் அதன் பிறகு ஆண்டு வந்த பலவரசருள் சிலரான ராயர் பட்டம் பெற்ற மன்னவர்களில் ஒருவ ரான ‘ இருஷ்ணராயர் ’ ஆட்சி செய்யுங் காலத்தில், ஒரு நாள் அரச சபையில் வந்து ஒரு சாஸ்திரி சொன்ன வாக்கியத்திற்கு மற்றவர் செய்த வியாக் யானத்தைக் கேட்டுக் கோபமடைந்த ‘ அப்பாச்சி ’ யென்னுமோர் அமைச்சன் தான் ஒரு பொருள் கூற அதை மற்றவரும் அரசனும் மறுத்து இதை ருசிப்பிக்காவிட்டால் தண்டனையிடப்படுமெனக் கூறி அரசன் எட்டு நாள் கால வரை கொடுக்க அப்பாச்சி ஓர் இடையனைச் சூழ்ச்சியால் சாமியா ராக்கி அரசனது இருக்கையில் வீற்றிருக்கச் செய்ததும் அரசனை அவரிடம் மறுநாட் காலையில் வந்து வரங்கேட்கச் செய்ததும் அதற்குள் இரகசிய மான சுரங்கத்தால் அவனை வெளியேற்றியதும் அரசன் வரும்பொழுது அவன் அவ்விடத்து இல்லாமல் வெளியேறியதைக் கண்டு கவலையுற்ற வரசன் தன தரண்மனை சென்றதும், பின்னர் அப்பாசியை முன சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் கேட்டதுமான பகுதி வரைக்குமே கூறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சி மேற்கொண்டு காணப்படவில்லை. மூவருடக் காட்லாக்கு 335 (பி) நம்பரில் “ இராசாக்கள் திருமுடி வர்க்கம் ” என்றதொரு நூல் வருணிக்கப்பட்டுள்ளது. அதிலும் ஆதிமுதல் இதுவரைக்குமான பகுதியே காணப்படுகிறது. இப் பிரதியிலோ அதற்குமேல் “ இப்பொழுது . . . கொடுத்ததற்கு விபரம் ” எனத் தொடங்கி—

கள்ளர் ஜாதி சரித்திரம் (க)
மறவர் ஜாதி சரித்திரம் (க)
தொட்டியர் ஜாதி சரித்திரம் (க)
பாம்புலம்மாள் சரித்திரம் (க)
சிக்கந்தர் பாச்சாயி சரித்திரம் (க)
கிருஸ்துவர் சரித்திரம் (க)
பாண்டியன் சரித்திரம் (உ)
கொண்டாரணியத்தில் உரிகட்டித் திருடுகிற சரித்திரம் (க)
அங்கத்தார் சரித்திரம் (க)

என்பது போன்று பதினேரு சரித்திரத்தைக் குறித்து “ ஆகச் சரித்திரம் ௰க ” என்றும் பின்னரும் இவைபோன்று சிலவற்றைக் குறித்து “ ஆக சரித்திரம் ௰ச, ஆக வகை உ-க்கு சரித்திரம் உ௰௫ ” என்றும், அதன் பின்பும் சிலவற்றைக் குறித்து “ (ஆகச் சரித்திரம்) சு,”

ஆக வகை ௩-க்குச் சரித்திரம் ௩டுக" என்றுங் குறிக்கப்பட்டுள்ளது. இவை, யாரால்யாருக்கு எப்பொழுது எவ்விடத்து, எதற்காகக் குறித்துக் கொடுக்கப்பட்டவை யென்பது இதினின்றும் தெளிவாக வில்லை. அந்த வந்தச் சரித்திர விளக்கம் யாதென்பதும் இதில் விரிவுறக் கூறப்பட வில்லை. நடுவெ "தாம்பிர சாஸன நக்கல் உ" எனவும் ஓரிடத்துக் குறிக்கப்பட்டிருக்கிறது. அவை யாருடையவை, யாதுபற்றியவை என்பது போன்ற விஷயங்களும் இதில் தெளிவாகக் கூறப்படவில்லை. இவை யெல்லாங் கொண்டதே பிற்பகுதி. இவ்விரு பகுதிகளுக்கும் தொடர் புண்டா அல்லதா வென்பது நடுப் பகுதியாகவுள்ளதைக்கண்டே கூறல் வேண்டும்.

R. No. 1518.

Paper. 13½ × 8½ inches. Foll. 48. Lines, 20 to 23 on a page. Tamil. Condition, good. New. Extent, 450 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 3088.

தமிழ் மும்மண்டல பண்டையமன்னர் வரலாறு.
TAMIL MUMMANDALA PĀNDAIYA MANNAR VARALĀRU.

Same work as that described under D. No. 2765.

Complete.

Beginning :

தமிழ்.
மும்மண்டல பண்டைய மன்னர்
வரலாறு.

இந்திராக்ஷீயம், தட்சிணதிக்கம், பாண்டிய மண்டலம், சோழமண் டலம், தொண்டைமண்டலம் பூருவீக இராச சரித்திர ஒழுங்கு.

முதலாவது.

முன் பூருவம் இந்த இராச்சியம் தண்டகாரணியம், தாருகாவனம், சடாயுவனம், வேதவனம், மிருகண்டுவனம், பாரத்துவாசர் வனம், பொதிகைவனம் என்றும் மேலுஞ் சொல்லப்பட்ட அனேகம் பெயருடைத் தான வனந்திரம்.

இரண்டாவது.

பூருவ காலத்தில் இராமன், சீதை, இலட்சுமணன் இவர்கள் அயோத் தியிலிருந்து பதினலு வருடம் இந்த வனத்திலே வனவாசம் பண்ணி னூர்கள் *

(2) சோழ ராசாவின் பூருவ விருத்தி இப்படியே உத்தராதியி லிருந்த "தாய்மான் நள்ளி" யென்கிற சோழனுகிற வெள்ளாளன் ? 32-ஆம் வயதிலே முன் சொல்லப்பட்ட அயோத்தி ராசாவாகிற இராமன் சேதுவாகிற இராமேசுவரத்தின் பேரிலே பண்ணின பொய்யான தல புராணத்தை உத்திராதி தேசத்தில் விளங்கப் பண்ணின படியினலே *
* * * * *

இதற்குப் பேர் "**தொண்ணடைமண்டலம்**" தானேயென்று பறை போடு வித்தான். அன்று துவக்கி இன்றளவும் இனிமேல் உலகம் முடியும் அளவுஞ் சோழராசாவின் "தொண்டை மண்டலம், காஞ்சீபுரம்," என்கிற பேராச்சுது * * * அந்தக் குடிகளுக்குத் தொண்டை மண்டலத்து முதலிகள் என்று பேராச்சுது.

End :

இந்தத் தேசத்தைக் காடுவெட்டி நாடாக்கின பூர்வ இராசாக்கள் சோழ பாண்டிய ராச வங்கிஷமே யல்லாமல் மற்ற மறவனுகிற சேதுபதி வடுகராகிற நாயக்கமார், மராட்டிய போசல துலுக்க நவாபுக்கள் சொந்தக் காரர் அல்ல.

இவர்கள் அவலோக காரிகளாய்ச் சதிமானங்களாய்க் கட்டியாண்டபேர் அல்லாமல் சுவயவான்கள் அல்ல. இந்தத் தேசாதிபதியான பூருவ ஆதீன கர்த்தர் சோழன் பாண்டியன் வங்கிஷமும் அற்றுப்போகவில்லை. இருக்கிறுர்கள். எளியவர்களா யிருக்கிறுர்கள். வடுக நாயக்கமார் வங்கிஷம் தஞ்சாவூர் நாயக்கமார் வங்கிஷ(மும்)த்தினரும் இருக்கிறுர்கள்.

திரிசிரபுரம் மதுரை தேச மாண்ட வடுக நாயக்கமார் கோத்திரத்தி னரும் இருக்கிறுர்கள். அவர்களை மேலான சங்கிக்கப்படத்தக்க கும்பினியார் அவர்கள் விசாரிக்குங் காலத்துக்குக் காத்திருக்கிறுர்கள்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3088-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். ஷை காடலாக்கு 2765-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ளநூலும் இந் நூலும் ஒன்றேயாகும். ஆயினும் சிற்சில விடயத்து பாடவேறுபாடு காணப்படுகின்றது; உதாரணமாக நூலின் கடைசி வாக்கியமானது அந் நூலில் "மேலோன கும்பினியால் விசாரிக்கவில்லை" யெனக் காண்கிறது. இந் நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பற்றியே சுருக்கமாகவும் விரிவாகவும் அமைந்துள்ளவையும் முன்பிற் பகுதிகளை விளக்கிக் கூறுவனவா யமைந்துள்ளவையுமான வேறு பல நூல்களுமுள. உதாரணமாக, இந்நூலில் கூறப்பட்டுள்ள "சேதுகாவலன்," தனுக்கோடி காத்த தேவன், அல்லது "சேதுபதி" என்பவனைப்பற்றிக் கூறுவதாகச் "சேதுபதி வரலாறு" என ஒரு நூலிருக்கிறது. அது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3081-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாகச் சோழ பாண்டிய, தொண்டைமண்டலங்கள் பற்றித் தனித்தோ தொகுத்தோ கூறப்படும் விஷயங்களெல்லாம் இஃதுடன் சம்மந்தமுடையவையே யாகும்.

இந் நூலினது விஷயச் சுருக்கமாவது அயோத்தி மன்னனுன இராமன் முன்னர் சேது புராணத்தைச் செய்து உத்திராதியில பொய்ப் பிரசாரம் செய்ய முதன் முதல் அதால் ஏமாற்றமடைந்த குஹன் என்னும் வேடுவன் அரசனது அனுமதியினுலேயே அவனுல் இராமேசுவரத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கத்தைக் காப்பதற்காகச் சேது வந்து, "சேது காவலன்" "தனுக்கோடித் தேவன்" என்ற பெயர்

கொண்டு குடிசையிட்டுத் தனது பரிவாரங்களுடன் வாழ்ந்து வரும் நாளில், இரண்டாவதாக வட நாட்டுப் பண்டிய வேளாள னொருவன் ஏமாற்றத்தால் இங்கு வந்து தரிசித்து இந் நாட்டின் நீர் நில வளங் களா(லி)ழுக்கப்பட்டுத் தன் பணியாட்களைக்கொண்டு காடு வெட்டி நாடாக்கத் தொடங்கி இராமலிங்கத்துக்குங் கோயில் கட்டி மகிமையாக்க இக்காரியங் களில் சேது காவலனது வமிசத்தாரும் கலந்துகொண்டனர். முதல் வந்த பாண்டியனது பெயர் மதுரா நாயகப் பாண்டியன் ஆனதால் தானுக்கிய நாட்டிற்கும் அப்பெயரையே வைத்தான். அதிலிருந்தே மதுரா புரி, மதுரை நகர் என்பது போன்ற பெயர் வழங்கப் பெற்றது. பின்னர், சந்திர பாண்டியன் மலையத்துவஜ பாண்டியன், அழக பாண்டியன், அல்லியரசாணி, முதலான நாற்பத்தெட்டு தலைமுறை 2,137 வருடங்கள் ஆண்டது. அவர்கள் காலத்தில் அவரவர்கள் நாடு நகரம் குளம் ஏரி கோயில்கள் முதலானவற்றைப் பரப்பி செவ்வனே அரசாண்டு வந்தனர். இவர்களாலாளப்பட்டு வந்த மண்டலமே பாண்டிய மண்டலம் ஆகும்.

(2) சோழ மண்டலமாவது :—

மூன்றாவதாக ஏமாற்றமடைந்து, வட நாட்டிலிருந்து முன்கூறிய பாண்டியன் போன்றே தென்னாடுவந்த "தாய்மான் நள்ளி" யென்ற சோழனை வெள்ளாளனும் காடு வெட்டி நாடாக்கத் தொடங்கி முதலில் உண்டாக்கப்பட்ட நாட்டிற்கு அக்காட்டரக்க வரசனான திரிசிரஸின் பெய ரையே வைத்தான். அதுவே "திரிசிரபுரம்" திருச்சிராப்பள்ளி யென வழங்கப்படுகிறது. அங்குள்ளதோர் மலைமீது தன் பெயரால ஓர் லிங் கத்தை அதாவது "தாய்மான லிங்கத்தையும்" பிரதிஷ்டை செய்து கோயிலும் கட்டினான். பின்னர், விண்ணாறு உண்டாக்கிய "விண் சோழன்" காவேரி சரியாக்கிய "காவேரிச் சோழன்," முதலாக "குலோத் துங்க சோழன்" இறுதியாக 44 சோழர்கள் நாடு முதலானவை பரப்பி அரசாண்டு வந்தார்கள். இவர்களா லாளப்பட்டு வந்த மண்டலமே சோழ மண்டலமாம்.

(3) தொண்டை மண்டலமாவது :—

முற்கூறிய சோழருள் கடையனான குலோத்துங்க சோழனுக்கு இருந்த ஓர் பிள்ளை கவீசுவர கம்பனாலே கொல்லப்பட்ட, அச்சோழன் தனது நாடகசாலையிலிருந்த "நாகரத்தினம்" என்னும் ஓர் தாஸி யிடம் களவு நட்புக்கொண்டு யாருமறியாமல் உமாபதி யென்னும் தாதி யின் உதவியினாலே அவள் வீட்டுக்குச் சென்று வந்துகொண்டிருக்கும் நாளையில் ஒருநாள் அவனுக்கு அத்தாஸியிடம் ஓர் ஆண்மகவு பிறக்க அத்தாதி அரசனது கட்டளையின்படியே அக் குழந்தையை யாருமறி யாமல் ஓர் பொற் பாத்திரத்திலிட்டு ஆதொண்டைமாலையும் சூட்டிப் பட்டி னால் பொதிந்து காவேரியின் கரையில் வைத்துப் போனாள். ஒன்று மறியாதவன்போல் அவ்வரசன் மறுநாட் காலையில் வழக்கப்படி பல வந்தணருடன் அங்கு வந்து இது யாதென வினவ அவ் வந்தணர்கள் கடவுளருளெனக் கூறச் சந்தோஷத்துடன் எடுத்துவந்து தன் பட்ட மனைவி யிடம் கொடுக்க அவளும் ஆசையுடன் வளர்க்க வளர்ந்து வந்தது அக் குழந்தை.

பின்னர் வயதுவர அவனுக்குப் பட்டங்கட்டவேணுமென அவ்வரசன் முயற்சிக்க இச் சூழ்ச்சியை முன்னரே அறிந்தும் அறியாதுபோலிருந்த வொரு அமைச்சனின் சூழ்ச்சியால் அது தடைபட அச் சூழ்ச்சியை யறிந்து மறியாதவனுகவே காட்டிக்கொண்ட அவ்வரசனும் இந்த ராச்சி யத்திலிவனுக்குப் பட்டங்கட்டுவதியலாததெனத் தீர்மானித்து மந்திரி யின் உதவி கொண்டே ஏவலாட்கள் மூலம் பிறதேசங்களிலிருந்து ஆண் பெண்கள் விலைக்கு வாங்கி ஒருவரை யொருவர் மணக்கவுஞ் செய்து அவர்களைக்குடிகளாக்கிப் 'பெண்ணை' யாற்றிற்கு வடக்குக் 'காளஹஸ்தி' யாறு வரைக்கும், மேற்கே 'ஆமூர்' கணைவாய் முதல் சமுத்திரம் வரைக்கும் வேலைக்காரரை விட்டுக் காடுவெட்டி நாடாக்கி அங்கு அவர்களைக் குடி யேற்றி அந்நாட்டிற்குத் தலை நகராக 'காஞ்சி'மா நகரும் உண்டாக்கி அதற்குக் கம்பை பாலாறும் உண்டு பண்ணிக் கோயிலுங் கட்டித் தேவ னுக்கு 'ஏகாம்பிரேசுவரன்' என்றும் தேவிக்கும் 'காமாட்சி' யென்றும் பெயரிட்டு அந்நாட்டிற்கு இந் 'நாகி' நாகரத்தின மென்னும் தாஸியின் புதல்வனை அழைத்துச்சென்று பட்டஞ்சூட்டிவைத்து 'ஆதொண்டைமாலை' அணிவிப்பித்ததின் காரணமாய் அவன் பெற்ற 'ஆதொண்டை மான்' என்னும் பெயராலேயே அந்நாட்டையும் வழங்கச் செய்ய விரும்பி அதற்குத் 'தொண்டை மண்டல' மெனவும் பெயரிட்டான். ஆனது பற்றியே அது தொண்டைமண்டலமென வழங்கப்பட்டுவருகிறது. இக் 'குலோத்துங்கன்' மகளை 'வரகுண பாண்டியன்' மணக்கிறன். இவ்வாறான மும்மண்டலங்களின் வரலாற்றையும் இதன பின்னர் இம் மண்டலங்களை யாண்டவர்களின் வரலாற்றையும் இன்னும் பலவான வர லாறுகளையும் இந் நூல் விரிவாயுணர்த்துகின்றது. சரித்திர வாராய்ச்சி யாளர்களுக்கு இந் நூல் மிக்க உபயோகமுள்ளதாக விருக்கும். நடை சாதாரணமாயுளது. ஒருபுறமே எழுதப்பட்டுள்ளது.

R. No. 1519.

Paper. 13½ × 8½ inches. *Foll.* 8. *Lines, 22 to 30 on a page.* Tamil. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 181(*a*).

கௌபால சித்தர் ஆணிக் கோவை by கௌபால சித்தர்.

KAVUPĀLASIDDHAR ĀṆIKKŌVAI by KAUPĀLASIDDHAR.

Incomplete.

Beginning: *கௌபால சித்தர் ஆணிக் கோவை.*

. . . . நகளாகக் கோடா கோடி
துருத்திய தோரணைதப்போல மறைத்திடாமற்
சொல்லுவேனாணிக்கோவை சொல்லுவேனே. (அ)

* * * *

End :

கொடுத்திட்ட சித்தாதி சித்தரெங்கள்
குலதெய்வமாக வெல்லாக்குறிப்புங்காட்டி
அடுத்திட்ட என்னப்பனென்னையாண்ட
யாண்டவனூர் தேவமுனியருளினாலே
யெடுத்திட்டேன் லோக வுபகாரமாக
யிசைந்ததொரு நல்லாணிக் கோவை நூலை
முடித்திட்டேன் பாடலது வன்பத்தொன்றாய்
முடித்திட்டேனே மொழிந்த கவுபால சித்தன். (௫)

Colophon :

கவுபாலசித்தர் ஆணிக்கோவை யன்பத்தொன்று யெழுதி நிறைந்தது.

முற்றும்.

(கு.- பு.)—

இது மூவருடக் காடலாக்கு 181 (*a*) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். இயற்றியவர் கவுபால சித்தராவர். இந்நூலினது விஷயங்களையறிய முன்னரிவ்வாசிரியர் பல பல தீவுகள் தீவாந்திரங்கள், குன்றுகள், மலைகள் முதலான விடங்களைச் சுற்றியும் தக்க வொருவாசிரியரைக்காணாது கடைசியில் பொதிகை வரையில்க்கண்டு உபதேசம் பெற்றுத் தெளிந்து மிக ரகசியமான இவ்விஷயத்தை லோக உபகாரமாக ஒளிவு மறைவின்றி வெளியிடவே இந்நூலையியற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. நடை கம்பீரமாகவுளது.

R. No. 1520.

Paper. 13½ × 8½ inches. Foll. 43. Lines, 15 to 25 on a page. Tamil. Condition, good. New. Extent, 400 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2301.

பாண சாத்திரம் by போகர்.
PĀṆAŚĀTTIRAM by BHŌGAR.

Complete.

Beginning :

பாண சாத்திரம்.
போகர்.
மகாதேவன் படிக்கின்ற
பாண சாஸ்திரம்.
போகருடைய பாண சாஸ்திரம்.

பூவத்தி.

சொல்லரிய வல்லவை தன் பாதததாணே
துதித்ததுமே சுத்தன் திரி. . . .
. . . லுப்புப்பலமே நாலு
நலமானகந் தகமோர்பலமேயொன்று
. . . ன்று காணு திம்மூன்றுங்
கண்மை போலாட்டிச் . . .
சொல்லரியக . . . . .
சொருகியே யடைத்திட்டுச் சொரூபம் பாரே. (க)

End :

புகலினேம் பாணவித்தைப் புதுமை செய்யப்
புலவோர்களிதைப்பார்த்துப் பொறுத்துக்கொள்ள
நல்கினேம் நன்முக வணக்கஞ் செய்து
தகையாமற் பிழை பொறுத்து நாயேமீதிற்
சொல்லினேமிம் முறையைப் பிரகாசமாகச்
சூட்சமுள்ள பெரியோர்கள் தயை செய்வார்கள்
பல்கினேம் பாணபுத்தகமேயொன்று
பாடினேம் பாட்டு நூற்றிரெண்டுமாமே. (ாஉ)

1. அரப்பொடியென்று சொல்லப்பட்டதெல்லாம் தண்டவாளப் பொடியென்று அறிந்துகொள்ளவும்.

2. கரியென்றதெல்லாம் கள்ளிக்கரியென்றும் அறிந்துகொள்ளவும்.

Colophon :

மடப்பள்ளி பகவதி சகாயம்.

முற்றும்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாகது 2301-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்தது எழுதி வைக்கப்பெற்றதாகும். போகமுனிவராலியற்றப்பட்டதென நூலாரம்பத்து உள்ள வாக்கியத்தாலறியபடுகின்றது. பலவான வாணங்கள செய்யும் முறைகளை யிந்நூலுணர்ததுகின்றது.

R. No. 1521.

Paper. 13½ × 8½ inches. Foll. 8. Lines, 18–27 on a page. Tamil. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 199 (*j*).

நிதி நிட்சேப விவரம்.
NIDHI NIṬCĒPA VIVARAM.

Complete.

Beginning :

நிதி நிட்சேப விபரம்.

'நிதிப்பிரதீப' மென்கிற சாஸ்திரத்தை நீலகண்டமுடைய ஈசுவரன் சொன்னது.

சகலமான சாஸ்திரங்களிஞலேயெடுத்து ஈசுவரன் சா ஸ்திரமாயிருக்கும். வேறு பல பிறந்திருக்கப்பட்டது யிகவேறகம் ? * * * *

Colophon :

ரெண்டாமததியாயம்

முற்றும்.

End :

இந்த மந்திரத்தைச் செபித்து விபூதி கொடுக்கையில் எடுத்து வைக்கவும். முக்கோடி தேவர்கள் பாதத்தரணே .* .* * * * * *

சற்குரு பாதமே துணே.

யிங்காயியக சிவாயநமாயியி.

உ

(கு:- பு.)—

இது மூவருடக் காடலாக்கு 199 (*j*) நம்பர் பிரதியைப் பெயர்தது எழுதி வைக்கப்பெற்றதாகும். குடிப்போம் லட்சணம், நிதியறிய லட்சணம், நிறபேதமறியும் வகை, எரி லட்சணம், மிருக பட்சி லட்சணம், புழுப்பூச்சி லட்சணம், பிரதிமை லட்சணம், மந்திர விசையும், பூமி பரீட்சை லட்சணம், பற்பல விஷ மூலிகை மந்திரங்கள், முதலான பல விஷயங்கள் இந்நூலுட் கூறப்பட்டுள்ளன. இவ்விஷயங்கள் ஆதியில் பரமசிவனுல் 'நைமிசாரணிய'த்துள்ள ரிஷீச்வரர்களுக்கும் தேவர்களுக்கும் அருளப்பட்டனவென்று நூலாரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலேட்டின் பின் புறத்துக் கடைசியில் முன்பின் சம்பந்தமில்லாமல் "ரெண்டாமத்தியாயம் முற்றும்" எனக் காண்கிறது. வேறேரிடத்தும் இதுமாதிரியான குறிப்புக் காணப்படவில்லை. கொடுக்கப்பட்டிருக்கும் ஏடுகளின் எண்களும் தொடர்பாகவே உள்ளன. ஆகவே இது இந்நூலினது பாகுபாட்டிற்காக வந்ததல்லவெனத்தோற்றுகின்றது. இது காரணம் பற்றி இந்நூல் வட நூலொன்றினது மொழி பெயர்ப்பெனறும் அந்நூலின் இரண்டாம் அத்யாயத்துள்ளும் மூன்றும் அத்தியாயத்துள்ளும் இவ்விஷயம் கூறப்பட்டிருக்கவேண்டுமென்றும் ஊகிக்க இடமுண்டு. அங்ஙனமாயிற் பொருந்துமிது; அன்றேல் கை தவறி எழுதப்பட்டிருப்பதாகவே கொள்ளல் வேண்டும். அவ்வட மொழி நூல் யாதென்பதை யாய்ந்து அறியவேண்டும்.

R. Nos. **1522–23** (one codex).

Paper. 13½ × 8½ inches. Foll. 5. Lines, 25 on a page. Tamil. Condition, good. New. Extent, 100 granthas.

Restored in 1946–47 from the MS. described under R. No. 175 (*k*) and D. No. 2321.

R. No. **1522**.

மகாகாரண பஞ்சாக்ஷரம்.

MAHĀKĀRAṆA PAÑCĀKṢARAM.

Foll 1 (*a*)–3 (*b*). Extent, 75 granthas.

Complete.

Beginning :

மகா காரண

பஞ்சாக்ஷரம்.

மவுன மந்திரம்.

ஞான

ஆனந்த நிருத்த தரிசனம்.

கண்ணுக்கு மூக்குச் செவிஞான கூட்டத்தில்
மண்ணுக்கி லவத்த பழம்பொரு ளொன்றுண்டு
அண்ணுக்கி னூடே அகண்ட வெளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்தவாறே.

என்றது :—இந்தப் பாட்டுக்குத் தாத்பரியமெப்படி * * * * * *

End :

இந்த ஓங்காரமெல்லாம் சோதியிலே அடங்கிப்போம். சோதியே மேலாம்; சகல ஜீவராசிகளுக்கும் ஆதாரவிடம் சோதியே.

(கு.- பு.)—

இது மூவருடக் காடலாக்கு 175 (k) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். ஓங்காரத்தின் சுரூபம் அதைத் தியானிக்க வேண்டிய முறையிடம் அதன் பலாபலம் பஞ்சாக்ஷரத்தியானம் முதலிய விஷயங்களை வசன நடையில் தெளிவாயுணர்த்துகின்றது. இந்நூல், திருமூலரது வாக்கு; இதில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் தெரியவில்லை.

R. No. 1523.

நெய்ச் சீலை நாடி சூத்திரம் (10).

NEYCCĪLAI NĀḌI SŪTTIRAM (10).

Foll. 4 (*a*)–5 (*a*), Extent. 25 granthas.

Complete.

Beginning :

நெய்ச்சீலை நாடி சூத்திரம்.

சீலையை நனைத்து வெற்றித் திறமணிக்கடையிற் சுற்றிக்
காலமே மூன்றேமுக்கால் நாழிகை கண்டபின்பு
சாலவே சீலைவாங்கித் தனிவிரல் வாதநாடிக்
கோலமாய்க் குதித்துவாங்கிற் குறைந்திடுமரணமென்றே. (க)

* * * *

End :

ஆநெய்யை நனைத்துச் சுற்றி
மணிக்கிடைக் குறிப்பு நெய்யில்
ஊட்டவே சுற்றிப் பார்த்து
உள்ளதோர் நன்மை தீமை
குறிப்புடனுய்ந்து பார்த்துச்
செகதலம் விளைவதாக
" நாடிவான்மீகர் சொன்னூர்
நானென்றுமறிந்திலேனே. " (மிக)

(கு. • பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2321-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இறுதியில் " வான்மீகர் " பெயர் காண்பதால் அவரது முறையைப் பின் பற்றி இயற்றப்பட்டது இந்நூல் என்பதும், அன்னாரின் மாணுக்கர்தான் இந்நூலை இயற்றினுர் என்பதுந் தெளிவாம்.

R. No. 1524.

Paper. 13½ × 8½ inches. Foll. 7. Lines, 25 on a page. Tamil. Condition, good. New. Extent, 150 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2308.

மச்சமுனி சூத்திரம் by மச்ச முனிவர்.
MACCAMUNI SŪTTIRAM by MACCAMUNIVAR.

Complete.

Beginning :

மச்சமுனி சூத்திரம்.

நடுமெய்யகாரவகாரத்திரியமேசொல்
கடவிகடத்தானைமுகன்காப்பாம்—திடமான
சாரத்துறையும் தனிச்சூடன் தண்ணீருங்
காரத்துறைகனகங்காண் (க)

* * * *

End :

ஒப்பான வாயிரமாவிகள் கண்டவன்
எப்போதுஞ் சாகாதிருப்பான் சிவனவன்.
அப்பா பராபரத் தாண்டவெழுத்தைச்
செப்பச் சிவமாஞ் சேரவுமுற்றுமே. (அகூ)

தேவி சகாயம்.

Colophon :

மச்சமுனியர் சூத்திரம்
முற்றும்.

(கு. • பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2308-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். யோகம் முதலாகிய பல விஷயங்கள் இத்துள் சுருக்கமாய்க் கூறப்பட்டுள்ளன. ' மச்சமுனி பெருநூல்

எண்ணூறு' 'மச்சமுனி திட்சை நூறு' 'மச்சமுனி நிகண்டு நூறு' என்பன போன்ற வேறு பல நூல்களும் இந்நூலாசிரியரான மச்சமுனிவரால் இயற்றப்பட்டுள்ளன. நடை கம்பீரமானது. அந்தாதிப் பிரபந்த முறையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலினது 46, 47-ஆம் செய்யுட்களை நோக்கின் இந்நூலாசிரியரான 'மச்சமுனிவர்' கீழ்க்குறிக்கப்பட்டுள்ள நான்கு நூல்களைத் தவிர வேறொரு நூலும் இயற்றியதாகக் கொள்ளமுடியவில்லை. ஏனெனில் 'வேறொரு நூலும் விளம்பவில்லை' யென அவரே கூறியிருக்கிறார். ஆகவே 'மச்சமுனி வாக்கியம்' 'மச்சமுனி ஞானம்' 'மச்சமுனி திருமந்திரம்' போன்ற நூல்களை யியற்றிய மச்சமுனிவர் வேறாயிருக்க வேண்டும். அன்றி தான் கூறிய விஷயங்களை தன்னூல் விளக்கமாய் விளம்புமாறு போல வேறொரு நூலும் விளம்பவில்லை யென்பது ஆசிரியரின் கருத்தாமெனில் மற்றவைகளையும் இவரே இயற்றியுமிருக்கலாம். அறிஞர் ஆய்ந்து கொள்க.

R. No. 1525.

Paper. 13½ × 8½ inches. Foll. 25. Lines, 19–23 on a page. Tamil. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 173.

எல்லியட் துரை கட்டியம் by வீராசாமி.
ELLIYAṬDURAI KAṬṬIYAM by VĪRĀSĀMI.

Complete.

Beginning :

எல்லியட் துரை கட்டியம்
by
வீராசாமி.

[இவை புஸ்தகம்] (இப்புத்தகம்) எல்லியட் துரையவர்கள் பேரில் பாடிய 'கட்டிய' மென்றறியவும்.

ஸ்ரீராமசந்திர
ராமானுஜாய நம:
ஸ்ரீரங்க தாமா நமோ
செய்பவர் செந்தா மரைப்பிதத் தைய்யனே
யெங்கள் குலச் சின்மய சுரூபா நமோ ? ||

* * * *

End :

செஞ்சி பதிதனைச் சேர்ந்தபொன் புத்தியூர்
வாழும் பஞ்ச நாயகன் சேயனும்
மிகவு மாழ்வார் பேட்டையினில் வாழுங்
குடியிப்போ மிகவும் சேவுகம் செய்தறம்
பாடினூர் துரை மேல் கொண்டாடி
வீராசாமி பணிந்தான் சலாஞ் சலாமே.
முற்றும்.

Colophon :

துந்துபிஞு வையாசிமீ ௰ வு முடிந்தது.

(கு:- பு.)—

இது மூவருடக் காடலாக்கு 173-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். 'எட்வர்ட் எல்லியட்' எனனும் ஓர் ஆங்கிலேயப் போலீஸ் 'அதிகாரியைப்பற்றி' 'வீராசாமி' யென்னு மொருவர் புகழ்ச்சியாய் எழுதின நூலிது. நடையும் பொருளும் நன்ருயில்லே. இதுபற்றிய மற்றைய விபரங்களுக்கு மூலப்பிரதியின் குறிப்பைக் காண்க.

R. No. 1526.

Paper. 13½ × 8½ inches. Foll. 44. Lines, 20–25 on a page. Tamil. Conditions, good, New. Extent, 500 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 3082.

பழவேர்க்காடு கைபீயத்து.
PAḶAVĒṚKKĀḌU KAIPĪDU.

Complete.

Beginning :

ஸ்ரீ:

பழவேர்க்காடு கைபீயத்து.

சாலிவாகன சகம் ௲௯௱௬௰௪, பூருவத்திலே இந்தப் பழவேர்க்காடு 'எருக்கங்காடு' ஆயிருந்ததை வெட்டி ஊர் உண்டானபடியினலே இந்த ஊருக்குப் [பளவற்] 'பழவெருக்கங்காடு' என்று பேர் உண்டாச்சுது.

* * * * *

இப்படிக்குக் குப்பய்யரும் ஒத்தாண்டி வேங்கடாசல செட்டியும் எழுதி வைத்த கைபீயத்து.

இனி பழவேர்க்காடு வீட்டுக் கணக்கும் செனக் கணக்கும்:

* * * *

ACCOUNT OF FISHERMEN
Translated by Venata Row.
மீன் பிடிப்பவர் வரலாறு.

சமுத்திரத்து மீன் பெயர் (50)

'திமி' என்றும், 'திமிங்கலம்' என்றும் இவையிரண்டு சாதியும் ஆனையையிழுக்கிற மீன்கள்.

* * * * * *

ஆற்றுமீன் பெயரும் (23) உருவமும்.

* *

வேடர், எனுதியர், இருளர்

வில்லியர், குறவர்

இவர்கள் கைபீயத்து.

*

End :

பட்டணவர் கரையாரைப்பார்க்கிலும் செம்படவர் சாதியிலே கொஞ்சம் ஒசத்தியாயிருப்பார்கள். கரையாருக்கு 'முதலி'யென்றும் பட்டணவருக்குச் 'செட்டி'யென்றும் பேர். செம்படவருக்கு 'நாயக்கன்' என்று பேர். அடக்கிறமட்டுக்கும் அடக்குவார்கள். அடங்காதேபோனால் வியபிசாரித்துவம் பண்ணினால் (தள்ளிப்போடுவார்கள்).

Colophon :—

பழவேர்க்காடு வரலாறு

முற்றுப்பெற்றது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3082-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இராயராட்சியிலே பட்டிருந்த சந்திரகிரியைச்சார்ந்த பழவேர்க்காடு என்னும் இவ்வூரை 'இறைவி' யென்றுமொருவள் ஆட்சிசெய்துகொண்டிருந்த காலம் தொடங்கி அவ்வூர், அஃதின் பக்கத்துள்ள கோட்டைக்குப்பம், சாட்டங்குப்பம், வயிரங்குப்பம், கொடிமாத்து அல்லது சிந்தாணங்குப்பம், கூனங்குப்பம், தீவுக்குப்பம் போன்ற ஊர்களிலுள்ள குடிகள், வீடுகள், ஜனங்கள், அவரவரது சாதிமுறைகள் தொழில் முறைகள் முதலானவற்றின கணக்கு முதலானவையும். சமுத்திர மீன்களில் 50 வகையும், அவற்றின் பெயர் தன்மை முதலானவையும், அஃதே போன்று ஆறுகளிலுள்ள மீன்களில் 23 வகை முதலானவையும், ஆமை, நண்டுகள் முதலானவற்றின் தன்மை முதலியனவும், அவைகளைப் பிடிக்கும் வலைகளின் பாகுபாடுகளும், பெயர் அமைப்பு முதலியனவும், வேடர், ஏனாதியர், இருளர், வில்லியர், குறவர் போன்ற சாதியினரது உட்பிரிவுகள் அவரவரது சாதி முறைகள் போன்ற மற்றும் பலவான விஷயங்களையும் இந்நூல் தெற்றென் விளக்குகின்றது. இலங்கைத் தீவிலிருந்து ஐந்தாறு கப்பற்கொண்ட ஜனங்கள் முற்காலத்து இங்கு வந்து (1) வேலூர் சதாசிவராயர், (2). கோல்கொண்டை அவுரங்கசீபு இவர்களின் உதவியால் கோட்டை கட்டிக்கொண்டு இவ்வூர்களில் குடியேறினதாகவும் கூறப்பட்டுள்ளது. மூலப்பிரதியினது குறிப்பையுங் கண்டுகொள்க.

R. No. 1527.

Paper. 10½ × 9½ inches. Foll. 5. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 90 granthas.

Restored in 1946–47 from the MS. described under D. No. 3083.

திருப்பாலைவனம் கோயில் சிலா சாஸனம்.

TIRUPPĀLAIVANAM KOIL ŚILĀSĀSANAM

Complete.

Beginning :

செங்கல்பட்டு ஜில்லா ஆலூர் மிட்டா ' திருப்பாலைவனம் அவிமுத்தீசுவர ' சுவாமி கோயில் கெருப்பகிருஹம் வடபுரம் புறத்து மதிளிலே, எழுதி யிருந்த சிலாசாஸனத்துக்கு நக்கல் * * * * * * * * * * *

End :

கூ - ஆவது * * * * * * * * * * * * * * * * * *

இக்கோயிற் சிவப்பிராம்மணரோம் கைக்கொண்ட பணம் சய. இப் பணம் நாற்பதுங் கைக்கொண்டு சந்திராதித்தியர்வரை இத்திரு நந்தா விளக்கு எரிக்கக்கடவோம்.

இக்கோயிற் சிவப்பிராம்மணரோம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3083-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இதில் செங்கற்பட்டு ஜில்லா, ஆலூர் மிட்டா ' திருப்பாலைவனம் ' என்றும் ஊரிலுள்ள கோயில்பற்றிய ஆறு சிலா சாஸன நக்கல்கள் காணப்படுகின்றன. முதல் ஐந்து சாஸனங்கள் ' அவிமுத்தீசுவர ' சுவாமியினது கருப்பகிருகத் துட்புறச் சுவர்களிலும் ஆறு வது ' யோகாம்பாளின் ' கருப்ப கிரகத்து தென்மேற்குப்புறத்து மதிளி லும் எழுதப்பட்டிருப்பதாகக் குறிக்கவும் பட்டிருக்கிறது. முதலைந்துள் மூன்று சாஸனங்கள் ' மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் கண்ட கோபா லன் ' என்பவனாலும் ஐந்தாவது ஆறுவது சாஸனங்கள் அவ்வூர் சிவப் பிராமணர்களாலும் எழுதிக் கொடுக்கப்பட்டவையெனத் தெரிகிறது. ஒவ் வொரு சாஸனமும் அக்கோயில் சம்பந்தமான பலான தரும காரியங் களைச் செய்வதற்காக வேறுபட்ட நிலம், பணம், முதலானதுபற்றியதாயிருக் கின்றது.

R. Nos. 1528–29.

Paper. 10½ × 9½ inches. Foll. 85. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 2,100 granthas.

Restored in 1946–47 from the MSS. described under R. Nos. 178 and 1085.

R. No. 1528.

முத்தானந்தர் குறவஞ்சி by முத்தானந்தர்.

MUTTĀNANDAR KUṞAVAÑCI By MUTTĀNANDAR.

Foll. 1 (*a*)–42 (*b*). Extent 1,050 granthas.

Complete.

Beginning :

முத்தானந்தர் குறவஞ்சி.

மதிகதிர் வன்னிமூன்றுய் வளர்ந்து முச்சுடராய் நின்ற
பதியதிமனமாஞ் சித்தம் பார்புத்தியறிவுக் கெல்லாம்
மதிபதியானமூலத் தரசனைப்புகழ்ந்துஞான
நிதிகுறவஞ்சிபாட நின்மலன் காப்புத்தானே. (க)

* * * *

End :

வாழவென்றுலகோரெல்லாம் வாழ்த்துதறன்னைக்கேட்டு
நீளவெங்குறத்திதன்னை நிட்டையாஞ் சித்தர் மெச்சி
கானவெண் மேகம்போலக் கனவெகுமதிகளீயச்
சூழவே குறவனோடு சுகமதாநந்தமுத்தே. (௩௩௩)

Colophon :

குறவஞ்சி முற்றும்.

இந்தப் புத்தகம் குண்ணத்தூர் சுப்பராய முதலியாரவர்களுடைய குமாரராகிய கந்தசுவாமி முதலியார தென்று அறியவும்.

பிலவஹு பங்குனிமீ உசவ சனிவாரம் சோமசுந்திரத்தினால் எழுதி நிறைவேறிற்று.

9th April 1842.

(கு. - பு.)—

இது மூவருடக் காடலாக்கு 178-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இந்நூல் ஆற்றூரென்றும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது பேரில் அவ்வூர் 'முத்தானந்த 'ரென்றும் புலவரால் 'குறவஞ்சி'யென்றும் பிரபந்த வகையாய்ப்பாடப் பட்டதாயமைந்துள்ளது. சைவ ஞானத்தைப் பல துறையிற் விளக்குகின்றது. ஆற்றூர் அன்றி அதன் சுற்றுப்புறத்துள்ள குன்றுமுதலானவற்றையுமிது சிறப்பித்துக் கூறுகின்றது. இதுவுமன்றி ' திருவண்ணமலை போன்ற பல சிறப்புற்ற சிவஸ்தலங்களையும் பாராட்டுகின்றது. ' மச்சமுனி ' முதலான பல முன்னோரான முனிவர்களது மேன்மையையும் பற்றிச் சொல்லுகின்றது. பல தருக்களாலும் விருத்தம் முதலியவற்றாலும் ஆனது. நடையும் நன்கு வுள்ளது. முற்றுமிருக்கிறது.

R. No. 1529.

அந்திரயவனிப் படை வெட்டு by முகம்மது உசேன்.

ANTIRAYAVANIPPAḌAIVEṬṬU by MUHAMMADU USĒN.

Foll. 43—85 (*a*). Extent 1,075 granthas.

Incomplete.

Beginning :

அந்திரயவனிப்படைவெட்டு.

கார்வளர்வானம் பூமி கதிர்மதியுருவினோடுங்
பார்வளர் மனுவஞ்சின்னும் பலபல வுயிர்கட்கெல்லா
மார்வளர் இரணமீந்து எவ்வுயிர்க்குயிராய்நின்ற
பேர்வளர் இறையோனதி பெரியவன் காப்புத்தானே (௧)

இறையவன் நபியுல்லாதன்
எழில் திருமருகராஞேர்
மறைவரை யுதுமான்றாமு
மாநகர் தன்னிற் சென்று
திறைவளர் ‘ யவனியந்திரன் ’றனைப்
பொருங் கதையைப்பாட
நிறைமறையடங்கா நின்ற
நித்தனே காப்புத்தானே.

அமீன் அல்லா—அம்மானல்லா.

* * * *

எதுக்கும் புலவருக்கு இடியேறெனவே வந்தோன்
‘ அரசூரில் ’ வாழுமசம்பாய் பெற்றெடுத்த
வரிசை ‘ யப்துல்காதர் ’ வரத்தாலுதித்த மைந்தன்
‘ மகம்மதுசேன் ’ இக்கதையை வகுத்து எடுத்துப்பா டலுற்றேன்.

* * * *

End :

அகம்மது இருபை பெற்ற ஆலிருவுத்தனீன்ற
செகமதில் பாக்யமுத்தோன் செய்து மீறுஉசேன்பால்
மிகவரும் புலவர்க்கெல்லாம் விருந்துகளளிக்கும்வாறுய்
அகமதில் களிக்கவுண்டு அவரவர் புகழ்ந்தெழுந்தார்.

* * * *

வசனம்.

அபூபக்கர் சித்தி, உமறுகாத்தான், உதுமானுர், அலியார் இவர்கள் நாலு பெயர்களுக்கும் மத்துமுண்டாகிய அசாபிமார்களுக்கும் மந்திரி மார்கள் கூடி சகல பாக்கியத்துடனே அறுசுவைக் கறியுடனே விருந்துகள் கொடுக்க * * * * * * * அனேகம் படையுடனே சாலைகள், தாமரை, வாவிகள், சித்தூர்கள் இவைகளெல்லாங் கடந்து நடந்தார்கள் என்றவாறு.

அம்மானே.

* * * *

இதற்குப் பொருளாவது புகழென்னப்பட்ட புகழெல்லாம் அல்லா வுக்கும் எனக்குந்தானே அலியாரை அவனுடைய பிலங்கொண்டு . . . .

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 1085-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். அரசூரில் வாழ்ந்துவந்த அசம்பாயென்போ ருக்கு அப்துல் காதரது வரத்தினுல் பிறந்த ‘ முகம்மது உசேன் ’ என்னும் புலவராலியற்றப்பட்டதாகும். ‘ தன்னிமாநக ’ரெனப்படும் ‘ திருவல்லி’ நக ரில் ‘ அலி ராவுத்தர் ’ என்னும் இறைவனது சபையில் 122ஸ்ரீ சுக்கில வருஷம் மாசிமீ 16உ திங்கட்கிழமையன்று பாடி அரங்கேற்றப்பட்ட தாகும். இதற்கு முன்னூல் ஒன்றிருப்பதாயும் அதில் கூறியமுறை தப்பா மலேதானிந் நூலை யியற்றியதாயும் ஆசிரியர் கூறுகின்றார். அந்

நூல் யாதென விளங்கவில்லை. இசுலாமிய மதத்துதித்து 'மக்கா' நகரையாண்டு மாற்றரசர்களைத் தனதோர் குடைக்கீழ் வைத்தரசு செலுத்தி வந்த 'இறசூல்' அல்லது 'நபியல்லா'வெனப்படும் அரசனது வாழ்க்கைப் பெருமையை இந்நூல் விரிவாயெடுத்துணர்த்துகின்றது. இவ்வரசனுக்கு முடி வணங்காது 'றூமு.' என்னும் நகரை 'அவனியந்திர'னென்றுமோர் அரசனுண்டுவர அது பொருத இவ்வரசன் 'அலி நபி'யென்றும் தனது மருமகனையேவி 'உதுமா'னென்னும் சேனைத்தலைவனோடு அவனையும் மற்றும் வேண்டிய படைத்துணையையும் அனுப்பி அம்மாற்றரசனோடு போர் புரியச் சொல்ல இதையறிந்த அவனும் தனது படையைப் போருக்கனுப்ப அவனியந்திரன் அல்லது அந்திரியயினி என்னும் அவ்வரசனது படையை இவர்கள் போரில் வெட்டி வீழ்த்தி அவனது ராச்சியத்தைக் கைக்கொண்டதான விஷயமும் இந்நூலிற் கூறப்பட்டிருப்பதுபற்றி இந்நூலுக்கு இப்பெயர் வந்ததுபோலும். இந்த ராச்சியத்தையாளும் பொருட்டு அபூபக்கர், சித்தி, உமனுகத்தா அலி, உதுமானுர் என்னும் நால்வரைத் தேர்ந்தெடுத்து விருந்தளித்து மரியாதை செய்து முத்திரையும் பொருளுங் கொடுத்துப் பரிவாரங்களுடன் அனுப்புவதுபோன்ற விஷயங்களும் மற்றும் பல விஷயங்களும் இஃதுள் கூறப்பட்டுள்ளன. முற்றுப்பெறவில்லை. இதேபோன்று 'காசிம் படைவெட்டு' 'உலுக்கு மலுக்குப்படைவெட்டு' என்பன போன்ற வேறு சில நூல்களும் வெவ்வேறு தமிழ் வல்ல முகம்மதியப் புலவர்களால் இயற்றப்பட்டிருக்கின்றன. அத்துள் 'காசிம் படைவெட்டு' என்ற நூல் அச்சிலுமிடப்பட்டுள்ளது. இந்நூல் 'அம்மானை'யென்னும் பிரபந்த வகையைச் சார்ந்ததாயுள்ளது. நடையும் நன்றுயிருக்கின்றது.

R. No. 1530.

Paper. 10½ × 9½ inches. Foll. 32. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 500 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 1389.

வேதாந்த சூளாமணி உரைச் சுருக்கம்.

VĒDĀNTACŪḶĀMAṆI URAICCURUKKAM.

• Incomplete.

Beginning :

வேதாந்த சூளாமணி.
உரைச்சுருக்கம்.

பேதாந்தந் தெளிவதற்குப் பிரபஞ்சம்
விளவியருளப்பெற்று மேலும்
போதாந்தமறிபவர்கள் கருத்தேற
நால்வேதப் பொருளாய்முற்றும்
'வேதாந்த சூளாமணியினுரை விரிவைச்'
சுருக்கமதாய் விளம்பவேண்டி
நாதாந்த சொரூபம தாம் ஞான
விநயகனிருதாள் நம்புவாமே.

வேதம் :—ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம், ஆக வேதம் (ச) சாத்திரம் :—சந்தசு, கற்பம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருக்தம், ஆகச் சாத்திரம் (ங) * * * * * * * * * * * * * * * *

End :

அதில் சுரோத்திரம், தொக்கு, சட்சுஸ், ஜிஹ்வை, ஆக்ராணம், ஆக ரு.

சுரோத்திரம், உட்காது. தொக்கு, தேகம். சக்ஷுஸ், கண். ஜிஹ்வை; நாக்கு. ஆக்ராணம், மூக்கு.

வாகாதிதானம் ரூல், வாக்கு, வார்த்தை, பாதம், கமனம், பாணி, கொடுக்கல் வாங்கல், பாயு, மல ஜலம் கழிப்பிக்கிறது. உபத்தம், ஆனந்தம், ஆக ரு.

சத்தாதி, பரிசம், ரூபம், ரஸம், கந்தம், ஆக ரு கரணுதி, புத்தி, சித்தம், அகங்காரம்,. . . . .

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 1389-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். அத்துவித வேதாந்தக் கொள்கைகளைத் தழுவிச் சைவசமய வாசிரியருளொருவரான 'துறைமங்கலம்' சிவப்பிரகாச சுவாமிகளால் தென்மொழியினிலெழுதப்பட்டுள்ள 'வேதாந்த சூளாமணி' என்னும் நூலின் உரையின் சுருக்கமாய் அமைந்துள்ளது. இந்நூல், வேதாந்த சம்பந்தமாய் முக்கியமாய் அறியப்படவேண்டிய பலவான விஷயங்களையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் நன்கு எடுத்துக் கூறுகின்றது, இந்நூலின் ஆசிரியர் யாரெனப் புலப்படவில்லை. மிக நன்ருயிருக்கின்றது. ஆனல் இப்பிரதியில் இது முற்றுப் பெறவில்லை.

R. No. 1531.

Paper. 10½ × 9½ inches. Foll. 5. Lines, 20 on a page. Tamil and Sanskrit. Condition, good. New. Extent, 80 granthas.

Restored in 1946-47 from a MS. described under R. No. 907 (*a*).

ஸ்ரீராமாவதாராதி கால நிர்ணயம்.
ŚRĪRĀMĀVATĀRĀDI KĀLANIRṆAYAM.

Incomplete.

Beginning :

ஸ்ரீஜெ ரவுநடந
வரவஜூநெ
நஜ ஃ
ஸ்ரீ ராமாவதாராதிகாலநிணூய ஃ
ஸ்ரீராஜூ வஜூகிவஷ்டு நாஜிநாமிவ |
ராமாயண வஜகாரெண ஷவல்ஜிரவமெஷக ஃ ||
ஸ்ரீராமாயண வாரஷ்டு ஷஂஜஹஂவூாகரொ ாதஜஷாது |
ராவேஸூாநஷஜஷெணெவ விஜூஷாநடிகதிஃ ||
* * * *
வைவஸ்வதமன்வந் தரத்தில் தெ ரதாயுகத்தில்
* * * *
மத்தியான்ன வேளையில் ஸ்ரீராமாவதாரம்.

End :

* * * ஸ்ரீராமச்சந்திரசுவாமி விளங்கிக்கொண்டு கோடி சூர்யப்பிர காசராய் மத்தியிலே சகலமான ஜனங்களையும் ரக்ஷிக்கிற. . . . பட்டா பிஷேக உத்ஸவம் ஆயிற்று.

* * * *

(கு:- பு.)—

இது மூவருடக் காடலாக்கு 907(*a*) நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். அத்துள் சிதிலமான பாகம் புள்ளியிட்டு விடப்பட்டுள்ளது.

R. No. **1532**.

Paper. 10½ × 9½ inches. Foll. 138. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 3,400 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 1088.

முகம்மதீயர் காவியம் by வண்ணப்பரிமளம்.

MUHAMMADĪYAR KĀVIYAM BY VAṆṆAPPARIMAḶAM.

Incomplete.

Begininng :

" தறியுண்டானுனும் முதல்வன் கிருபை தோன்றும் சேறு துன்பந்
தீருஞ் செல்வமு . . . .

* * * *

யஞ்சாந்தேதி தன்னில் தாலமுடன் புதன்கிழமை
பகிறுநே . . . தக பெரியோ
சீர்கொண்ட மனு உரைத்ததற்குரிய

* * *

இயலிற்சூல் திருவடி சாய்ந்து தொளா
யிரத்துடனெண்பதாண்டில்
முயலுற்றுப்பிரமோ தூத வருடந்தையில்
முழங்கு புளியங்குளத்து மொல்லாமியா
சயது மகதூம் வயசு முப்பத்தொன்பதாந் தன்னில்
. இந்நூலுரைத்திட முத்தமிழாற் போற்றிப்
பயிலுமை யேழெனும் பாலப் பிராயந்தன்னில்
பரிந்து வண்ணப்பரி மளஞ்சொற் பகர்ந்தவாறே (ஙச)

* * * *

தினவழி கண்டவர் செவ்விய வழியீற் செலச் செல்லென
" னவழியன் பலநாடு கடர்ந்துயர் கைபர் புகுந்த நில
யீனவழிகொண்டவர் யாவரையு மிசுலா நெறியிலிறக்கித்
தென்வழியுங் கலிமா வொடினங்கள் செழித்திட வாழ்ந்திடுவோர்
(1095

அல்லா உதவி செய்வானுகவும்

Colophon :

விசுமில்லாகிற் றகிமானிற கீம் அபுதல் வாவா லப்பை குமாரன் வாவர் ருவுத்தன் ஆயிரம் சலாயல ? பிலவங்கஞூ ஆனிமீ எழுதி.

நிறைந்தது.

முற்றும்.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 1088-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். மதுரை சிலைமாநகர் ‘ புளியங்குளம் ’ ஒல்லா மியாசயது முகமது என்னும் புலவரது புதல்வனுன ‘ வணணப்பரிமள ’ மென்னும் தமிழ்வல்ல வொரு புலவராலிந்நூலியற்றப்பட்டதாகும். அன்னாரிதை அவரது முப்பதைந்தாம் வயதிலேயே இயற்றியதாய்க் குறிக் கப்பட்டுள்ளது. இவரது இந்நூலுக்கு முதனூலாக இவர் தந்தையரே ஓர் நூல் இயற்றியிருந்ததாயும் அத்தை இவ்வாசிரியர் பலரது வேண்டுகோளுக்கிணங்கித் தென்மொழியில் மொழிபெயர்த்தெழுதியதா யும் தெரிகின்றது. ஆனல் அந்நூல் யாதென விளங்கவில்லை. 980 பிரமோதூத வருடம் தைமீ அது அவரது முப்பதொன்பதாம் வயதில் இயற்றப்பட்டதாகமட்டும் தெரிகிறது. இந்நூல் மதுரைத்தமிழ்ச் சங்கத் திலரங்கேற்றப்பட்டதுமாகும். இசுலாமிய மதத்தின் கொள்கைகளையும் மேன்மைகளையும் அதைத்தாபித்தவரும் தழுவியவருமான முகம்மது நபி, அபூபக்கர், உதுமான், உமான், அலி முதலானோரின் பெருமை களையும் இந்நூல் எடுத்துணர்த்துகின்றது. நடை சிறந்தது. மூலப்பிரதி மிகச்சிதிலமாயுள்ளதாலும் இஃதுள் எழுதப்பட்டிருக்கும் முறைதெளி வற்றதாயிருப்பதாலும் பொருள் கொள்ளுதல் சிறிது சிரமமாயுளது. முற்றுமிருக்கிறது. முன்கூறிய காரணம்பற்றியே மூலப் பிரதியின் குறிப் பில் இது முற்றுமில்லையெனக்குறிக்கப்பட்டுள்ளது.

R. No. 1533.

Paper. 10½ × 9½ inches. Foll 5. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 80 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2747.

தொட்டிய மதுரைக் காளியம்மன் பூருவ வரலாறு

TOṬṬIYA MADURAIKKĀḶIYAMMAN PŪRUVA VARALĀṞU.

Complete.

Beginning :

விட்டுக்கட்டி தாலூக்காவிற்சேர்ந்த ‘ தொட்டியம் ’ மதுரைக் காளியம்மன் அவர்கள் ஆதிபூருவ வரலாறு.

ஆதியிலே நடந்த ஆகமப்படிக்கு எங்கள் பெரியவர்கள் சொன்ன விபரங்கள் என்னவென்றால்.

* * * *

End :

அன்று முதல் இன்றுவரைக்கும் கீழ்ச் சமுத்திரம் மேல்சமுத்திரம் வரைக்கும் குடியடிமை நடந்துவருகிறது.

* * * *

Colophon :

தொட்டியம் மதுரைக் காளியம்மன்
பூர்வ வரலாறு முற்றுப்பெற்றது.

(கு. பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2747-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். விபரங்களுக்கு மூலப்பிரதியின் குறிப்பைக் காண்க.

R. No. 1534.

Paper. 10½ × 9½ inches. Foll. 43. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent 600 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 441.

வைகுந்த நாதன் பிள்ளைத் தமிழ்.
VAIKUNDANĀTHAN PIḶḶAITTAMIḺ.

Complete.

Beginning :

வைகுந்த நாதன்
பிள்ளைத் தமிழ்.

சுப்பாடி கள்ளப்பிரான் பாகவதன் சீதாராமதாஸன் குமாரன் கோவிந்தன் எடு.

நசுயிசவுு ஐப்பசிமீ உயஉ சனிவாரமும் ஹஸ்த நக்ஷத்திரமதில் சுவாமி கள்ளபிரான் பிள்ளைத்தமிழ் எழுத ஆரம்பித்தது.

காப்பு.
வெண்பா.

செந்திருவாழ் மார்பன் திருவேங்கடச் சதகம்
பைந்தமிழால் நீதி நெறிபாடவே—வந்தருளுங்
கார்முகஞ் சங்கத்தான் கைத் தாமரையணிந்த
கார்முகஞ் சங்கத்தான் காப்பு.

திரு
வைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்க்கவிதை.
தெய்வ வணக்கம்.

செம்பொன்னி னின்பநிறை சதுமறைபழுத் தொழுகு
தென்னமுத சார மென்னுந்
திவ்யப்ரபந்தநா லாயிரமு நாதமுனி
தேறவருள் செய்துகந்து
தம்புகழ் விரித்ததைக் கண்டுலகெலாந தொழத்
தகைமேவு குருகைதன்னில்

தயவுடனுதித்தமகிழ் மாறனு வீறனிரு
சரணமலரடி பணிகுவாம்
தும்பிமுரல் சோலைசூழ் பலவினிடை முதிர்கனிச்
சுளைநறவு தோய்ந்துமதமா
தொடர்பிடிக்குதவிமகிழ் திருவழுதிநாடனுயர்
தூயபிரமன் வணங்கும்
நம்பரமன் வைகுந்தநாதன் மணி வண்ணன்மால்
நவநீத சோரன் மாயன்
நாரணன் சீர் பரவுபிள்ளைத் தமிழ்க்கவிதை
நவிலுமென் சொற்றழையவே

* * *

Colophon :

சிறுதேர் முற்றும்

End :

திசைமுகன் வணங்கு தென்வைகுந்த
நாதனிரு சேவடிப் போது வாழி
செங்கமலமாது புவிமாது நீளா தேவி
சேனேசனிவர்கள் வாழி
இசைமருவு தமிழ்வேத நவிலு நாவீறன்
முதலீரைந்து பேர்கள் வாழி
யெங்கள் குடி வழியடிமை கொண்டு
மகிழ்சாந்தூரனிணைமலர்த் தாள்கள் வாழி
அசைவிலாநற் பொருளை வெளியிட்ட
பூதூரன் பொற்பதங்கள் வாழி
யரிதான முத்திக்கு வித்தான நஞ்சீய
ரழகு பெறு கழல்கள் வாழி
வசையற்ற நோன்புபுரி மாதவர்கள்
பூசுரர்கள் மன்னவர் மனுக்கள் வாழி
மன்றுமணி வண்ணனிசை பன்னு பிள்ளைத்
தமிழ் வழங்கு செந்தமிழ் வாழியே.

அவையடக்கம்

Colophon :

௲௯௱௫௰௫ கார்த்திகைமீ 2௳ குருவாரமும் ரேவதி நக்ஷத்திர முங்கூடின சுபயோக சுபதினத்தில் சுவாமி கள்ளபிரான் பிள்ளைத்தமிழ் ஸீதாராம பாகவதன் குமாரன் கோவிந்த தாசனுக்கு எழுதி முடிந்தது.

கடவுள் வாழ்த்து

* * * *

அந்தணர் சிறப்பு.

* * * *

வணிகர் சிறப்பு.

* * * *

அரசர் சிறப்பு.

* * * *

(கு. - பு.)—

இது மூவருடக்காடலாக்கு 441-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். நடை நன்றுயுளது.

R. No. 1535.

Paper. 10¼ × 9¼ inches. Foll. 9. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 150 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2763.

ஸ்ரீரங்கப்பட்டினம் ராசாக்கள் வரலாறு.
ŚRĪRAṄGAPPAṬṬINAM RĀJĀKKAḶ VARALĀṚU.

Incomplete.

Beginning :

ஸ்ரீரங்கப்பட்டின இராஜாக்கள் வரலாறு.

வித்தியா நகரிப்பட்டணத்தில் இராஜ்யம்பண்ணின பெயர்கள்—

முதல் ஹரிஹரராயன் புக்கராயன்.

அதன் பிறகு குரும்பராயன் ராஜ்யம் ரக்ஷித்தபிறகு குண்டேந்திர நரசிங்கராயன் குமாரன் வீரநரசிங்கராயன் ராஜ்ய பரிபாலனம் பண்ணச்சே அவன் தம்பி அச்சுதராயனுடனே இன்னும் சி[றிது](ல)]ராயர்களுடனே வந்து

* * * *

End :

அச்சுதராயன் வருஷம் உளங . . . . . .

ராமராயன் வருஷம் உளங஡ . . . . . .

திருமலைராயன் வருஷம் . . . .

சதாசிவராயன் வருஷம் உள . . . .

. . . . ராயன் போனது வருஷம் உளஅ . . .

. . . . திராயன் வருஷம் ளஅஙசு

. . . . போனது . . . .

சாலிவாகனசகை . . . . கலியுகம் சஅ . . . .

இந்த ரௌத்திரி வருஷம் . . . .

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2763-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். ஸ்ரீரங்கம் ஊமத்தூர், சிவன்சமுத்திரம் வித்தியாநகரி, விசயநகரி முதலானவிடத்து அரசாண்டிருந்த ராசாக்கள், அவ்வப்பொழுது ஒருவர்மேலொருவராய்ப்படையெடுத்துப் போர்புரிந்து வெற்றி கொண்டதும் வீழ்ச்சி யடைந்ததும், வெற்றிகொண்டோர் அவ்வப்பொழுது கோயில் முதலானவற்றிற்குச் செய்த தான தருமங்கள், முதலானவற்றை இந்நூல் எடுத்துரைக்கின்றது. ஹரிஹரராயன், புக்கராயன், குரும்பராயன், குண்டேந்திரராயன், வீரநரசிங்கராயன், அச்சுதராயன், கிருஷ்ணராயன், ராமராயன், திம்மராயன் முதலிய பல ராயவரசர்களைப்பற்றிய விஷயங்கள்

இத்துள் வெகுவாய்க் கூறப்பட்டுள்ளன. முடிவில் யுகங்கள், ஹரிச் சந்திரன் முதலான அநதவந்த யுக அரசர்கள் ஆண்ட வருடங்கள் இவற்றின் கணக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முடிவில் சிதிலமாயுள் ளது. முற்றுப் பெறவில்லை.

R. No. 1536.

Paper. 10½ × 9½ inches. Foll. 7. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 100 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2737.

வந்தவாசி தாலூக்கா சளுக்கை கோவில் சிலாசாஸனம்.
VANDAVĀŚI TĀLŪKKĀ ŚAḶUKKAI KOIL ŚILĀŚĀSANAM.

Incomplete.

ஹரி ஓம்

Beginning :

வந்தவாசி தாலுக்காவைச்சேர்ந்த சளுக்கை மனுகுல மாதேவீஸ்வர சுகநாராயணப்பெருமாள் கோயில் சிலாசாஸனத்திற்கு நக்கல்.

சோள கேரள வெண்ணகரமான சளுக்கை மனுகு[ரி](ல) மாதேவீஸ்வரர் கோயில் சாஸனம் எழுதவேண்டியது ஐந்து. எழுதினது ஐந்து.

* * * *

ஸ்ரீ விக்கிரம சோழ தேவருக்கு யாண்டு நாலாவதுசலுக்கு ஆனசோழ கேரளபுரத்து.

* * * *

End :

ஆழ்வான் பிள்ளைக்குமனைக. இதற்குத் தெற்கு ஆரும் முறையு டைய மனை . . . .

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2737-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இந்நூல் ஆற்காடு ஜில்லா சித்தூரைச்சார்ந்த வந்தவாசி தாலூக்காவிலுள்ள 'சளுக்கை மனுகுல மாதேவீசுவர' ரது கோயிலின் அர்த்தமண்டபம், கர்ப்பகிருகம் மகாமண்டபம், இவற்றுளுள்ள ஐந்து சிலாசாஸனங்களையும், டிை யூரிலேயேயுள்ள 'சுகநாராயணப்பெரு மாள்' கோயிலின் மதிள், முதலானவற்றுளுள்ள மூன்று சிலாசாஸனங் களையும் ஆக எட்டு சாஸனங்களை எடுத்துணர்த்துகின்றது. எட்டாவது சாஸனம் இதில் பூர்த்தியாகவில்லை. விக்கிரம சோழன், கிருஷ்ணதேவ மகாராயன், ஆலசேகரன், குலோத்துங்கசோழன் 'ராஜகுலசேகரன்', ராஜேந் திரசோழன் முதலானோர்களால் இச்சாஸனங்கள் எழுதிக்கொடுக்கப்பட்டவை யெனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

R. No. 1537.

Paper. 10½ × 9½ inches. Foll. 351. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 8400 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 84.

கோலாசலத்தல புராணம் உரையுடன்
KŌLĀCALATTALA PURĀṆAM WITH COMMENTARY.

Complete.

Beginning :

ஸ்ரீராமஜெயம்.

ஹரி : ஓம்.

நன்ருக. குருவாழ்க.

குருவே துணை.

சஞ்சீவி புரமாகிய சிம்மபுரம் கோலா சலஸ்தலபுராணம்

காப்பு—

ஆனை முதலானவனையழைக்க வருபரம் பொருளுக்கடிமையான
வானவர் கோனயனரனும் வந்து நெருக்குணும் வேலைமகுட கோடி
தானுரைந்து மேருவெனத் தனிப் பொடிகளுதிர வொளிர்தங்க வேத்ர
சேனை முதலியார் கமலத் திருவடியே தஞ்சமெனச் சிந்தை செய்வாம். (க)

* * * *

நூற்பயன்.

கல்வியுஞ் செல்வமோங்குங் கருதியதெல்லாங்கூடுஞ்
சொல்வளம் பெருகுஞானச் சுகாநந்த வீடு மெய்தும்
பல்வளம் பொருந்துங் கோலவரை துயிலரங்கன் பாதஞ்
சொல்பவர் படிப்போர் கேட்போர் சொற்படி யெழுதுவோர்க்கே.

* * * *

End :

பூர்வ காலத்திலே தேவக்கூட்டங்களும் இதரக்கூட்டங்களும் கேசவமூர்த்தி யினது அனுக்கிரகத்தினுல் மந்தரபருவதத்தினுல் பாற்கடலைக் கடைந்த ஞான்றுஅமுதத்துடனே திருவவதாரஞ் செய்தருளிய கருணு ரூபமாகிய செந் திருவினைப்போல் புகழினுற் சிறந்த திருபுவனமு மளக்காநின்ற பொன்ன ரங்கேசரதுபாததாமரையினை முக்தியாகிய பரமபதமாய் விரும்புகின்ற ஞானமிர்தமே சிங்கார ரூபலாவண்ணியமாகிய மங்கையர்களாலே சூழப பட்ட கோலாசலத்தில் வீத்திருக்காநின்ற மதுரசம்போன்ற வரங்கநாயகி யே யென்றவாறு.

இவ்வகையிற் றுதி தேவர் விடைகொண்டேக
விறையவன் செந்திருவைமணி மார்பில்வைத்து
செவ்வி பெறும் பதும மேலவளுருந்தித்
திகழ்ந்திருட்டப. . . நாரதர் கந்தருவஞ் செப்பக்
கொவ்வையிதழருந்ததியார் கேள்வனியோகக்
கொள்கை பெறு கோசிகனுர் பிருகங்கேத்தத்
திவ்விய மார்க்கண்டன் சோமுகனே சம்பரன்
சேர்ந்துமிகு தித்தியராய்த் திகழ்ந்தாரன்றே

(எ.து.) . . . (1) மந்திராந்தரம். (2) தேவதாந்தரம். (3) பிரயோஜனுந்தரம். (4) சாதனுந்தரம். (5) பாகவதாந்தரம் ?

(கு. • பு.)—

இது மூவருடக்காட்லாக்கு 84-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். விபரங்களுக்கு மூலப் பிரதியின் குறிப்பைக் கண்டு கொள்க.

R. Nos. 1538—1540 (Codex):

Paper. 10½ × 9½ inches. Foll. 22. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 420 granthas.

Restored in 1946–47 from the MS. described under D. Nos. 2755, 2756 and 2757.

R. No. 1538.

சித்திர கூட மாகாத்மியமும் சிலாசாஸனமும்.

CITTIRAKŪṬAMĀHĀTMYA AND ŚILĀSĀSANA.

Foll. 1(a)–21(a). Extent, 400 granthas.

Complete.

Beginning :

சிலாசாஸன நக்கல்.

ஸ்வஸ்தி ஸ்ரீ மஹாமண்டலேஶ்வரர் ஸ்ரீரங்கராயர் பிருதிவீ ராஜ்யம் பண்ணி அருளாநின்ற ஶகாப்தம் தஶாஶத (1560)க்குமேல் செல்லாநின்ற சுபானு வருஷம் பங்குனிமீ பஞ்சமி சுக்கிரவாரம் பெற்ற ரேவதீ நக்ஷத்திரம் நாள் திருச்சித்திரகூடம் தில்லை கோவிந்தராஜஸ்வாமிக்கு ஸ்ரீரங்கராயர்.

தானபாலநயோர்மத்யே தானம் (நாஸ்) ஶ்ரேயோநுபாலநம் |

தானாத் ஸ்வர்க்கமவாப்நோதி பாலநாதச்யுதம் பதம் ||

என்கிற ஶ்லோகத்தின் படியே * * * * *

ஸ்ரீ மத்விஷ்ணுப் புராணத்தில்

சித்ரகூட மாகாத்மியம்.

பதினெட்டுப்புராணம் வேத சாஸ்திரம் முதலாகிய சாத்திரங்கள் சொல்லாநின்ற ஸ்ரீ வேத வியாசபகவான் * * * *

Colophon :

முதல் அத்தியாயம் முற்றும்.

End :

* * * *

பதினோராமத்தியாயம்.

நாலாவது கருட தீர்த்தம். கீழ் சமுத்திரம். கருடன் விஷ்ணுவுக்கு வாகனமாகிறதுக்குத் தவஞ்செய்தார். * * * *

அந்தத் தீர்த்தத்தில் தானம் பண்ணிச் சிவபக்தர்களுக்குத் தக்ஷிணை தாம்பூலம் கொடுத்தால் சிவ பதவியடைவார்கள்.

Colophon :

முற்றும்.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2755-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். தற்பொழுது சிதம்பரம் என வழங்கப்பெறும் 'தில்லை' யென்னும் 'சித்திரகூட' க்ஷேத்திரத்துள் எழுந்தருளா நிற்கும் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் கோயில் பற்றிய ஸ்ரீரங்கராயர், அச்சுத ராயர் இவர்களால் எழுதிவைக்கப்பட்ட இரு சாஸனங்களை எடுத்துணர்த்து கின்றது இந்நூல். ஸ்ரீ வைஷ்ணவர்களின் நித்திய வாஸத்திற்காக அவ்வர சர்களால் ஸருவமான்ய மாய் விடப்பட்ட கிராமங்கள் முதலியன இன்னின் னவை யென்றும் குறித்துச் சொல்லுகின்றது. மற்றும் பவிஷ்யத் புராணத்துட்பட்ட சித்திர கூடத் தலத்தினது பெருமையையும் பதினேரு அத்தியாயங்களுள் கூறுகின்றது. விரிவாயுள்ளது. முற்று முள்ளது.

R. No. 1539.

இளமையானூர் கோவில் சாஸனம்.

IḶAMAIYĀNŪR KOIL ŚĀSANAM.

Foll. 21*b*-22*a*. Extent, 10 granthas.

Complete.

Beginning :

இளமையானூர் கோயில் ஸ்தல மகத்துவம்.

ரக்தாக்ஷி வருஷம்.

கோவில் மகத்துவம், தீர்த்த மகததுவம், சிதம்பர ஸ்தல புராணத் திலேயிருக்கிறது. கோவிலுக்குப் பூசை நடக்கிறது.

சிதம்பர சீமையிலே உடையார் மான்ய காவல் மான்யத்திலே பத்துக் காணிமான்யம் நடந்தது. * * * *

End :

அந்தக் கிராமங்களிலே வருமானம் இல்லாததினாலே அந்தத் தோப்பு களிலே இருக்கிற ஐவேஜியில் நித்தியப்படி 'குறுணி' அரிசி நைவேத்யம் பண்ணிப் பூசை நடந்து கொண்டு வருகிறது. கோயில் பூசை பண்ணுகிற குருக்கள் சிவப்பிராமணக் குருக்கள் நாகநாதக் குருக்கள் சொல்படி யெழுதினது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2756-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்ற தாகும். முற்றுமுள்ளது.

R. No. 1540.

அனந்தேசுவரன் கோவில் சாஸனம்.

ANANTĒŚUVARAN KOIL ŚĀSANAM.

Foll. 22*a* & *b*. Extent, 10 granthas.

Complete.

Beginning :

அனந்தேசுவரன் கோயில் தலமகத்துவம்.

ரக்தாக்ஷி வருஷம்.

கோவில் மகத்துவம், தீர்த்த மகத்துவம், சிதம்பர ஸ்தல புராணத்திலே சொல்வது. அந்தக் கோயில் வெகு நாளாய்த் திருப்பணியான படியினாலே 'பெரிய பெருமாள் பிள்ளை' பழுது பார்த்தக் கோயில்களெல்லாம் புதுக்கித் திருப்பணி செய்வித்துத் தேர் திருவிழாவும் நடப்பித்து நாலு கிராமம் சொந்தப் பயிர் வைத்துக் கம்மத்தமாய் ஆறு காணி மான்யமும் நடந்தது. தென்னந்தோப்பும் வைத்து * * *

End :

சித்திரைமீ தேர் திருவிழாவும் ஐந்தாறு வருஷம் ஒரு காலம் நடந்து வருகிறது. ஆக இரண்டு காலம் ? பூசை நடந்து வருகிறது. பூசை பண்ணுகிற குருக்கள் சிவப்பிராமணன் மணியக் குருக்கள் சொல்படி எழுதினது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு **2757**-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். முற்றுமுளது.

R. No. **1541**.

Paper. 10½ × 9½ inches. Foll. 49. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 1,200 granthas.

Restored in 1946–47 from a MS. described under R. No. 499 (*a*).

மாணிக்கவாசகரம்மானை by சங்கரமூர்த்தி.

MĀṆIKKAVĀCAKARAMMĀNAI by ŚAṄKARAMŪRTI.

Complete :

ஸ்ரீ

Beginning :

ஹரி : ஓம். குருவாழ்க. குருவே துணை.

மாணிக்கவாசகர் அம்மானை.

தென்னவன் பிரமாதிராயன்
திருக்கதையம்மானையாகச்
சொன்னபின்றுயரம் நீங்கிச்
சுகமுடன் வாழ்ந்து நன்றாய்
மன்னவன் செங்கோலோங்கி
மகிழ்ச்சியாயிருப்பதற்குக்
கன்னமா முகத்தோன் றெந்திக்
கணபதி காப்புத்தானே.

ஹரி : ஓம். நன்றாக.

*   *   *   *

நல்லூரில் நல்ல தம்பி தரு நமச்சிவாயனுக்குச்
சகோதரமாய்ப்பின்னு தித்த 'சங்கரமூர்த்தி மைந்தன்'
பாடுமடியேன் பரங்கிரி நாதன் துணையாய்.

*   *   *   *

End :

மாணிக்க வாசகரம்மானை கேட்போர்க்குக்
காணிக்கையாகக் கைலாயஞ் சேர்வார்கள்
கற்றுப்படித்தவர்கள் காதாரக் கேட்பவர்கள்
பெற்றுப் பெருகிப் பெரிய குடியாயிருப்பார்
பாடினவர் கேட்பவர்கள் பயனெடுத்துச் சொல்வோர்கள்
இந்தக் கதையை யெழுதிப்படித்தவரும்
இன்னமின்னஞ் சொல்லுமென்று இன்பமாய்க்கேட்போரும்
இந்தக் கதையை யெழுதிக் கொடுத்தோரும்
இன்பசுகமெல்லாம் இனிப்பெருக வாழியவே.

Colophon :

மாணிக்கவாசகர் அம்மானை
முற்றுப்பெற்றது.
விசுவாவசு ௵ மாசி௴ ௰௨ எழுதினது.
திருவாதவூர்கோட்டை.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 499 (*a*)-ஆம் நம்பர் பிரதியைப்பெயர்த்து எழுதி வைக்கப்பெற்ற தாகும். 'நல்லூர் நல்ல தம்பி' யென்பவரின் குமாரரும் 'நமச்சிவாய'ரென்பவரின் இளைய சகோதரருமான 'சங்கரமூர்த்தி' யென்பவரால் இந்நூலியற்றுப்பட்டதாகத் தெரிகிறது. 'அம்மானை' யென்னும் பிரபந்த வகையைச் சார்ந்தது. வாதவூரரது பூருவசரிதம் இஃதுள் விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. நன்றாகவும் முற்று முள்ளது.

R. No. 1542.

Paper. 10½ × 9½ inches. Foll. 7. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 150 granthas.

Restored in 1946–47 from a MS. described under R.No. 1420.

ஆருதாரம்.
ĀṚĀDHĀRAM.

Complete.

Beginning :

ஹரி : ஓம்
நன்றாக
திருவாழ்விநாயகன் முன்னேக.
சொக்கநாதஸ்வாமி
அங்கயற்கண்ணம்மை துணை.

ஆறுதாரம்.

மூலாதாரமாவது.—நாற்கோணமாய் அதன் நடுவே பிறை வடிவாய் அதன் நடுவே திரி கோணமாய் அதன் நடுவே நாலிதழையுமுடையதாய் தாமரையாய் அந்த நாலிதழிலே நிற்கும் அட்சரம் வ, பீ, ஷ, ஸ, என்று பீசமுமாய் தாமரை வட்டத்தின் நடுவே றீங்காரமுமாய் அதன் நடுவே ஓங்காரமுமாய் அதன் நடுவே குண்டலியாய் அதன் நடுவே கணபதியும் வல்லபை சக்தியும் எழுந்தருளியிருக்கும்.

வேறு—சுவாதிட்டானமாவது.—நாற்கோணமாய் * * * * *

End :

சந்திரமண்டலமாவது.—கபாலத் தொடுக்கமாய் வட்டமாய் அகார உகார வீசம் நடுவேயுடையதாய் அதிலே பரம தேவனும் பராசத்தியுமாய் எழுந்தருளியிருக்கும். ஆக தரிசனம் பதின்மூன்றும் இதற்குப் பிரமாணம்.

சென்ன வீரர் பாதமே துணை.

Colophon :

ஆறுதாரம் முற்றிற்று.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 1420-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். மூலாதாரம், சுவாதிட்டானம் முதலான ஆறு ஆதாரங்களின் பெயர் அவவற்றின் அமைப்பு தேவதை முதலானவற்றை இந்நூல் விளக்குகின்றது. மூலப்பிரதி மிகவும் சிதைந்துள்ளபடியால் இப்பிரதியில் ஆங்காங்குள்ள பகுதி எழுதப்படாமலே யிருக்கிறது. ஆகவே தொடர்பாய் விஷயத்தை அறிந்து கொள்ள இயலவில்லை. இதே பெயரில் வேறு நூல்களுமுள்ளன. அவையினுமிதுவேறுயது.

R. No. 1543.

Paper. 10½ × 9½ inches. Foll, 32. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 600 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2767.

விருத்தாசலம் விழுப்புரம் தாலூக்கா சிலாசாஸனங்கள்

VIRUDDHĀCALAM, VIḺUPPURAM TĀLUKKĀ ŚILĀ-ŚĀSANAṄGAḶ.

Complete.

Beginning :

மல்லி ஙாஎமடு (375)

விருத்தாசலம் ஜில்லா, திருவண்ணுமலே துக்கடி கஸ்பா திருவண்ணுமலே. அண்ணுமலே ஈசுவரர் தேவஸ்தானத்தின் வள்ளாளராயன் கோபுரவாசல்படிக்குத் தென்புறம் வச்சிரப்படையில் சாசனத்துக்கு நக்கல்.

* * * *

வழுதாவூர் துக்கடியில் சேர்ந்த விழுப்புரம் தாலூகா அய்யூர் கிராமம் மஜரு சிந்தாமணி ஸ்ரீ கைலாஸநாதசுவாமி தேவஸ்தானத்தில் சிலாசாஸனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாதுபுணர், புவிமாதுவளர், நாமாது விளங்க, ஜயமாது விரும்ப * * * * * *

End :

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகலபுவநசக்ரவர்த்திகள் ஸ்ரீ கோபப் பெருஞ்சிங்க தேவருக்கு யாண்டு ௰சு-வது இருஷப ஞாயிற்றுப் பூர்வ பக்ஷத்து ஸப்தமி யும் திங்கட்கிழமையும் பெற்று உத்திரத்துள் வடகரை விறுத்தன * * ஜயங்கர வள நாட்டு மேற்கு நாடு இருங்கொளப்பாடி நாட்டு பருவூர் கூற்றுத்துடையார் * * * * * *

ஆக ஆடு சுமசும் கைகொண்டு தேவர் சிறிய நாழியால் நாளொன்றுக்கு நெய் அளக்கக் கடவோம். இது சந்திராதித்யர்வரை.

ஶுபமஸ்து (ஸ்ரீ) ஶ்ரீமஹா ஸ்ரீ.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2767-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். விருத்தாசலம், விழுப்புரம், இவற்றின் சுற்றுப்புறத்துள்ள திருவண்ணாமலை போன்ற பலவூர்கள், இவைகளிலுள்ள பல தேவஸ்தானங்களுக்கும் பலவரசர்களால் பல காலங்களில் செய் யப்பட்ட பல துறைகளான தர்மங்கள் இவைகளை எடுத்துக்கூறும் பல திறப்பட்ட சிலாசாஸனங்கள் இஃதுள் அடங்கியிருக்கின்றன. மூலப்பிரதியில் 38-ஆம் நம்பர் ஏட்டிற்கு முன்னும் பின்னும் இரு ஏடுகளுக்கு 37 எனவே நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விஷயம் ஒன்றல்ல. மற்றைய விபரங்களுக்கு மூலப்பிரதியின் குறிப்பைக் காண்க.

R. No. 1544.

Paper. 10½ × 9½ inches. Foll. 5. Lines, 20 on a page. Tamil. Conditions, good. New. Extent, 100 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2770.

சிங்கபுரிநாதசுவாமி கோவில் சிலாசாஸனம்.
ŚIṄKAPURINĀTHASUVĀMI KOIL ŚILĀŚĀSANAM.

Complete.

Beginning :

ஸ்ரீமஹாவீராய நம:.

சிங்கபுரிநாதசுவாமியார் கோவில் பிரதக்ஷிணத்தில் அடிப்பிரதமப் பலகையில் எழுதியிருக்கப்பட்ட சிலா சாஸனத்துக்கு நக்கல்.

* * * *

சித்தாமூர் ஜைநதேவஸ்த்தானத்தில் சிங்கநாதர் ஸந்நிதியில் முன் மண்டபத்தில் முக வரிசையில் பட்டிகை உபாந்திய வரிசையிலும் யாளி முகக்கல்லிலேயும் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல்.

* * * *

End :

இந்தத் தர்மம் சந்திரா தித்தியர் வரைக்கும் நடத்திவரக் கடவராகவும். இந்தத் தர்மத்துக்கு அஹிதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவையும் மாதா பிதாக்களையும் கொன்ற தோஷத்திலே போகக்கட வார்கள்.

Colophon:

சிற்ருமூர் தேவஸ்தானம் அர்ச்சகர் பாபு உபாத்தியாயர் தளவரிசை சிலாசாஸனத்துக்குக் கை எழுத்து.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2770-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். 'சித்தாமூரி' லுள்ள ஜைன தேவஸ்தானத்தைச் சார்ந்த 'சிங்கபுரிநாத' சுவாமி கோயிலின் பிரதக்ஷிண அடிப்பலகை, முன் மண்டபம், யாளி முகக்கல்லு முதலான விடத்துக் காணப்பெறும் சிலாசாஸனங்களை இந்நூல் எடுத்து உணர்த்துகின்றது. விக்கிரம சோழன், விஷ்ணுதேவ மகாராயர், குலோத்துங்க சோழன், ரங்கதேவ மகாராயர், வேங்கடபதி தேவ மகாராயர், இவர்களால் இச்சாஸனங்கள் செய்து கொடுக்கப்பட்டவைகளெனக்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறு சாஸனங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சாஸனத்தின் முடிவிலும் ' சிற்ருமூர் தேவஸ்தானம் அர்ச்சகர் பாபு உபாத்தியாயர் கை எழுத்து ' எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கோயிலுக்கு மானியமாக விடப்பட்ட நிலம் இன்னின்ன ஊர்களில் உள்ள தென்ற விஷயமும் விரிவாய்க் குறிக்கப்பட்டுள்ளது. மற்றைய விபரங்களுக்கு மூலப்பிரதியின் குறிப்பைக் கண்டு கொள்க. முற்று மிருக்கிறது. இவ்வூர்க் கோயில் முதலானது பற்றிய வேறு பல சாஸனங்களும் உண்டு.

R. No. 1545.

Paper. 10½ × 9½ inches. Foll. 8. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 200 granthas.

Restored in 1946–47 from MS. a described under D. No. 2775.

மராட்டியத் துளுவக் கைபீது.

MARĀṬṬIYATTUḶUVAKKAIPĪDU.

Complete.

Beginning:

தக்ஷிண சீமை என்கிற மராட்டிய துளுவதேச காண்டம்.

தக்ஷிண சீமை யென்கிற மராட்டிய துளுவதேச மாகப்பட்டது 'நர்மதா' ஆற்றுக்குத் தென்கரை முதல் கொண்டு 'துங்கபத்திரை' ஆற்றுக்கு வடகரை வரைக்கும் அப்படிக்கொத்த தேசத்தில் துவாபர யுகம் வரைக்கும் ராஜாக்கள் சத்தியத்தை யுடையவராய் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு டில்லி மகாராஜாக்கள் ஜனமேஜய மகாராஜா வரைக்கும் பத்தி * * *

தக்கண * * கங்கோ பொம்மணி பாக்ஷா காண்டம்.

Colophon:

தக்கண காண்டம் முற்றும்.

End :

அப்படிக்கொத்த பாதுஷாவை அவர் சேவுகன் ' அப்துல் காதர்கான் ' சமயம்பாத்துக் கண்ணை வாங்கினான். அதற்குப் பாதுஷா கண்ணைச் சொஸ்தம் பண்ணிக் கொண்டு அவனைக் கொல்ல வேண்டுமென்று இங்கரேச பாதூருக்கும் நவாப்பு சிரத்தவுலாவிற்கும் நவாபு நிசாம் தவுலாவிற்கும் காமல் பாக்ஷா அப்தான் வகையராவிற்கும் எழுதியனுப்பினார் * * * அப்படியிருக்க இங்கிலீஷ் பாதர் தண்டு கல்கத்தாவிலிருந்து சென்ன லக்கின்லாட்டு * * * தார்படிக்குப் போயின ஊயா * சரி டில்லி வாங்கிக் கொண்டார்கள்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2775-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்ற தாகும். துளுவதேயத்தையாண்டு வந்த பூருவ மன்னர்களின் வரலாற்றை இது வெடுத்துணர்த்துகின்றது. அவர்களுள் முகலாய வரசர்களுமுள்ளனர். அவர்களுள்ளும் சுல்தான் பரம்பரையைச் சார்ந்தவரசர்களின் பல திறப்பட்ட பெயர்களும் ஆண்டுகளும் இஃதுள் குறிக்கப்பட்டுள்ளன. மற்றைய விபரங்களுக்கு மூலப்பிரதியினது குறிப்பைக் கண்டு கொள்க. முற்றுமுளது.

R. No. 1546.

Paper. 10½ × 9½ inches. Foll. 14. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 300 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2790.

பரசுராம க்ஷேத்திர கைபீயது (மலையாளதேச வரலாறு).

PARAŚURĀMAKṢĒTRĀ KAIPĪDU (MALAIYĀḶADĒŚA-VARALAṚU).

Complete.

Beginning :

பரசுராம க்ஷேத்திர கைபீயத்து
அல்லது
மலையாள தேச வரலாறு.
ஸ்ரீ:
ஸ்ரீராமஜயம்.

சகரன் கதை—

அயோத்தியில் பூர்வகாலம் சூரிய வம்சத்திலே ' சகரன் ' என்றவொரு ராசா ஏக மண்டலாதீசுவரனாகப் பூலோகத்தை ஒரு குடையின் கீழ் * * * * * * * * .

End :

அப்போ தாமூதரிப்பாடென்னும் தம்பிரான். என்னும் பேர் கொண்ட மானவிக்கிரம ராசனுடைய பன்னிக்கோட்டையையும் பிடித்துச் செய விருதுகொண்டாடி அந்த நாட்டையும் ஆண்டனுபவித்துக் கொண்டார்.

இந்தச் சாத (ஸ) னத்தை வித்துவாமிசர்களாயிருக்கப்பட்டவர்கள் இதி லுள்ள பொருள்களை யாதொருவருக்கும் வெளியாகப்படுத்தாமல் இருக் கிறதே கடன்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2790-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பரசுராம க்ஷேத்திரமென்று வழங்கப்படா நின்ற மலையாள தேசத்தினது பூருவ வரலாற்றையும் அதையாண்டவர் களின் பெயர் முதலானவற்றையும் இது எடுத்துணர்த்துகின்றது. தாமூ தரப்பாடு என்னும் தம்பிரான் ஒருவன் கடைசியாய் அரசாண்ட தான வரலாறு வரைக்கு மான செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. இத்தேசம் இஃதுனுள்ள ஜாதியினர் முதலான விஷயங்களை எடுத்துக்கூறும் வேறு பல சாஸனங்களுமுண்டு.

R. Nos. 1547—1552 (one codex).

Paper, 10½ × 9½ inches. Foll 15. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 300 granthas.

Restored in 1946–47 from the MSS. described under D. Nos. 2972 to 2974, 2977, 2978 and 2980.

R. No. 1547.

இராஜஸந்ததி வரலாறு.
IRĀJASANTATI VARALĀṚU.

Foll. 1(a)–2(b). Extent, 30 granthas.

Complete.

Beginning :

இராஜாக்களுடைய சந்ததிகளுக்கு வயணம்.

பூர்வம் ஒரு கோடாகோடி கடற்காலத்திற்கு முன் வ்ருஷப தீர்த்தங்கர காலம் ஆதியாக வர்த்தமான ஸ்வாமி வரையிலும் வருஷமாய் கைகண்ட தரூராயர்.........வர்த்தமானவருஷமாய் ராஜ்ய பரிபாலனம் செய்த ராஜாக்கள் யாரெனில் :—

பரதன், சகரன், மகவான், சநத்குமார சாந்திநாதன், குண்டு நாதன் * * * * * * * * * * * இப்படிச் சக்கிரவர்த்திகள் பன்னிருவரும் * * * * * * * * * * * * * * * *

End :

அதன் பிற்காலம் நபரய்த்து (பு) சந்ததிகள் இருநூறு வருஷம் வரைக்கும் ராஜ்யம் செய்தார்கள். அதன் பிற்காலம் சாதுலூகான் முத லிய நபாபு சந்ததிகள் நூற்றிருபது வருஷம் வரைக்கும் இந்த ராஜ்யம் செய்தார்கள். அதன் பிற்காலம் இங்கிலீஷ் துரை அவர்கள் இப்பப் பதினாறு வருஷம் வரைக்கும் இப்ப ராஜ்யம் செய்து வருகிறார்கள்,

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2972-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பரதன் முதலாக ஆங்கிலேயர் ஈறாக இப் பரதகண்டத்திலரசாட்சி செய்து வந்த சில சக்கிரவர்த்திகள், ராசாக்கள் இவர்களின் பெயர்களேயும், அவரவரும் அவரவரது ஸந்ததியாருமாண்ட வருடங்களேயும் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. இந்நூலுள் ஜைன பாண்டிய சோழவரசர்களுள் மிகச் சிலரே குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மஹம்மதியருளும் இருஸந்ததிமட்டும் கூறப்பட்டுள்ளது.

R. No. 1548.

ஜைனமார்க்க விரோதி மன்னன் வரலாறு (வெங்கடபதி நாயகன் வரலாறு).

JAINAMĀRGAVIRŌDHI MANNAN VARALĀṚU (VEṄKAṬAPATI-NĀYAKAN VARALĀṚU).

Foll. 2(b)–5(a). Extent, 50 granthas.

Complete.

Beginning :

ஜைனமார்க்கத்தில் விரோதித்து ராஜரீகம் பண்ணினவன் செய்த வயணம்.

சகாப்தத்தில் ருசா (1400) வருஷம் சென்ற விடத்தில் விருத்தாசலம் துக்கடியில் சேர்ந்த திருவதி துக்கடியில் வேவரகொல்லை வெங்கடம்மா பேட்டையிலிருக்கும் கவறை வெங்கடபதி நாயகன் என்கிறவன் செஞ்சியில் அதிகாரஞ் செய்யுங் காலத்தில் பிராமணர்களை உங்கள் ஜாதியில் ஒரு பெண் கொடுக்கவேண்டுமென்று கேட்டான் * * * * * * * * * * * * * * *

End :

வீரஸேனுசார்யர் கேட்டுக் காஞ்சீபுரத்துக்குப்போய் தாதாசார்யருடனே வாதம் செய்து அவனைத் தோற்பித்து அந்த ஸ்தம்பத்தையும் கீழே தள்ளிப்போட்டு அனுப்பிவிட்டு ஜைனர்களுக்கும் ஜெயத்ராவஜெயம் செய்து கொண்டு உப்பு வேலூர் வந்து சேர்ந்தார். சேர்ந்த மூன்று மாதம் சரீரத்திற்கு உபத்திரவமாய் வியோகமாய்விட்டார். அன்று முதல் இன்று வரைக்கும் அவரால் உத்தாரணம் பண்ணப்பட்ட ஜைன மார்க்கம் விளங்கி வருகிறது. அன்று முதல் உடையார் அவர்களுக்கு ஸ்ரேஷ்டமாய் ஜைன மார்க்கத்தில் முதல் மரியாதை ஆசந்திரார்க்கம் மரியாதி நடந்து வருகிறது.

ஸ்ரீ ரஸ்து

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2973-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். திண்டிவனத்துக்கருகாமையிலுள்ள செஞ்சிக்கோட்டையில் அதிகாரம் வகித்து வந்த கவறை வெங்கடபதிநாயகன் என்பவன் ஜைனப்பெண்ணெருத்தியை மணக்க விரும்பி அதனுல் அவ

மானமடைந்து அம்மதத்தவர்களைச் சிரச்சேதம் செய்யும்படி உத்திரவு செய்ய அதிலிருந்து தப்பியவருள் ஒருவனுன தாயனூர் காங்கேய உடையாரென்பவன்மேல் காட்டிலிருந்து வீரசேனுசார்யர் என்பவரை அழைப்பித்துத் தங்கள் ஜைனமத விரோதியாயிருந்த காஞ்சிபுரம் தாதாசார்யரென்பவரை வாதில் வெல்லச் செய்து தம்மதத்தவர்களுக்கு மந்திரோபதேசமும் செய்வித்து ஜைனமதத்தை உத்தாரணம் செய்ததான இச்செய்தியே இந்நூலில் கூறப்படுகிறது. இந்நூலுக்குக் ' கவறை வெங்கடபதி நாயகன் வரலாறு ' எனப் பெயர் கொடுக்கலாமெனத் தோற்றுகிறது. முற்றுமுள்ளது.

R. No. 1549.

சாங்கியாதிமத உற்பத்தி வரலாறு.

SĀṄKYĀDIMATŌTPATTIVARALĀṞU.

Foll. 5(b)–7(a). Extent, 50 granthas.

Complete.

Beginning :

சாங்கியாதிமத உத்பத்திவரலாறு.

சாங்கியம் முதலாகிய மதங்களின் உத்பத்திவயணம்—

ஸம்வத் ௬௦ வ்ருஷஹஸ்தீயஸிங்கரர் காலத்தில் ஹரகராஜ வக்ரவதிஸ் ஸம்மதரன் ஸ்ரீ விகடோரன் கவியூர் முதலானவர்களுடனே ஜைன தர்மத்தில் ஸந்ந்யாஸம் செய்து கொண்டு இந்திரிய நிக்கிரகம் பண்ணமாட்டாமல் * * * * * *

End :

ஜைனபக்ஷமாகிய சைவஸ்தாபகத்தில் ஸ்ரீகண்டாசார்யரென்கிறவன் தன்னுடைய வித்யாபலத்தினால் விசிஷ்டாத்வைதமாகிய (சைவமாகிய) ஸ்ரீகண்ட மதத்தைக் கல்பித்தனன். அதுவும் ௯௦௦ சில்லரை வருஷமாயிற்று. அந்தஸமயத்தில் ராமாநுஜ ரென்கிறவர் தன்னுடைய வித்யாபலத்தினால் த்வைத(விசிஷ்டாத்வைத)பக்ஷமென்கிற வைஷ்ணவமதத்தைக் கல்பித்தான். அதுவும் ௯௦௦ சில்லரை வர்ஷமாயிற்று.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2974-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். ஸாங்கியம், ஜைனம், சைவம், விசிஷ்டாத்துவைதம், த்வைதம் முதலான மதங்கள் யாரால் எப்பொழுது உண்டாயிற்று என்னும் விஷயத்தைச் சுருக்கமாயெடுத்துணர்த்துகின்றது இந்நூல். பிழை காணப்படுகின்றது.

R. No. 1550.

ஜைன பண்டிதர் வரலாறு.

JAINAPAṆḌITAR VARALĀṞU.

Foll. 7(b)–10(b). Extent, 60 granthas.

Complete.

Beginning :

ஜைன பண்டிதர் வரலாறு.

பண்டிதர்கள் உண்டான வயணம்—

இந்த ஜைன மார்க்கத்தில் ப்ராஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய இந்த மூன்று குலத்தில் ஜைன ப்ராஹ்மணர்கள் க்ஷத்ரிய வைஶ்ய இந்த இரண்டு ஜாதிகளுக்கும் ஷோடஶ ஸம்ஸ்காரங்களை செய்துகொண்டு ஜைந தேவஸ்தாநங்களுக்கு அபிஷேக முதலாகிய க்ரியைகளைச் செய்து கொண்டு இதுகளில் வரும்வருமானங்களை ஜீவனமாகப் பண்ணிக்கொண்டு வருகையில் இந்தக்கலியப்தம் ஆகா வர்ஷம் சென்ற விடத்தில்

End :

மேல்விசேஷமாகிய ப்ரதிஷ்டாஹோமாதிவிதி யஜ்ஞோபவீதவிதி ஏகாதஶஸ்தானவிதி ஸவஹ்ருதஶாந்தி உதகஶாந்தி ஹோமஶாந்தி இது முதலாகிய விதிகளைச் செய்து இதில் வரும் வருமானங்களை சீவி தமாகச் செய்துகொண்டு வைசியர்களில் சம்பந்தஞ் செய்துகொண்டு வருகிறார்கள்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2977-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். தேவராயனது ஆட்சிகாலத்தில் ஜைன மதத் தைத்தழுவியவரும், கோயிற் பூசை செய்பவரும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு பூருவாபர கர்மங்கள் செய்விப்பவருமான பிராமணர்கள், ஒருக்கால் வைசி யர்களைப் பார்த்து அவர்களின் பெண்களைத் தங்களுககுக்கொடுத்துச் சம்பந்தம் செய்து கொள்ளுமாறு வேண்ட அதை அவர் வழக்க விரோதமெனச் சொல்லி நிராகரிக்க இருவருள்ளும் ஒற்றுமை குலைந்துபோன நிலையில் மாணிக்கஸ்வ ரென்னும் ஒரு பண்டிதர் ஜைனரது ஆகமத்தை நோக்கி அவர்களது தர்மத்தையும் அதன் இலக்கணமுதலானவற்றையும் ஆய்ந்து சொல்லி வைஶ்யரைப் பிரதிஷ்டாசார்யர்களெனக் குறிப்பிட்டு கோயிற்காரியங்களில் அவர்கட்கும பங்கு உண்டாக்கிச் சித்தாமூரில் நஞ்சை புஞ்சைகளும் கொடுத்து சமாதானஞ் செய்து வைதது முறையே சம்பந்தத்தையும் ஏற்படுத்திவைத்ததாகிய விச்செய்தியே இத்துள் கூறப் பட்டுள்ளது. இது நடந்து ஐநூற்றுச்சில்லரை வருடங்கள் ஆனதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. முற்றுமுள்ளது.

R. No. 1551.

யுகப்பிரளயக் கைபீது.

YUGAPRALAYAKKAIPĪDU.

Foll. 11(a)–13(a). Extent, 50 granthas.

Complete.

Beginning :

யுகப்பிரளய கைபீது.

இந்த லோகத்திற்கு மத்தியமாகிய லக்ஷயோஜனை விஸ்தீர்ணமும் வ்ருத்தாகாரமும் மகாலவணசமுத்திரபரிவேஷ்டிதமுமாகிய இந்த ஜம்பூ த்வீபத்தில் தெற்குநின்றும். ஹாரதம், ஹரிவர்ஷம் விருத்தகம் ரம்யகம், ஹைரண்யவதம், ஐராவதம மென்கிற இந்த ஏழுநாட்டாருள் * * *

End :

இதன்மேல் இந்த தீர்க்ககாலசேஷம் பதினெண்ணாயிரத்து ஐந்நூற்று இருபது வருஷமும் அதன்மேல் தீதீக்காலம் இருபத்தோராயிரவருஷமும் சென்று இந்தத் தர்ம கண்ட மாத்திரமாகிய பூமியில் அக்கினி மழை வர்ஷித்தது யுகப்பிரளயமாம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2978-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். ஜைனர்களது கொள்கையத்தழுவி இந்த ஜம்பூத்வீபமென்னும் ஹீவண்டத்தை ஏழாய்ப்பிரித்து அதனுள் தெக்ஷி ணத்துள்ளது ஹாரதக்ஷேத்ரம் உத்திரத்துள்ளது ஐராவத க்ஷேத்ரம் இவ்விரண்டிலும் உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி என்ற இரண்டு கால முண்டு. உத்ஸர்ப்பிணி என்பது மனுஷ்யருடைய ஆயுள் பலம் முதலானவை முறையே விருத்தியடைந்து வருங்காலம். அபஸர்ப்பிணி இதற்கு நேரி டையானது. ஐராவதக்ஷேத்திரத்தில் மிலேச்ச கண்டங்கள் ரு, தர்ம கண் டம் க, ஆக ஆறுகண்டங்கள் உள்ளன. வர்த்தமான ஸ்வாமி இத் தருமகண்டத்திலுதித்தவர். அவர்க்குப் பின்னர் ஏற்பட்ட கலிகாலம் தீக் காலம். அதனளவு இருபத்தோராயிரம் வருஷங்கள். அதன்பின்னர் வருவது தீதீக்காலம். அதனளவும் இருபத்தோராயிரமேயாகும். அப்பொ ழுது அனேக தீமைகள் நிகழும். அக்கினி மழை வருஷிக்கும். அதுவே யுகப்பிரளயமாகும் என்பது போன்ற விஷயங்களை எழுத்துணர்த்துகின் றது இந்நூல். முற்றுமுள்ளது.

R. No. 1552.

சித்தாமூர்க் கோயில் மடத்து வருமானக் கைபீது.

CITTĀMŪRKKOIL MAṬHATTU VARUMĀNAKKAIPĪDU.

Foll. 13(*b*)-15(*a*). Extent, 30 granthas.

Complete.

Beginning :

சித்தாமூர்க் கோயிலுக்கும் மடத்துக்கும் வரும்படி வருமானம் துரை களிடத்தில் எழுதிக்கொடுத்த கைபீது வயணம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ மது தேவேந்த்ர தேவ ஸ்ரீஸ்வாமியார்

அவர்கள் முனிபத்திரதேவபட்டாசாரியஸ்வாமியார் அவர்கள் மகாருஜ ருஜஸ்ரீ சர்வேயர் கர்னல் மெக்கஞ்ஜிதுரை அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கைபீது என்னவென்றால் :—

* * * * *

End :

இந்த தேசத்திலிருக்கும் ஜைனர்களில் துரைகளிடத்தில் சேர்ந்து உத்யோகம் செய்யாமையினாலேயும் பெரிதாகிய வியாபார வருமானம் இல்லாததினாலேயும் க்ஷூஷி செய்து கஷ்ஜீவனமாகையால் அவர்களிடத்தில் யாசகம் செய்து இந்தக் கோயில்களுக்கும் மடத்திற்கும் செலவுகள் நிபாயி (ர்வகி)க்கவில்லை. அவர்களுக்குக் கொடுக்கிறத்தி . . . . . . மகாராஜ ராஜஸ்ரீ துரையவர்கள் மனசு பெரிதுபண்ணி இந்த மார்க்கத்தின பேரில் தயவு செய்து இந்த சிலவிற்கு நடத்திக்கொள்ளும்படி பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2980-ஆம் நம்பர் பிரதியைப்பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். காஞ்சிநகரைச் சார்ந்த சித்தாமூரிலுள்ள ஜினலயங்கள், மடங்கள் இவற்றின் வரவு சிலவுப்பற்றி, **முனிபத்திர தேவ பட்டாசாரியஸ்வாமி** என்பவர் சர்வேயர் சன்னரல் கர்னல் **மெக்கன்ஸி துரையிடம்** செய்து கொண்டதோர் விண்ணப்பமாக இந்நூல் அமைந்துளது. குலோத்துங்க சோழன், விக்ரம சோழன், விஷ்ணுதேவ மகாராயன், ரங்கதேவ மகாராயன், வெங்கடபதி, கிருஷ்ணராயன், கும்பினியார் ஆகியோர் இவற்றிற்காக மான்யம் விட்டதாகவும் அது இவ்வளவு என்பதாகவும் அவற்றின் சிலவு இம்மாதிரியானதென்பதாகவும் கூறபபட்டுள்ளது.

R. Nos. 1553–1557 (one codex).

Paper. 10¼ × 9½ inches. Foll 15. Line, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 260 granthas.

Restored in 1946–47 from the MSS. described under D. Nos. 2982 to 2986.

R. No. 1553

திரு நாராயணபுரம் தேவஸ்தான ஏட்டுச் சாஸனம்.

TIRUNĀRĀYAṆAPURAM DĒVASTHĀNA ĒṬṬUCCĀSANAM.

Foll. 1 (*a*)—4 (*a*). Extent, 50 granthas.

Complete.

Beginning :

சுபமஸ்து.

ஸ்ரீ :

திருச்சினாப்பள்ளி கசுபா வகையரா விட்டுக்கட்டி தாலூக்கா தொட்டிய மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் தேவஸ்தான ஏட்டுச்சாஸன நக்கல் ஏடு உ௱. (2½)

* * * * *

End :

ஸ்ரீவேதநாயகி ஸமேத ஸ்ரீவேத நாராயணசுவாமியார் திருவிளையாட்டத்துக்குப்பூதான தர்மம் சாதனப்பட்டையம் பண்ணிக்கொடுத்தோம். *

ஸ்ரீவிஜயரெங்க கிருஷ்ணமுத்துவீர சொக்கநாத நாயக்கர் கையெழுத்து.

ஸ்ரீராமசெயம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2982-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும்.

R. No. 1554

திரு நாராயணபுர தேவஸ்தானத் தல புராணம்

TIRUNĀRĀYAṆAPURA DĒVASTHĀNATTALAPURĀṆAM.

Foll. 4 (*b*)—8 (*a*). Extent, 50 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ:

திருச்சிராப்பள்ளி கசுபா வகையரா விட்டுக்கட்டி தாலூக்கா தொட்டிய மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுர வேதநாராயணப்பெருமாள கோயில் பிரமாண்டபுராணத்துக்கு நக்கல்.

பிரமாண்ட புராணத்தில் . . . . பிரமா நாரதருக்கு . . . . .ஞயியும் ஸ்ரீசஞயியும் * * * * * * * * * * * *

End :

இந்தப் பிரகாரமாய் அருச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கிறார்.

ஸ்ரீ வேதநாராயணசுவாமி சகாயம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2983-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். முற்பகுதி பெரும்பாலும் மிகச்சிதிலமானது பறறி புள்ளியிட்டு விடப்பட்டிருக்கிறது.

R. No. 1555

திரு நாராயணபுர தேவஸ்தானச் சிலாசாஸனம்.

TIRUNĀRĀYAṆAPURA DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM.

Foll. 8 (*b*)—1 (*b*). Extent, 20 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ:

ஸ்ரீராம செயம்.

அவந்தரி திருச்சிராப்பள்ளி * * * * * திருநாராயணபுரம் தேவஸ்தானத்தில் விமானத்துக்குக் கீழ்ப்புறம் அர்த்தமண்டபத்துக்குத் தென்புறம் சிலா சாஸனததிலே எழுதியிருக்கப்பட்டது. இருபத்துமூன்றடி நீளத்துக்கு நால்வரியில் எழுதியிருக்கப்பட்டது.

* * * * *

End :

தவிர்ந்து செந்நெல் செஙகழுநீர் கரும்பு மா பலா இஞ்சி மஞ்சள் தெங்கு கமுகு கொடி உள்ளிட்டதான வேண்டின பயிர் செய்து கொள்வதாகவுஞ் சொல்லி தம்வறியிவ்வாறு ? கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க.

இவை தச்ச நெமலியுடையான் எழுத்து; இவை வாணுத்திரிராயஸ கையெழுத்து.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2984-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். முற்றுமுள்ளது. இது நெமலி உடையான் என்பவனல் வாணுத்ரிராயசதுர்வேதமங்கலம் பட்டர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட சாஸனமாகும்.

R. No. 1556

அரசலூர் தேவஸ்தான ஏட்டுச் சாஸனம்.

ARAŚALŪR DEVASTHĀNA ĒṬṬUCCĀŚANAM.

Foll. 10 (*a*)—11 (*a*). Extent. 25 granthas.

Incomplete.

Beginning :

ஸ்ரீ:

சிவமயம்.

திருச்சிணுப்பள்ளி கசுபா வகையரா விட்டுக்கட்டி தாலூக்கா தொட்டியம் மாகாணததைச் சேர்ந்த அரசலூர் தேவஸதானம் ஏட்டுச் சாதனத்துக்கு நக்கல்.

* * * * *

End :

இது தவிர அயிஞர் கோவிலுக்குத் தெற்கு நத்தமொடு அரசமரததுக்குக் கிழக்குக் கோவில் வயல். ஆலடிக்கு மேறகு சின்னவாய்க்காலுக்கு

. . . .

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2985-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்தது எழுதிவைக்கப்பெற்றதாகும். இது அரசலூர அண்ணுவையங்காரால் ஷெ யூர் தாயுமான சுவாமியவர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதோர் உடன் படிக்கைச் சீட்டாம். ஈசுவரன் கோயில் சொத்து சுதந்திரம் பற்றிய விவரங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. முற்றும் காணப்படவில்லை.

R. No. 1557

திரு நாராயணபுரம் தேவஸ்தானத்தாம்ர சாஸனம்.

TIRUNĀRĀYAṆAPURAM DĒVASTHĀNATTĀMRAŚĀSANAM.

Foll. 11 (*b*) – 15 (*b*). Extent, 90 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ:

சுவஸ்தி திரிசிராப்பள்ளி கசுபா விட்டுக்கட்டி தாலூக்கா திருநாராயண புரம் தேவஸ்தானத்திலிருக்கப்பட்ட தாம்புரசாஸனம் ஏடு ரு௨ (5½)க்கு நக்கல். சுத்த தமிழ் கிரந்தம் கலந்து இருக்கிற லிபி

* * * * *

End :

இவ்வோலையே பிடிப்பாடாகக்கொண்டு தங்களுக்குச் சந்திராதித்தர் செல்லக் கல்லிலும், செம்பிலும் வெட்டிக்கொள்ளுக.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2986-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். அழகான்மாரன் மகாபலி வாணராயன் என்போரால் சதுர்வேத மங்கலம் பட்டர்கள் இன்னின்னருக்கு இத்தனை பூதானம் செய்யப்பட்டதென்பதுபோன்ற விஷயங்களை விரிவாயுணர்த்துகின்றது. முற்றுமுள்ளது.

R. Nos. 1558–1563 (one codex).

Paper. 10½ × 9½ inches. Foll. 33. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 640 granthas.

Restored in 1946–47 from the MSS. described under D. Nos. 2987 to 2992.

R. No. 1558

சோளிங்கபுரம் தேவஸ்தானக் கைபீது.

ŚŌḶIṄGAPURAM DĒVASTHĀNAKKAIPĪDU.

Foll. 1 (*a*)—10 (*a*). Extent, 190 granthas.

Incomplete.

Beginning :

சோளங்கிபுரம் தேவஸ்தானக் கைபீது.

சோளங்கிபுரம் திருக்கோயில் திருமலே க்ஷேத்திரம் திவ்யஸ்தலம் நக்கு மாமூல் முன்னுள் கிராமங்கள் நடந்த பொதுப்படித்தளம் உற்சவங்கள் திட்டப்படிக்கு இதுகள் ஏடு.

நித்தியப்படி தர்ம வினியோகம் * * * * * * * * * * * *

End :

சந்தணக்கட்டை வீசை ௬ தெ, குங்குமப்பூ வீசை உ தெ, பச்சைக்கர்ப்பூரம் ரூ உ தெ, தேங்காய் ௰௨, உறுமாவலகுட்டை ௫, துப்பட்டி ௫, தொவித்தி சோடி ௧, ரைலசி ௫, சணம்புபிரி ௬, எருகரும்புருமை ௫, ராசயி௧ நாராய . . . . .வெங்கு . . . . . —

(கு.- பு.)

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2987-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இது இவ்வூர் தேவஸ்தானத்தைச் சார்ந்த மூன்று கோயில்களிலும் முகமதியர்களின் ஆட்சிக்கு முன்னரும் பின்னரும் நடந்துவந்த நித்தியப்படி முதல் வார்ஷிகோத்ஸவமுடிய ஆவதான செலவுவகைகளை அயிட்ட வாரியாய் விரிவாய்க் கூறுகின்றது. பின்னது முற்றுப்பெறவில்லை. திருக்கோவில் (சோளிங்கபுரம்) (சோளசிங்கபுரம்) திருமலை, கடிகாசலம் என்னும் மூன்று ஸ்தலங்கள் இத்தேவஸ்தானத்துள் அகப்பட்டனவெனக் குறிக்கப்பட்டுள்ளது. கோயிற் சிப்பந்திகளுக்கான செலவு விபரமும் இத்துள் கூறப்பட்டுள்ளது.

R. No. 1559.

சோளிங்கபுரம் அக்காரமய்யர் வாக்குமூலம்.

SŌḶINGAPURAM AKKĀRAMAIYAR VĀKKUMŪLAM.

Fol. 10 (*b*). Extent, 10 granthas.

Complete.

Beginning :

சோளிங்கபுரம் கடிகம் அக்காரம் அய்யர் வாக்குமூலம்.

என்னவென்றல் :—முன்னுலே கோயில் உண்டானபோது எனக்கு வடி கமும்........வாலாஜாக்ஷ.........மும் வெகுநாளாய் நடந்துவந்தது. ......நஞ்சையில் அனுபவித்துக்கொண்டு வந்ததை ஷ கம்பெனியாரவர் கள் சபித்தி ஆனபிறபாடு திரெட்டன் சாயபு நாளையிலும் நடந்து வந்தது. இப்பால் கோபுரம் சாயபு * * * * * * * * * * * * * *

End :

நான் ரொம்பவும் ஏழை. தாங்கள் தர்மப்பிரபுக்கள். ஆகையால் தயவு செய்து நான் ஏழை கடைத் தேரும்படி என்பாலு நஞ்சை ......மும் தயவுபண்ணி சிலவு கொடுத்து நடப்பிக்கவேண்டியது.

கட்டக்கம் அக்காரம் செவராலு.

(கு.-பு.)—

இது டிஸ்திருட்டிவ் காட்லாக்கு 2988-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். பிறரால் அபகரிக்கப்பட்ட தனது நிலம் தனக்கே திரும்பக் கிடைக்கவேணுமென்று, அக்காரம் அய்யரென்பாரொருவர் செய்துகொண்டதொரு விண்ணப்பமாக விது அமைந்துள்ளது. விண்ணப் பம் யாரிடம் செய்து கொண்டாரென்பது இதிலிருநது புலப்படவில்லை. ஒரு சமயம் மெக்கன்ஸி துரையே அவராயிருக்கலாம். ஏனெனில் வேறு சில சாஸனங்களில் சிலர் தங்களது குறைகளையிவரிடம் விண்ணப்பித்துக் கொண்டதாகத் தெரிய வருகின்றது. பதிலென்னவென்பது இத்துள் கூறப்படவில்லை.

R. No. 1560

இருதயுகாதிப்பிரமாணம்.

KIRUTAYUGĀDI PRAMĀṆAM.

Foll. 11 (*a*)—16 (*b*). Extent, 120 granthas.

Complete.

Beginning :

இருதயுகாதிப்பிரமாணம்.

(1) இருதயுகப்பிரமாணம் :—வருஷங்கள் மன லக்ஷத்துடமிருக. இதிலே தர்மங்கள் நாலு பாகம். இந்த யுகத்தில் மச்சாவதாரம், கூர்மாவ தாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம் இப்படிக்கு விஷ்ணு நாலு அவதாரமெடுத்தார் * * * * * * * * * * * * * * *

(2) இப்பால, திரேதாயுகப்பிரமாணம் :—௰௨ லக்ஷத்து ௯௰௬௲, இதிலே விஷ்ணு வாமனுவதாரம், பரசுராமாவதாரம், ஸ்ரீ ராமாவதாரம் தர்மம் மூன்று பாதம். பாபம் ஒரு பாதம்.

* * * * *

(3) துவாபரயுகப்பிரமாணம் :—அலக்ஷத்து ௮௰௪௲ வருஷம். அப்பொழுது பலராமாவதாரம், கிருஷ்ணுவதாரம். தர்மம் இரண்டு பாதம். பாபம் இரண்டு பாதம்.

* * * * *

(4) கலியுகப்பிரமாணம் :—நாலு லக்ஷத்து ௩௰௨௲ வருஷம் பௌத்தாவதாரம் கலிஞுதன், சூத்திரஞுதன். ஸ்ரீ சோது. தர்மம் ஒரு பாதம். பாபம் மூன்று பாதம். * * * * * * * * * * * * * * *

End :

ஆறகாடு ஆண்டவர்கள் :—தாவுத் கான், சாதுல்லா கான், சபுரலி கான் வகையரா. ஆண்ட வருஷம் ௬௰௫. நபாபு சயிது அனவர்த்தி கான் சுபா ஆண்டது. நபாபு முகம்மதலி கான் வாலாஜா வரைக்கும். ஆனந்த௲ வரைக்கும் ௫௰௨. ஆக ௯௰௫. அப்துல்லாகான் முகலர் ஆண்ட ௲௱௩௰. ஆக கலியுகத்திலே தேவராயபட்ட மயேந்திர ராயபட்டங்கள் ௪௲௭௱௬௰௯ (4769). முகலாய வருஷம் ௱௩௰. ஆக ௪௲௮௱௯௰௯ (4899).

நாராயணவெங்கு.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2989-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இதில் நான்கு யுகங்களின் அளவு, அவற்றில் விஷ்ணுவின அவதாரங்கள், தர்மாதர்மங்களின் நிலை, மனிதர்களின் தேக பரிமாணம், ஆயுளளவு, பிரஸித்தமான க்ஷேத்திரங்கள் அரசாண்ட பல்வகை ராஜாக்களின் பெயர்கள் முதலியன விபரமாயும் தெளிவாயும் கூறப்பட்டுள்ளன. கிருதயுகத்தில் ' குசத்துவஜன் ' முதலாய் பிரசித்தமாயாண்டவர்கள் ௰௬ பேர் என்றும் திரேதாயுகத்தில் ' சுயம்புராஜா ' முதலாய் ௰ பேர் என்றும், துவாபரயுகத்தில் ' சோமபுதராஜா ' முதலாய் ' ஜனமேஜயராஜா ' ஈறாய் அ பேர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் கலியுகத்து ஆதி துடங்கி 4899-ஆம் ஆண்டு வரை அரசு செலுத்திவந்த அரசர்களது பேர் ஆண்டு இவைகளைத் தமிழ் வருடங்களால் கணக்கிட்டுச் சொல்லுகின்றது. சேர சோழ பாண்டி நாடுகளையாண்ட பல ராசாக்களும் சோழவம்சத்தவரும் ராயவம்சத்தவரும் முகலாய வம்சத்தவருமான பல ராஜாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். முகலாய வரசருள் சுல்தான் அப்துல்லா குதுப்பு சாயப்பு, தில்லி சுல்தான் அவுரங்கசீப் முதலாய், தவுது கான், சாதுல்லா கான், சபுரலி கான் நடுவாய், முகம்மதலி கான் ஈறாய் உள்ள பல ராசாக்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள். முடிவில் முகலாயரல்லாதார் ஆண்ட மொத்த வருஷங்கள் 4769 என்றும் முகலாயர் ஆண்ட மொத்த வருஷங்கள் 130 என்றும் ஆக வருஷங்கள் மொத்தம் 4899 எனவும் கூறப்பட்டுள்ளது. கடைசியில் ' நாராயண வெங்கு ' என மட்டும் எழுதப்பட்டுள்ளது. அவர் யாவரென விளங்கவில்லை.

R. No. 1561

தாளிக்கால் கிராமக்கணக்கர் கைபீது.
TĀḶIKKĀL GRĀMAKKAṆAKKAR KAIPĪDU.

Fol. 17 (*a*). Extent, 10 granthas.
Complete.

Beginning :

ஸ்ரீராம செயம்.

தாளிக்கால்.

பிரபவஸு பங்குனிமீ ௴௨௨ கம்பெனியிலிருந்து தேவதாயம் பிர்ம்ம தாயம் தரியாவத்துக்கு சுப்பராயர் வந்தபோது மாமூல் கைபீதது நாமா எனனவென்றால :—தாளிக்கால் இனுத்தன் கணக்கர் எழுதிக்கொடுத்த மாமூல் கைபீற்று.

* * * * *

End :

அதன பிறகு சறுதாரிலே அரைவாசிமீ . . . . சபபித்துபண்ணிக் கொண்டு கோவிலுக்குப் புஞ்சை ௬௨ நஞ்சைக்கூகம விலரு தேவெத்தும் நஞ்சைக்கூகளு குறுணியும் நடந்து கொண்டுவநதது. இந்தப்படி எங்கள் பெரியவர்கள் நாளையில் சொல்லக்கேடடதும் நாங்கள் அறிந்ததும் எழுதிக் கொடுத்த கைபீத்து. அக்கமனுறமுக்கய்யவெற (எ) குழநதை கனருக்கிற மெக 1 கணருலி ௨௱. (?)

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2990-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்தது எழுதிவைக்கப்பெற்றதாகும்.

R. No. 1562

போளிப்பாக்கம் வித்துவஜ் ஜனங்கள் கைபீது.
PŌḶIPPĀKKAM VIDVAJJANAṄKAḶ KAIPĪDU.

Foll. 17 (*b*)—18 (*b*). Extent. 20 granthas.
Complete.

Beginning :

ஸ்ரீராமஜயம்.

போளிப்பாக்கம் :—

விபவஸு பங்குனிமீ ௴௨௨ கம்பெனியிலிருந்து தேவதாயம், பிரம்ம தாயம் தரியாவற்றுக்குத் துப்பராயர் வந்தபோது மாமூல் கைபீத்து நாமா போளிப்பாக்கத்திற்குப் பிரதி. நாமமான பிறவுடதேவமகாராயபுரத் தில் இருக்கும் அசேஷ வித்துவக அய்யங்கார்கள் எழுதிக்கொடுத்த மாமூல் கைபீத்து நாமா என்னவென்றால் :—

பிரவுடதேவமாகாராயரென்கிறவர் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு இருக்கச்சே எங்கள் பெரியவர்களிலே சரண்ணியார்யர் * * * *

* * * * *

End :

இது எங்கள் பெரியவர்கள் சொல்லக்கேட்டதும் நாங்கள் அறிந்ததும் எழுதிக்கொடுத்த கைபீத்து.

(1) தாதாசாரியார் கையெழுத்து.

(2) பாஷ்யகாரர் கையெழுத்து.

(3) திருமலாசார்யர் கையெழுத்து.

(4) ரகுபதி அய்யங்கார் இளையபெருமாள் கையெழுத்து.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2991-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பிரவுட தேவமாகாராயன் காலம்தொட்டு சாத்துலா கான், அன்வர்த்தி கான், மாபோசு கான், மமுதல்லி கான், மெஸ் தாதிரட்டன் சாயபு, மெஸ்தாகோபுரம் சாயபு இவர்களது காலங்களில் இவ்வூர்க்கோயில்களான வேதநாராயணப் பெருமாள் கோயில், அகத்தீசு வரன் கோயில், விக்கினேசுவரன் கோயில் இவைகளுடையவும் கிராமத் தினுடையவும் மான்யங்கள் நடந்துவந்த முறையினது பூருவோத்திரங்கள் இத்துள் கூறப்பட்டுள்ளன. முற்றுமுளது.

R. No. 1563

திருவோத்தூர் வேதபுரீசுவரர் தலபுராணம்.
TIRUVŌTTŪR VĒDAPURĪŚUVARAR TALAPURĀṆAM.

Foll. 18 (*b*)—33 (*a*). Extent. 290 granthas.
Incomplete.

Beginning :

ஹரி : ஓம்.

திருவோத்தூர் வேதபுரீசுவரர் தலபுராணம.

ஆற்காடு கசுபாவில் சேர்ந்த திருவோத்தூர் வேதபுரீசுவரர் தலம் முதலான பூர்வீகக் கைபீத்து நாமா. பூர்வ யுகாந்தரத்திலே இந்த திரு வோத்தூர் க்ஷேத்திரத்தில் பரமேசுவரர் சுயமாய் உண்டா.

* * * * *

End :

தொண்டைமானையும் துரத்தினன். அப்பொழுது தொண்டமான் அவ னுடனே யுத்தம் ஜயிக்கச் சகியாமல் ஓடிப்போய் தேசங்கள் எல்லாம் திரிந்து ஒரு வருஷம் ரக்ஷிக்கிறபேர் இல்லாமல் இந்த ஶ்ரீ ரக்ஷிவாஸி ஸ்தலத்திற்கு வந்து வேதபுரீசுவரர் சந்நிதானத்திலே வந்து ஸ்தோத்திரம் பண்ணி வெகுசாய்ப் பூசை செய்து தக்ஷிணாமூர்த்தியிருக்கிறபோது பரமேசுவரர் ப்ரத்யக்ஷமாயி தொண்டமானே நீ பயப்படவேண்டாம். நம்முடைய

* * * * *

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2992-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். இந்நூலில் இத்தலத்தில் எழுந்தருளா நிற்கும் வேதபுரீசுவரரது மகிமையினை உணர்த்தும் வியாஜமாக இதனது

அக்கம்பக்கச் சுற்றுப்புறங்களிலுள்ள பல தலங்களினுடையவும் அங்குள்ள கோயில் முதலானவற்றினுடையவும் வரலாறுகளும் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. அங்கங்கு கோயிற்கொண்டுள்ள கடவுளை இன்னின்ன யுகங்களில் இன்னின்ன காரணத்தால் வழிப்பட்டு இன்னின்ன பலன்களை யடைந்தார்களென்பதும் கூறப்பட்டிருக்கிறது. கடைசியாக துண்டீர மண்டலத்துக் காஞ்சிநாட்டரசன் 'நாகி' மகன் 'தொண்டமான்' என்போன், இந்திரனது சாபத்தால் பூமியில் விந்தியப் பிராந்தியத்தில் பிறவியை யடைந்த சிவபக்த சிகாமணியான விசுவாவசு என்னுமோர் கந்தருவனுடன் போரிட்டுச் சதுரங்கசேனைகளையுமிழந்து தோல்வியுற்று ஒரு வருஷம் தேச ஸஞ்சாரஞ் செய்தும் தன்னை ரெக்ஷிக்கிற பேர் ஒருவருமில்லாமல் கடைசியாக இந்த ஸ்தலத்தையடைந்து இக்கடவுளை வழிபட அவரும் பிரத்தியக்ஷமாய் அபயமளித்ததான இச்செய்தியுங் கூறப்பட்டுள்ளது. அவன் என்ன வரம் பெற்றான். திரும்பவும் ராஜ்ஜியத்தை எப்படி யடைந்தான் என்பது போன்ற விஷயங்கள் காணப்படவில்லை. ஆனால் அவையுங்கூறப்பட்டிருக்கவேண்டுமென்பது இதன் முடிவிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே இப்பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

R. Nos. 1564–1571 (one codex).

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 22. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 350 granthas.

Restored in 1946—47 from the MSS. described under D. Nos. 3084 to 3091.

R. No. 1564

திருப்பாலைவனங் கைபீது.

TIRUPPĀLAIVANAṄKAIPĪDU.

Foll. 1 (*a*)—3 (*a*). Extent, 40 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

திருப்பாலைவனங் கைபீயத்து.

பழவேர்க்காட்டுக்கு மேற்கே நாலு நாழிவழி தூரத்திலே தேர்த்துறையாகிய திருப்பாலைவனம் சிவஸ்தலம். அது உண்டான விதம்.

பூருவத்திலே குலோத்துங்கசோழன் பூமியெல்லாம் சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணினபோது * * * * * * * * * * * * * *

End :

இப்படி இருபத்தேழு தலத்துக்கும் தர்மம் கொடுத்து நடப்பிக்கிறார்கள். அதிலே இந்தத் திருப்பாலைவனம் ஒரு ஸ்தலமாய் வருஷம் க-க்கு இருநூற்று நாற்பது வராகன் தருமங்கொடுத்து தேர் திருநாள் முதலானதும் நடப்பிக்கிறார்கள். திருப்பாலைவனமும் மற்றொரு கிராமமும் இந்தச் சுவாமிக்குச் சுரோத்திரியம் நடந்து வருகிறது.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3084-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். குலோத்துங்க சோழனுக்குத் பின்னர் இராஜராஜ சோழன், விக்ரமசோழன், பொத்தப்பிச்சோழன், கண்ட

கோபாலன், சுந்தரபாண்டியன், குமார பொக்கராயன் முதலானோரும் இவ் வூர் தேவஸ்தானத்துக்குச் சிறிது மான்னியம் விட்டுத் திருப்பணிகளும் செய்வித்துச் சிலாசாஸனமும் எழுதிவைத்தார்களெனக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. அவற்றின் நகல்கள் இதனுள்ளில்லை. கும்பினியார்களின் மேற் பார்வையிலிருந்து வந்த காஞ்சி முதலான இருபத்தேழு தலங்களுள் இது வும் ஒன்றெனவும் குறிக்கப்பட்டுள்ளது. முற்றுமுள்ளது.

R. No. 1565

கும்மடிப்பண்டி சிலாசாஸனம்.

KUMMAḌIPPANḌI ŚILĀŚĀSANAM.

Foll. 3 (*b*)—6 (*a*). Extent, 40 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

கும்மடிப்பண்டிக்கு ஈசானம் ஒன்றரை நாழி வழி தூரத்திலே தேர வெளியூர். இந்தத் தேரவெளியூருக்கு அடுத்த நிருருதிமூலை கால்நாழி வழி தூரத்திலே குறும்பர் கோட்டை. அந்தக் குறும்பர் கோட்டைக்கு அடுத்த அக்கினிமூலையிலே துர்க்கி அஷ்டபுச சக்தி ஏகாத்தை கோயில் பக்கத்திலே கிடைகல்லிலே எழுதியிருந்த சிலாசாஸனத்துக்கு நக்கல்.

* * * * *

End :

கொல்லர் சாதியிலே 'குறும்பக் கொல்லர்' என்றும் 'தொட்டியக் கொல்லர்' என்றும் ஆக இரண்டு சாதி. இந்த தொட்டியக் கொல்லர் மாத்திரம் மதுரைச் சீமையிலே இருக்கிறார்கள். 'குறும்பக்கொல்லர்' இவ்விடங்களிலே இல்லை. கிருஷ்ணநதி தீரத்திலேயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி முத்து நாயக்கன் சொல்லி எழுதிவித்த கைபீயத்து.

(கு.பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3085-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். சித்தூர் ஜில்லா, சத்தவேடு சீமையைச் சார்ந்த கும்மடிப்பண்டி, அதன் சுற்றுப்புரத்துள்ள பலவூர்கள் இவற்றின் வரலாறுகளைச் சுருக்கமாயெடுத்துணர்த்துகின்றது. இந்நூல் இப்பிரதேசங் களில் குறும்பர்களது கோட்டைகள் பலவிருந்தனவென்றும் நாளிடையில் அவற்றுள் சில தொண்டைமானாலும், சில துருஷ்க்கர்களாலும், சில ஆனைகொந்தி இராயர்களாலும் வசப்படுத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் போயின வென்றும் குறிக்கப்பட்டுள்ளது.

R. No. 1566

பொன்னேரி குறும்பர் கோட்டை வரலாறு.

PONNĒRI KUṚUMBAR KŌṬṬAI VARALĀṚU.

Foll. 6 (*a*)—7 (*b*). Extent, 30 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

பொன்னேரி.

குறும்பர் கோட்டைக் கைபீயத்து.

பொன்னேரியிலே மேற்கே ஙலந்திருக்கிறது கும்மங்கலம். அந்தக் கும்மங்கலத்துக்கு வடவண்டை ஒரு ஆறு மேற்கே யிருந்து கிழக்கே போகிறது. அந்த ஆற்றுக்குத் தென்கரையிலே அகத்தீசுவரன் கோயில். அந்தக்கோயிலுக்கடுத்த மேலண்டை குறும்பர் கோட்டை இருக்கிறது * * *

End :

அந்த வீரபத்திரன் கோவில் * * * * * * பூசையில்லாமல் பாழாய்க்கிடக்கிறது. அந்தக் கோவில், தோட்டத்திலே அகப்படாமல் புறம்பாயிருக்கிறது. இப்படி முத்தைய முதலி யெழுதுவித்த கைபீயத்து.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3086-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும்.

R. No. 1567

கும்மடிப்பண்டி பாலீசுவரன் கோயில் முதலான கோயிற் கைபீது

KUMMADIPPANDI PĀLĪSUVARANKOIL, ETC., KAIPĪDU.

Foll. 8 (*a*)—10 (*a*). Extent, 35 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

கும்மடிப்பண்டி பாலீசுவரன் கோயில் கைபீது. .

கும்மடிப்பண்டிக்குக் கொஞ்சம் வடகிழக்கே பாலீசுவான் கோயில் ஒன்று இருக்கிறது. அது பூருவத்திலே ஆரண்ணியமாயிருந்தபோது பிரமதேவன் அங்கே சிவலிங்கப் பிரதிட்டை பண்ணினுன். இப்போது * * *

End :

அந்தக் கும்மடிப்பண்டி பாளையக்காரன் நல்லப்ப நாயகன் . . . . லானபடியினலே அவன் அழைப்பிச்சு வைத்துப் பூசை பண்ணிவிச்சான். இப்பவும் பூசை நடந்துவருகிறது.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3087-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். கும்மடிப் பண்டியென்னு மூரைச் சார்ந்த பாலீசுவரன் கோயில் மட்டுமன்றி சந்திரசேகரஸ்வாமி கோயில், சென்ன கேசவப்பெருமாள்கோயில், கரிகிருஷ்ணஸ்வாமிகோயில், அகத்தீசுவரன் கோயில் மற்றும் பெருவயல், விச்சூர் முதலான விடத்துள்ள சைனர் கோயில் முதலானவற்றின் வரலாறுகளும் இத்துள் கூறப்பட்டிருப்பதால் " கும்மடிப்பண்டி கோயில்களின் கைபீது " என இந்நூலுக்குப் பெயர் கொடுத்திருக்கலாம்.

R. No. 1568

மும்மண்டலப் பண்டையமன்னர் வரலாறு.

MUMMAṆḌALAPPAṆḌAIYA MANNAR VARALĀṞU.

Foll. 10 (*b*)—12 (*b*). Extent, 40 granthas.

Incomplete.

Beginning :

ஸ்ரீ :

The Carittirams or Actions of the Former Rājās of the Pāṇḍiyamaṇḍa-ḷam, Cōḷamaṇḍalam and Toṇḍaimaṇḍalam.

பாண்டிய மண்டலம் சோழமண்டலம் தொண்டை மண்டலம் (ஆகிய) தமிழ் மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு.

இந்திராக்ஷியம், தெட்சிணதிக்கம் பாண்டியமண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம் பூருவீக இராசசரித்திரவொழுங்கு.

முதலாவது :—

* * * *

End :

இதைத் தானே பத்தியோடே செய்து பாவத்தை முழுதும் போக்கிப் புண்ணியத்தையடைந்து அரிதான மோட்சத்தை யெளிதாகப் பெறவேணும் என்று பொய்யை மெய்யென்று நம்பி யக்காலம் துவக்கி இக்காலம் மட்டும் மனுஷகுலம் புத்தி கெட்டுப் போச்சுது.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3088-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். அது பூர்த்தியாகப் பெயர்த் தெழுதி வைக்கப்பட்டு மூவருடக்காட்லாக்கு 1518-ஆம் நம்பரில் வருணிக்கவும் பட்டிருக்கிறது. அது அறியாது திரும்பவும் இது எழுதப்பட்டு பின்னர் அறிந்ததும் அதன் முற்பகுதியின் ஓர் சிறு பகுதியாகிய இது இத்துடன் நிறுத்தப்பட்டது. ஆகவே இப்பிரதியில் இது பூர்த்தியாகவில்லை. மற்றய விபரங்களை அப்பிரதியின் குறிப்பிற் காண்க.

R. No. 1569

தொண்டமண்டலத்தளவு (வரலாறு).

TOṆḌAMAṆḌALATTAḶAVU (VARALĀṞU).

Foll. 13 (*a*)—14 (*b*). Extent, 25 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

செயங்கொண்ட தொண்டமண்டலத்துக்கு அளவு.

செயங்கொண்ட தொண்ட மண்டலத்துக்கு அளவு. கிழக்கே கடல் தெற்கே பெண்ணையாற்றங்கரை. மேற்கே திருவண்ணாமலை. வடக்கே காளஹஸ்த்திகிரி. இந்தச் சதுரம் முழுவதிலும் அனேகம் இராக்ஷஸர்களைச்

சங்கரிச்சபடியினாலே காடு சூழ்ந்தது. பூருவம் தெண்டகாரண்ணியம் இதுகளில் இருஷிகள் வாசம் பண்ணப்பட்ட இடம். தற்பூருவம் சோழ ராஜாவினுடைய பூமி சோழ தேசம் தஞ்சாவூர்.

அதுக்கு அளவு :—

* * * *

End :

இது தொண்டை மண்டலத்தினுடைய வயணம். இந்தத் துளுவ வெள்ளாழருக்குக் குடிமக்கள் பதினெட்டுப்பேர். இவர்களுக்கு இந்த மண்டலத்தில் குடிவாரம் அஞ்சு பங்கும் இராசாவுக்கு ஆறில் ஒரு கடமையும் உண்டு.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ காட்லாக்கு 3089-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். தொண்ட மண்டலம், சோழமண்டலம் இவற்றின் அளவும் எல்லையும் பின்னர் தொண்டமண்டலத்தின் பூருவ வரலாறும் இத்துள் கூறப்பட்டிருக்கிறது. மூவருடக்காட்லாக்கு 1518-ஆம் நம்பர் பிரதியில் கூறப்பட்டுள்ள இதே வரலாற்றிற்கும் இதற்கும் சிறிது மாறுபாடு காணப்படுகிறது. அது விரிவாயுள்ளது. இது மிகச் சுருக்கமாகவுளது. இந்நூலுக்குத் "தொண்டமண்டல வரலாறு" எனப் பெயர் கொடுப்பதே பொருத்தமானதாகும். தொண்டமண்டலத்தின் அளவு போல் சோழ மண்டலத்தின் அளவும் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு தலைப் பெயரால் மயக்கமே ஏற்படும். பெரும்பான்மையாயக் கூறப்பட்டிருப்பதும் வரலாறேயாகும்.

R. No. 1570

கொடுமுடி தேவஸ்தான வரலாறு.

KOḌUMUḌI DĒVASTHĀNA VARALĀṚU.

Foll. 15 (*a*)—21 (*a*). Extent, 100 granthas.

Complete.

Beginning :

ஸ்ரீ :

கோயமுத்தூரு ஜில்லா, ஈரோடு தாலூக்கா கொடுமுடி தேவஸ்தானக் கைபீயத்து. ஷை ஸ்தலத்தார் எழுதுவித்துக் கொடுத்தது.

பூருவத்தில் மகாமேரு பருவதத்திலே தேவ சபையிலே ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் சம்வாதம் வந்து * * * * * * * * *

End :

இப்படி சமஸ்தமான தேவதைகளும் ஒரு பிரகாரத்திலே வாசம் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

துன்மதி ௵ வைகாசி மீ ௳ (19-5-1807)௵ எழுதினது. ஸ்தல புராணம் வீரராகவ சாஸ்திரி ருசு. வகு ரேவபட குருக்கள் . . . . குருக்கள் கணக்கு சாமய்யன் ருசு . . . .

(கு.பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3090-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். இதில் இத்தலததினது பூருவ வரலாறும் இத்துள் கோயிற் கொண்டுள்ள சிவபிரானது மகிமையும் அவ்வந்த யுகங்களில் இவரை வழிப்பட்டவர்களது வரலாறும் சுருக்கமாகக் கூறப் பட்டிருக்கிறது. இத்தலத்துக் கோயிலில் தெய்வத்தன்மை பொருந்திய தோர் வன்னிமரம் இருககிறது என்றும் உலகினில் எவருககாவது யாதானும் உற்பாதம் வருமாயின் அப்பொழுது இம்மரத்தில் யாதானு மொரு விசேஷம் காணப்படும் என்றும் " சாலிவாகன சகாப்தம் தூளாசு சோபகிருது வருஷம் இந்த வன்னி விருட்சத்திற்கு முள்ளு கண்டது. அந்தச் சமயத்திலே பிரபுத்துவம் உண்டுபண்ணப்பட்ட அயிதர் அல்லிக் கான் என்னப்பட்டவர் விழுந்து போனுர். அதற்குப் பிற்காலம் சாலி வாகன சகாப்தம் தூஅாமிகூ பிங்கள வருஷம் இந்த விருட்சத்திற்கு முள்ளு கண்டு திப்புசுல்தான் விழுந்து போய் விட்டார்" என்றும் இதனுள் குறிக்கப்பட்டுள்ளது. முற்றுமுள்ளது.

R. No. 1571

கலியுக ராஜாக்களும் அவராண்ட வருஷங்களும்.

KALIYUGARĀJĀKKAḶUM AVARĀṆḌA VARUṢAṄKAḶUM.

Foll. 21 (*b*)—22 (*b*). Extent, 12 granthas.

Complete.

Beginning :

கலியுகமாண்ட இராசாக்கள்.

(1) பரீக்ஷித்து, ஞூ0 சூயிக துவாபர யுகததில் வருஷம் உமி போய்க் கலியுகத்தில் ஞூ0 சமி(க). * * * * * * * * * * * * * * *

End :

53 இடவு சாங்கணராயர்ஞூ0 உமிரு.

ஆகஞூ0 சதூளாசமிசக்குக் கர ஞூ0 வரை. மேல் துலுக்காணியம்ஞூ ாஉமிஅ. ஆக வருஷம் சதூஅாஎமிஉ (4872) வருஷம்.

(கு.பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3091-ஆம் நம்பர் பிரதியைப் பெயர் த்து எழுதிவைக்கப் பெற்றதாகும. இவ்விஷயங்களை விபரமாய்க் கூறும் வேறு பல பிரதிகளுமுள்ளன.

R. No. 1572

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 40. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 600 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2751.

இடங்கை வலங்கை சாதியர் வரலாறு.

IḌAṄKAI VALAṄKAI JĀTIYAR VARALĀṞU.

Incomplete.

Beginning :

வலங்கைக்கு விபரம்.

1 நம்பி குடிகள்.
2 செட்டியன்.
3 வெள்ளாழர்.
4 கொழிவளஞ்சியர்.
5 . . . .
94 கர்ணிகர்.
95 கோவியர்.
96 வங்கார்.
97 இளமையர்.
98 வனையாகர்.

ஆகத் தொண்ணூத்தெட்டு சாதிகள்.

இடங்கை சாதிகள்.

1 வையவர்.
2 அலகர்.
3 பவுநதர்.
4 அஸ்திதாரிகள.
5 . . . .
90 பலகுருஞ்சிப்பவியர்.
91 குழையர்.
92 கங்காரணமா.
93 முகம்பழியல்லாதார்.
. . . .

ஆகத் தொண்ணூத்தெட்டு சாதிகள் (98).

ஸ்ரீ:

கலியுக மன்னன் ஆண்ட வருடங்கள். கலியுகம் ஞு நாலு லக்ஷத்து நடஉதக்குச் சென்றது பரீதாபிஞு முதல் சஅஆாகூ சு வருஷம் இராச்சிய பாரம் பண்ணினவர்கள் வயணம் :—

(1) பரீக்ஷித்து ஞுகூம.

(2) ஜனமேஜயன் ஞுஉாஅமரு.

* * * * * *

(48) ஏகசக்ரபதி சிவாஜி மகாராஜா உமரு மேல டில்லி அவுரங்கசே பாதுஷா துரைத்தனம்.

ஸ்ரீ :

இடங்கை வலங்கையார் சாதி வரலாறு.

ஆதிப்பிரும்மா படைத்த பூலோகத்தில் மாகாஞ்சிமா நகரியில் ஏகாம்பர நாதனை கிருதத்ரேதா துவாபர கலியுகத்தில் முன்னாள் ஆதிதத கிரணத தில் பிறந்த மனுச் சக்கரவர்த்தி கட்டின செபபேடு பார்க்கவேணுமென்று பெருமாள் விக்ரமசோழ தேவர் அருளிச்செய்கையில்

* * * * * * *

End :

கம்மாளனுக்கும் கன்னுனுக்கும் மாலுமிச்சி நாதி வயிற்றில் செனித் தவன் கறைத்தரி நெய்வான்.

இவனுக்கும் இவனுடைய ஸ்திரீக்கும்

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2751-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திர என்னும் நான்கு வருணத்தாரின் பிறவி, தொழில், தன்மை முதலியன வற்றின் வரலாறுகளையும் இவர்களது கலப்பினுல் ஏற்பட்ட அனுலோமஸங்கர (வலங்கை) பிரதிலோமஸங்கர (இலங்கை) ஜாதியினரின் பிறப்பு, தொழில்,

தன்மை, சின்னம் முதலானவற்றையும் இந்நூல் விபரமாய்க் கூறுகின்றது. வலங்கை ஜாதியினருள் தொண்ணூற்றெட்டு உட்பிரிவுகளும் அதேபோன்று இடங்கை ஜாதியினருளும் தொண்ணூற்றெட்டு உட்பிரிவுகளும் ஆக நூற்றுத் தொண்ணூற்ருறு பிரிவுகள் உள்ளனவென்றும் கூறப்பட்டுள்ளது. நூலாரம்பத்தில் இப்பிரிவுகளின் பெயரட்டவணை யொன்றும் எழுதப்பட்டுள்ளது. அதன் பின்னர் கலியுகத்தாண்டு வந்த பரீக்ஷித்து முதலான 48 அரசர்களின் பெயரும் அவரவரது ஆட்சியின் வருஷ எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. "மேல் டில்லி அவுரங்க சேபு, பாதுஷா துரைத்தனம்" என்று முடிவில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னரே இடங்கை வலங்கை சாதியினரின் விரிவான வரலாறு கூறப்பட்டுள்ளது.

பனிரெண்டு, பதின்மூன்று, எழுபது ஆன பக்கங்கள் தவருக எழுதாது விடப்பட்டுள்ளனவேயன்றி விஷயம் ஒன்றும் அங்கு விடப்படவில்லை. ஆயினும் இந்நூல் முற்றுப்பெற்றதாக இப்பிரதியினின்றும் கூற இடமில்லை.

R. No. 1573

Paper. 10½ × 9½ inches. Foll. 6. Lines 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 100 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2762.

பகுளாரணிய மடவளாக ஈசுவரன் கோவில் தான சாஸனம்.

BAHUḶĀRAṆIYA MAḌAVAḶĀHA ĪSUVARAN KŌIL DĀNA ŚĀSANAM.

Complete.

Beginning :

ஸ்வஸ்தி ஸ்ரீமது மகாமண்டலேசுவர ஆறுவரைக்கண்ட * * * * * * * * * * * * * * வீரதேவ மகாராஜர் புவன பாண்டிய சோழ மகாராஜா பிருதிவீ ராஜ்ய பரிபாலனம் செய்யும் நாளில் கலியுகம்௪ ௬௲௩௱௮௰௫.

* * * *

End :

இவர்கள் அனைவருக்கும் மத்தியில் இந்த தான சாஸனம் எழுதின நன்மைக்கு ஸ்ரீமமேமேறு சிறைமீட்டார் ஏவல் கணக்கெழுத்து.

சூதரிஷி கோத்திரம், போதாயன சூத்திரம், பின்னலூர் ஏகாம்பர நயினார் கைஎழுத்து.

ஸ்ரீ திருவூரீசுவரர் கிரிஜா கன்னியம்மன் கடாக்ஷம் உண்டாகவும்.

ஸ்ரீராமஜெயம்.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2762-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். இத்துள் பகுளாரணியம் முதலான பனிரெண்டு தலங்களின் வரலாறும் எந்தெந்த தலத்தில் யார் யார் எந்தக் கடவுளை வழிபட்டுப் பலனடைந்தார் என்னும் செய்தியும் இத்தலங்களின்

அர்ச்சகஸ்தானீகரான திவாகரபட்டர் முதலானோர்க்கு சோழ வேளாள மண்டபக் கனகராயர் வமுசத்தவர் சிறைமீட்டார் எழுதிக்கொடுத்த தானப் பத்திரிகையின் விபரமும் கூறப்பட்டுள்ளன. இஃதுள் கூறப்பட்டிருக்கும் தலங்கள் யாவும் தொண்டமண்டலத்தைச் சார்ந்தவையென்பது தெரி கிறது. ஸாமவேதி தற்ம சிவாலங்காரபட்டர், யஜுர்வேதி சிலம்புறுத பட்டர், ருக்வேதி ராமா பட்டர், ?லகண்ட பட்டர் ஆகிய நால்வர் இத்தான சாஸனம் எழுதிக் கொடுத்ததற்கு சாக்ஷிகளெனவும் கூறப்பட்டிருக்கிறது. அச்சமயம் கூடவிருந்த வேறு ப ரின் பெயர்களும் காணப்படுகின்றன. முற்றுமுள்ளது.

R. No. 1574

Paper. 10½ × 9½ inches. Foll. 18. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 450 granthas.

Restored in 1946–47 from a MS. described under D. No. 2766.

காஞ்சி வரதர் கோயில் படித்தனக் கைபீது.

KĀNCI VARADAR KOIL PAḌITTANAKKAIPĪDU.

Complete.

Beginning :

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ வரதராஜ சுவாமியார் கடாக்ஷம்.

திருக்கோயில் சட்டம்.

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

செங்கற்பட்டு ஜில்லா, கஸ்பா காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜ சுவாமியார் சந்நிதியில் நித்தியப்படி பஞ்ச பருவம் மாச உத்ஸவம் பிரும்மோத்ஸவம் ஆழ்வாராச்சாரியார் சாத்துமுறை இவைகள் நடக்கிற வயணம் :—

* * * * *

End :

௩௨ நം௧ாம கோவிலிலே இருந்து தளிகை பணியாரம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு . . . . . னே வருகிறது. வந்து மண்டபத்தில் அந்தப் பிரசாதத்தை ஏளப்பண்ணுகிறது. திருத்திரை சமர்ப்பித்து ஸ்ரீ சுவாமி அமிசை செய்தருளுகிறது.

(கு.- பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2766-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். செங்கற்பட்டு ஜில்லாவைச் சார்ந்த காஞ்சீபுரமெனப்படும் தலத்தில் கோயிற்கொண்டிருக்கும் தேவராஜரென்னும் வரதராஜப் பெருமாளின் கோயிலில் நடந்துவரும், நித்தியப்படி பஞ்ச பருவம், ஏகாதசி, அமாவாசை, அஸ்தம், சிரவணம், சுக்கிரவாரம் முதலான மாச உத்ஸவம், திருமஞ்சனம், பிருமோத்ஸவம், ஆழ்வாராசாரியர்களது சாத்துமுறை போன்ற விசேஷங்கள் நடத்தப்படவேண்டிய முறையினையும் வைகளுக்கான செலவு முதலானவற்றின் திட்டங்களையும் ட்டமிட்டு அயிட்டம் வாரியாகத் திட்டமிட்டுக் குறித்துக் கூறுகின்றது இந்நூல். முடிவுற்றதாகக் கூறுவதற்கில்லை.

R. Nos. 1575–76 (one codex).

Paper. 10½ × 9½ inches. Foll. 12. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Extent, 70 granthas.

